Registered as a Newspaper in Srilanka

தமிழின் முதல்தர
வார இதழ்

# தீபம்

www.deepam.lk

விலை 20 ரூபா • தீபம் 36 • 27.03.2016

ஈஸ்வா
டிஜிற்றல் பிறஸ்
GRAPHICS
PRINTING
DESIGNS
DIGITAL | OFFSET |
SCREEN PRINTING
172, இராமநாதன் வீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

## ஒரு சூர்வாளின் நிழலில்

- விவாதம்

விரிவான செய்தி பக்கம் 6



# இரும்புத்திரைக்குப் பின்னால் இரணைமடு!

'போதைதுறைமுகம்' ஆகும் யாழ்ப்பாணம் 5

டக்ளஸ் தேவானந்தா பேசுகிறார் 9

வீடென்பது பிரியங்கள் சமைக்கின்ற கூடு 23

# 'எட்கா' ஏற்கலாமா?

இலங்கைக்கும் இந்தியாவிற்குமிடையில் செய்து கொள்ளப்பட திட்டமிடப்பட்டுள்ள 'எட்கா' என்ற பொருளாதார, தொழில்நுட்ப ஒத்துழைப்பு மாநாடு பற்றிய நியாயமான சந்தேகங்கள் பரவலாக எழுந்து கொண்டிருக்கின்றன. 'எட்கா' பற்றிய பரவலான சந்தேகங்கள் எழுந்து கொண்டிருக்கும் போதும், அரசும் அதை வெளிப்படையாக பேச தயங்குவதைப் போலத்தான் உள்ளது.

இந்த உடன்படிக்கை இலங்கைக்கு பாதிப்பையே அதிகம் ஏற்படுத்துமென்ற பரவலான எதிர்ப்பு எழுந்து கொண்டிருக்கிறது. அரசிலுள்ள ஒரு தரப்பினர், ஜே.வி.பி போன்றவர்களிட மிருந்தெல்லாம் எதிர்ப்பு வருகிறது. சிவில் சமூகத்திலிருந்தும் எதிர்ப்பு வருகிறது.

முன்னைய மகிந்த ராஜபக்ச அரசு 'சீபா' என்ற உடன்படிக் கைக்கு திட்டமிட்டது. 'எட்கா' போல இந்தியாவுடனான பொருளாதார உடன்படிக்கையொன்றுதான் 'சீபா'வும். ஆனால் அப்பொழுது 'சீபா'விற்கு கடுமையாக எதிர்ப்புக்கள் கிளம்பின. மகிந்த ராஜபக்சவிற்கு இருந்த ஓரளவு இடதுசாரிய பாரம்பரியம் மற்றும் 'தாய் நிலத்தின் புதல்வன்' என ஏற்படுத்திக் கொண்ட பிம்பங்கள் எல்லாம் 'சீபா'வை துணிந்து கைவிடவைத்தது.

மகிந்தவின் வீழ்ச்சிக்கு பின்னர் இப்பொழுது 'எட்கா' வருகிறது. இரண்டிற்குமிடையில் என்ன ஒற்றுமைகள் உள்ளது, என்ன வேறுபாடுகள் உள்ளதென்பதெல்லாம் இன்னும் உறுதியாக தெரியவில்லை. 'எட்கா' பற்றிய பகிரங்க வரை வெதுவும் வெளியாகவுமில்லை. இந்த உடன்படிக்கையை பற்றி தெரியாத வர்கள்தான் எதிர்க்கிறார்கள் என ஒற்றைவரியில் அரசு பதில் சொல்லும்போதும், உடன்படிக்கையை இன்னும் வெளியிடவில்லை.

'எட்கா' எதிர்ப்பார்களின் பிரதான வாதம் உள்நாட்டு உற்பத்தி வீழ்ச்சியடையும், வேலையின்மை ஏற்படும், வளங்கள் சுரண்டப்படும் என்பன. இந்தியாவிலிருந்து தொழில்த்தேர்ச்சி மிக்கவர்களை கொண்டு வந்து தொழில்முயற்சிகள் ஆரம்பிக் கப்படும் வாய்ப்பை அந்த உடன்படிக்கை வழங்கினால் இந்தக் குற்றச்சாட்டுக்கள் நியாயமானவைதான். இப்படியான திறந்த பொருளாதார உடன்படிக்கைகளில் அந்த வகையான எதிர்ப் பார்ப்புக்களை வல்லரசுகள் கொண்டிருக்கும்.

உலக வல்லரசுகள் வளங்கள் உள்ள இடங்களை தேடி தமது பொருளாதார வலயங்களை விஸ்தரிப்பதும், அயல் நாடுகளை தமது செல்வாக்கிற்குள் வைத்திருக்க முயல்வதும் உலகநியதி யாகிவிட்டது. இந்த பொருளாதார விஸ்தரிப்பில் பெரும்பாலும் வல்லரசுகளே பலனடையும். பெரிய தொழிற் சாலைகளை அமைக்க, உள்ளூரில் உள்ள தொழிலற்ற வர்களிற்கு தொழில் வழங்க, வளங்களை பெற்றுக்கொள்ள என பல்வகை பயன்பாடுகளை பெற்றுக் கொள்வார்கள்.

தொழில்தேர்ச்சி மிக்கவர்களின் வருகை இலங்கையிலும் தொழில்தேர்ச்சி போட்டித்தன்மையை உருவாக்கி, தொழில் தேர்ச்சி பரவலடையும் நல்ல வாய்ப்பும் ஏற்படலாம். ஆனால், தொழிலாளர்களை முழுமையாக இந்தியாவிலிருந்து கொண்டு வரும் ஆபத்தும் உள்ளது. அண்மையில் வடக்கில் முன்னெடுக் கப்படும் 65 ஆயிரம் வீட்டுத்திட்டம் வடக்கு உற்பத்தி துறைக்கு, தொழில்முயற்சியாளர்களிற்கு, தொழிலாளர்களிற்கு நேரடியான எந்த வாய்ப்பையும் வழங்காததையும் குறிப்பிட்டேயாக வேண்டும். இந்த படிப்பினைகளின் அடிப்படையில் செயற்படுவதே இலங்கையின் சுயபொருளாதாரம், மக்களிற்கு பலனுடையதாக இருக்கும்.

ஒட்டுமொத்த மக்களின் வாழ்விலும் செல்வாக்கு செலுத்த வல்ல இப்படியான உடன்படிக்கைகளை நிறைவேற்றும்போது பாராளுமன்றத்தில் அது பற்றிய விரிவான விவாதங்கள் நடத்தப்பட வேண்டும். தொழிற்சங்கங்கள், மக்களுடன் விரிவாக கலந்துரையாடப்பட வேண்டும். இந்த உட்ன்படிக்கை உள்ளூர் உற்பத்திகள், உள்ளூர் தொழில்முனைவோர், உள்ளூர் தொழிலாளர்கள் உள்ளிட்ட தரப்பினருக்கு கேடு விளைவிக்கா தெனில் அது பற்றிய பகிரங்க உத்தரவாதத்தை அரசு அவர்களிற்கு வழங்க வேண்டும்.

இதனை அரசு செய்யத்தவறினால், இந்த உடன்படிக்கை பற்றிய சந்தேகங்கள் உண்மையென்பதாகிவிடும். அத்துடன், அது நாட்டிற்கு ஆபத்தான ஒப்பந்தமாகியும் விடக்கூடும். அபிவிருத்தியென்பது நம்நாட்டில் வானுயர கட்டிடங்கள் எழும்புவதல்ல. அதன் பலன் ஒவ்வொரு குடிமகனிற்கும் சென்று சேர்வதே.

உள்ளூர் வளங்களை உற்பத்தி பொருட்களாக்கும்போது அதன் முழுப்பலனையும் சொந்த மக்களும், அரசும் அனுபவிக் கட்டும்.

**தீபம்**
211, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
☎ 0212216633

சந்தா : subs@deepam.lk
ஆசிரியர் பீடம் : editor@deepam.lk
விளம்பரம் : sales@deepam.lk
வேலைவாய்ப்பு : hr@deepam.lk
செய்திகளுக்கு : news@deepamnews.com

# சொன்னார்கள்



### மெக்ஸ்வல் பரணகம – ஆணைக்குழு தலைவர்

திருகோணமலையில் இரகசிய தடுப்பு முகாம்கள் இருந்ததாக எவருமே எமது ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்யவில்லை. முறைப்பாடு செய்திருந்தால் நாங்கள் அவ்வாறு இரகசிய முகாம்கள் இருந்ததாக கூறப்படும் இடங்களை பார்வையிட்டிருப்போம். ஜனாதிபதி ஆணைக்குழுவென்பது இந்த பிரச்சினை தொடர்பில் பரிந்துரைகளும் அறிக்கைகளையும் மட்டுமே வழங்குவதற்கு அதிகாரத்தை கொண்டுள்ளது. மாறாக பிரச்சினைகளை நேரடியாக தீர்ப்பதற்கு அதிகாரமும் வளமும் எம்மிடம் இல்லை.



### பா.அரியநேத்திரன் – முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்

அபிவிருத்தி என்பது மக்கள் தொகையிலும் தங்கியுள்ளது. ஒரு குடும்பத்தில் 5 பிள்ளைகள் தேவை என்பதை ஒவ்வொருவரும் கடைப்பிடிக்க வேண்டும் ஐந்து பிள்ளைகள் ஆனந்தமான குடும்பம் என்பதை ஒவ்வொருவரும் தாரக மந்திரமாக கொள்ள வேண்டும். இனத்தையும் மொழியையும் நிலத்தையும் கலாசார விழுமியங்களையும் நாம் பாதுகாக்க வேண்டுமானால் இனத்தின் பிறப்புவீதம் அதிகரிக்கப்பட வேண்டும். இரண்டு பிள்ளைகள் போதும் என்ற சிந்தனையைவிட்டு ஐந்து பிள்ளைகள் ஆனந்தமான குடும்பம் என்பதை எல்லோரும் உணர்ந்து அதை கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும். பாடசாலைகளிலும் மாணவர் தொகை குறைந்து செல்லுமானால் எதிர்காலத்தில் பல தமிழ் பாடசாலைகள் மூடவேண்டிய நிலை ஏற்படும்.



### வைகோ – ம.தி.மு.க பொதுச் செயலாளர்

இலங்கை தமிழர் தயன்ராஜை இலங்கைக்கு அனுப்பும் முடிவை கைவிட வேண்டும். இந்தியாவில் இலங்கை அரசின் ஆதிக்கம்தான் இன்னும் செயல்படுகிறதா? என்ற கேள்வி எழுகிறது. திருச்சி சிறப்பு அகதிகள் முகாமில் அடைக்கப்பட்டுள்ள தயன்ராஜ் என்ற ஈழத் தமிழ் இளைஞர் மீது இலங்கையில் சில குற்ற வழக்குகள் இருப்பதாகவும், அவரை இலங்கைக்கு அனுப்ப வேண்டும் என்று இலங்கை அரசாங்கள், இந்திய அரசைக் கேட்டுக்கொண்டதன் பேரில் அவரை பலவந்தமாக இலங்கைக்கு அனுப்ப இந்திய மத்திய அரசு முடிவு செய்துள்ளது. அதற்கு தமிழக அரசும் உடந்தையாக செயல்படுகிறது.



### சி.வி.விக்னேஸ்வரன் முதலமைச்சர்

வன்புணர்வானது போரின் ஆயுதமாகப் பாவிக்கப்பட்டு வருகின்றது. மகளிர் தினத்தை நாங்கள் கொண்டாடுவதற்குப் பல நல்ல காரணங்கள் உள்ளன. போர் நடக்கும் இடங்களில், போர் நடந்து முடிந்த வலயங்களில் பெண்கள் பாடு மிக மோசமாக அமைந்திருப்பதையும் நாங்கள் மறந்து விடக் கூடாது. போர்க்காலப் பாதிப்பு பெண்களுக்கே மிகக் கொடூரமாக அமைகின்றது. உலகெங்கிலும் போரினால் பாதிப்படைந்த பல பெண்கள் சமாதானத்தை முன்கொண்டு செல்லும் சாரதிகளாகவும் செயற்பட்டு வருகின்றார்கள். தமது கணவன்மார்களை, சகோதரர்களை, மகன்மார்களைப் போரில் பறிகொடுத்த பல பெண்கள் அந்த ஆண்கள் வகித்த இடத்தைத் தாமேற்றுப் பொறுப்புடன் வாழ்க்கையை ஓட்ட முன்வந்துள்ளார்கள்.



### வாசுதேவ நாணயக்கார நாடாளுமன்ற உறுப்பினர்

வட மாகாண சபைக்கு காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதை எதிர்க்கவில்லை. இலங்கையில் ஒற்றையாட்சி அரசியலமைப்பே உள்ளது. அதற்கமையவே தற்போது அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டுள்ளன. எனவே இந்த அதிகாரங்களை மேலும் பரவலாக்க வேண்டும். பலப்படுத்த வேண்டும். இதில் தவறில்லை. அதேவேளை வடக்கு, கிழக்கு உட்பட அனைத்து மாகாண சபைகளுக்கும் காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும்.



### வசந்தி அரசரட்ணம் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர்

யாழ்.பல்கலைக்கழகத்திலும் பெண்கள் மீதான பாலியல் துன்புறுத்தல்கள் இடம்பெறுகின்றன. இதனால் சில பேராசிரியர்களை பணி இடைநிறுத்தம் செய்துள்ளோம். சமுதாயத்தில் பெண்களுக்கு எதிராக ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்கு பெண்களும் ஒரு காரணமே. எனேனில் பெண்கள் தமக்கு ஏற்படுகின்ற நடவடிக்கைகளுக்கு ஒத்துச் செல்வதாகும். இச் செயற்பாடு தொடர்பாக ஆரம்பத்திலேயே பெண்கள் தெரிவித்திருந்தால் இப் பிரச்சினையை ஆரம்பத்திலேயே தடுத்து நிறுத்தியிருக்கலாம்.

# க்ளிக் பக்கம்

அமைதியாய் காட்ச்சி தரும் இயற்கை
அன்னையின் எழில்களை ரசிப்பவர்
யாரும் இன்றி சோகத்தோடு
மறைகின்றான் கதிரவன்.

**என்னைப்பற்றி:** இயற்கையின் எழில்களை படம் எடுப்பது என் பொழுதுபோக்கு.



படப்பிடிப்பாளர்:
ம.நியோகிதன்

இடம்:
கிளிநொச்சி



குறிப்பு: உங்கள் படங்களையும் அனுப்பி வையுங்கள் editor@deepam.lk





சூகிள் அண்மையில் இலங்கையில் ஏற்படுத்திய வீதிப்பார்வை வசதி இரண்டு மலைவிழுங்கி பொலிசாருக்கு ஆப்பாகியுள்ளது. குருணாகல் பன்னல பிரதேசத்தில் சாரதியொருவரை மறித்து இலஞ்சம் வாங்கிக் கொண்டிருந்ததை யாரோ ஒருவர் கண்டுபிடிக்க, இணையத்தளம் முழுவதும் காட்டுத்தீயாக பரவுகிறது.



கவிஞர் மகுடேசுவரன்
**www.facebook.com/magudeswaran.govindharajan**

கிரிக்கெட் விளையாட்டில் பயன்படுத்தப்படும் ஆங்கிலச் சொற்களுக்கு நிகரான தமிழ்ச் சொற்கள் :

| | | |
|---|---|---|
| Over | = | வீச்சலகு |
| Pitch | = | வீசுகளம் |
| Out | = | ஆட்டமிழப்பு |
| Wicket | = | முக்குச்சி |
| Middle Stump | = | நடுக்குச்சி |
| Out Swinger | = | வெளிநாட்ட வீச்சு |
| Inswinger | = | உள்நாட்ட வீச்சு |
| Maiden Over | = | வெற்றலகு |
| Wicket Maiden | = | வீழ்வெற்றலகு |
| Leg Side | = | கால்புறம் |
| Off Side | = | எதிர்ப்புறம் |
| Wicket Keeper | = | முக்குச்சிக்காரன் |
| Boundary | = | எல்லை |
| One Step Forward | = | முன்கால்வைப்பு |
| Square Cut | = | செந்திருப்பு |
| Run | = | ஓட்டம் |
| Bowler | = | பந்தாள் |
| Batsman | = | மட்டையாள் |
| All Rounder | = | முழுவல்லார் |
| Fielder | = | களத்தர் |
| Bouncer | = | எகிறன் |
| Hook Shot | = | கொக்கியடி |
| Sweep Shot | = | துடுப்பு வலிப்படி |
| Pull Shot | = | இழுப்படி |
| Straight Drive | = | நேர்செலுத்தடி |
| Yorker | = | நேர்க்கூர் எறி |
| Leg Spin | = | வெளிவிலகுச் சுழல் |
| Off Spin | = | உள்விலகுச் சுழல் |
| Sixer | = | ஆறடி |
| Four | = | நான்கடி |
| Century | = | நூற்றீடு |
| Half Century | = | அரை நூற்றீடு |
| Commentry | = | நிகழ்சொற்றி |
| Commentator | = | நிகழ்சொற்றியர் |
| Appeal | = | முறையீடு |
| Run Rate | = | ஓட்ட ஈட்டுகை |
| Asking Rate | = | வேட்பீட்டுகை |
| Attacking Shot | = | தாக்கடி |
| Attacking Field | = | இறுக்கக் களம் |
| Back Foot | = | பின்கால் |
| Bail | = | குருத்து |
| Duck Out | = | சுழிப்பலி |
| Doosra | = | பிறழ்சுழல் |
| Run Out | = | ஓடுபலி |



மன்னார் மாதர் அபிவிருத்தி ஒன்றியம் WUSC நிறுவனத்தின் அனுசரணையுடன் மன்னார் நகர சபை மண்டபத்தில் கடந்த வாரம் மகளிர்தின நிகழ்வை நடத்தியது.



மிகச்சிறிய வயதில் இலங்கை தமிழ்வார இதழ்களில் முதலிடத்தை தீபம் வாரஇதழ் பெற்றது சாதாரண விடயமல்ல. வாசகர்கள், சந்தாதாரர்கள், விளம்பரதாரர்கள் மற்றும் நேரடியாகவும் மறைமுகமாகவும் பங்களித்த எண்ணற்றவர்களினால் இது நிகழ்ந்தது. அச்சுப்பொருட்களின் அதிகரித்த விலையேற்றத்தின் மத்தியிலும் உருவ, உள்ளடக்கரீதியில் மிகதரமான வாரஇதழாக தொடர்ந்து வெளிவர சிறிய விலைஅதிகரிப்பை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகியுள்ளோம். வரும் வாரத்திலிருந்து 30 ரூபாவாக விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதற்கு அனைத்து தரப்பினரின் ஒத்துழைப்பையும் எதிர்பார்க்கிறோம்.

Home



**www.facebook.com/gopahan**

இன்று 25ம் திகதி ஒரு கிராம மக்களின் நீண்ட காலப் போராட்டத்திற்கான விளைச்சலை அறுவடைசெய்யும் நாள். மக்கள் சக்தியும் அதன் போராடும் திறனும் ஆட்சியாளர்களின் மனதை மாற்றும் அல்லது ஆட்சியையே மாற்றும். சம்பூர் விடயத்தில் இது தான் நடந்திருக்கிறது. இதற்கான போராட்டங்களில் மக்களுடன் தோள் நின்ற அனைவரையும் நாம் நன்றியுடன் நினைவு கூருவோம். சில நாட்களாக மக்கள் போராட்டக்குழுவின் பல ஊறுப்பினர்களும் இன்னும் பல எங்களைப் பின் தொடர்ந்து வருபவர்களும் (?) 25ம் திகதி ஏதேனும் ஒரு எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை செய்வோமா என்று கேட்டிருந்தனர். இன்றைய நாள் ஒரு போராட்ட வெற்றியிலே நாம் பங்கு கொள்கிறோம். இந்த மக்களின் முகாம் வாழ்க்கை இன்றுடன் முடியட்டும். ஆனாலும் மீள்குடியேறல் என்கிற கடின பாதையை கடக்க நாமும் சேர்ந்து முயற்சிப்போம். நாளை எல்லோரும் இணைந்து அனலுக்கு எதிராக போராடுவோம்.



**www.facebook.com/ahilan.nadarajah**

அவுஸ்ரேலியாவோ அமெரிக்காவோ பின்னால நாயக் கண்டா 'அடிக்'என்று விரட்டுறவன் தான் உண்மையான தமிழன்.
கரப்பான் பூச்சியக் கண்டா 'யம்மேய்' என்றலறி மேசையில் பாய்ந்தேறுபவள் தான் உண்மையான தமிழச்சி.
வாள்க தமில் வழர்க இங்கிளிஷ்



**www.facebook.com/thaj.azree**

பொதுவாக வயதான ஜோடிகளில் கணவன் இறந்த பிறகு பெண் சில வருடங்கள் வாழ்வதை அவதானிக்கலாம். ஆனால் மனைவி இறந்த பிறகு கணவன் நீண்டகாலம் வாழ்வது அரிதே!
ஒரு பெண்ணால் ஆண் துணையின்றி வாழ முடிந்தாலும் ஓர் ஆணால் துணையின்றி வாழ்வது மிக மிக கடினமானது.



**www.facebook.com/rimazahamed ·**

அடேய் முஸ்தபியுஸ் ரஹ்மான், நேத்து லாஸ்ட் போல் பேஸ் பண்ற மாதிரியாடா வந்த. என்னமோ 100 அடிக்கிறமாதிரி ஹெல்மட்டும் ஆர்ம் கார்டும் ஆளும். உண்ட வேல என்ன நடந்தாலும் ஓடுறது தான். அதகூட செய்யாம ரன் அவுட் ஆகிட்ட டா பரதேசி பரதேசி!!!



**www.facebook.com/eksaar**

கொழும்பில் எத்தன புலிய ஆமி புடிச்சிருக்கும். புலிக்கொடிய வெச்சிருந்த எண்டு கேள்விப்பட்டதுல்ல. இந்த மிஷிகாரன் மட்டும்தான் போற இடமெல்லாம் கொடியைக்கொண்டு செல்கிறான்

KIRUBAA LEARNERS
KIRUBAA LEARNERS
கிருபா லேணர்ஸ்
அரச அங்கீகாரம் பெற்ற கனரக
(A) சாரதிப் பயிற்சிப் பாடசாலை
நல்ல சாரதி எப்பொழுதும் வீதி ஒழுங்குப்பற்றி விழிப்புடன் இருப்பார்.
பெண்களாலேயே பெண்களுக்கு பயிற்சி வழங்கப்படும்.

NO.1 சாரதி பயிற்சிப் பாடசாலை
தலைமைக் காரியாலயம் : 226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4353 | 021 492 3200 | 077 722 5292

முகுந்தன் அருளானந்தப்பிரகாசம்



# இரும்புத்திரைக்குப் பின்னால் இரணைமடு!

இரணைமடுக்குளத்தில் அன்ரன் பாலசிங்கம் வந்திறங்கியபோது அவரை வரவேற்றவர் பிரபாகரன். இதற்காக அன்று இரணைமடுவில் ஒரு இரும்புத்திரை விரிக்கப்பட்டது. பாதுகாப்புக் கருதி இரகசியம் பேணுவதற்காக புலிகள் அந்தத் திரையை விரித்திருந்தனர். பாலசிங்கத்தை வரவேற்க பிரபாகரனோடு புலிகள் இயக்கத்தின் பிரதானிகள் மட்டும்தான் அங்கே அனுமதிக்கப்பட்டிருந்தனர். ஆனால் இந்தத் திரை ஒரு காலைப்பொழுதோடு அகன்றது.

புலிகள் இயக்கம் தோற்கடிக்கப்பட்ட பிறகு வன்னிக்கு விஜயம் செய்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ இரணைமடுவைப் பார்க்க ஆசைப்பட்டார். அன்ரன் பாலசிங்கம் வந்திறங்கியதும் அவரைப் பிரபாகரன் வரவேற்றதும் அந்த இடத்தில் அல்லவா! அதற்காக அவர் அங்கே போனபோது ஒரு திரை விரிக்கப்பட்டது. ஆனால், இந்தத் திரை மகிந்த ராஜபக்ஸ அங்கிருந்து சென்ற பின்னும் நீண்டகாலமாக அகற்றப்படாமல் இருந்தது. இரணைமடுவின் உரித்தாளர்களான விவசாயிகள் இரணைமடுவுக்குப் போக முடியாத அளவுக்குச் சில ஆண்டுகள் படையினரின் இரும்புத்திரைத் தடை நீடித்திருந்தது. விவசாயிகள் மட்டுமல்ல, குளத்தைப் பராமரிக்கும் நீர்ப்பாசனத்திணைக்களத்தின் அதிகாரிகளும் உத்தியோகத்தர்களும் கூட அங்கே செல்ல அனுமதிக்கப்படவில்லை. போதாக்குறைக்கு குளத்தின் வான்கதவுக்கு அண்மையில் இருக்கும் நீர்ப்பாசனத்திணைக்களத்தின் கட்டிடத்தொகுதியையும் படையினர் தம்முடைய பிடியிலேயே வைத்திருந்தனர். இப்பொழுதும் அந்தக் கட்டிடத்தொகுதி படையினரின் பிடியில்தான். படையினருக்கு ஆசீர்வாதம் வழங்கியபடி அருகிலே இருக்கிறார் "புதிய புத்தர் பெருமான்".

பிறகு, நீண்ட பெரிய முயற்சிகளின் விளைவாக இரணைமடுக்குளத்தை பார்க்கவும் பராமரிக்கவும் விவசாயிகளுக்கும் நீர்ப்பாசனத்திணைக்கள அதிகாரிகளுக்கும் அனுமதி கிடைத்தது. ஆனாலும் குளத்தைக் கண்காணிக்கப் படையினரும் பராமரிக்க நீர்ப்பாசனத்திணைக்களத்தினரும் சேர்ந்துதான் பணியாற்ற வேண்டும் என்ற மாதிரி பங்குடமையாக இரணைமடுக்குளம் கடந்த ஆறு ஆண்டுகளாக இருந்து வருகிறது. அதோடு சுற்றுலாப்பயணிகளுக்காக ஒரு சிற்றுண்டிச் சாலையையும் படையினர் நடத்தி வருகின்றனர்.



வடக்கின் மிகப் பெரிய நீர்த்தேக்கம் என்பதால் அதைப்பார்ப்பதற்காக நாடு முழுவதிலும் இருந்து பலரும் தினமும் வருகிறார்கள். கூடுதலாக வருகிறவர்கள் சிங்களவர்களே. அவர்களைப் பொறுத்தவரை அது அன்ரன் பாலசிங்கம்விமானத்தில்வந்திறங்கிய அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த நீர்த்தேக்கம். அங்கே பிரபாகரனும் நின்றிருக்கிறார். ஆகவே அதைப் பார்க்கத்தான் வேணும் என்ற ஆவலின் விளைவான கவர்ச்சி. இதற்குத் தோதாக குளத்தின் வான்கதவுக்கு அண்மையில் உள்ள சிற்றுண்டிச் சாலையில் பாலசிங்கம் வந்திறங்கிய, பிரபாகரன் அவரை வரவேற்ற படங்களையும் மகிந்த ராஜபக்ஸ குளத்துக்கு விஜயம் செய்த படங்களையும் காட்சிப் படுத்தியிருந்தனர். (புதிய ஆட்சியில் மகிந்த ராஜபக்ஸவின் படங்கள் அகற்றப்பட்டுள்ளன). அருந்தக் குளிர்பானங்கள். ஆசீர்வதிக்க, அருகில் புத்தர்.

> **“இரணைமடுவில் மீண்டும் விரிக்கப்பட்டுள்ளது ஒரு புதிய இரும்புத்திரை. அங்கே இப்பொழுது யாரும் கண்டபடி போக முடியாது. யாரும் எதையும் அறிய முடியாது. நீர்ப்பாசனத் திணைக்களத்தில் வேலை செய்கின்ற உத்தியோகத்தர்களுக்குக்கூட எல்லா விவரங்களையும் அறியும் அளவுக்கு அனுமதி கிடையாது.”**

இதெல்லாம் நிகழ்காலக் கதைகள். இப்பொழுது நடப்பதோ இன்னொரு புதிய கதை.

இரணைமடுவில் மீண்டும் விரிக்கப்பட்டுள்ளது ஒரு புதிய இரும்புத்திரை. அங்கே இப்பொழுது யாரும் கண்டபடி போக முடியாது. யாரும் எதையும் அறிய முடியாது. நீர்ப்பாசனத் திணைக்களத்தில் வேலை செய்கின்ற உத்தியோகத்தர்களுக்குக்கூட எல்லா விவரங்களையும் அறியும் அளவுக்கு அனுமதி கிடையாது. சில அதிகாரிகளின் முழுக்கட்டுப்பாட்டில் இரகசியக் கட்டுப்பாட்டில் குளம் இருக்கிறது. இதனால் விவசாயிகளின் கவலை மீண்டும் கூடியிருக்கிறது. குளம் விவசாயிகளுக்குரியதல்லவா. அதனால்தான் அவர்கள் கவலைப்படுகிறார்கள்.

அவர்களுடைய கவலைக்குக் காரணம், குளப்புனரமைப்பைச்செய்யும்போது அவர்களுடைய விவசாயச் செய்கை நிறுத்தப்படுகிறது. இப்பொழுது நடக்கும் புனரமைப்பு இரண்டு ஆண்டுகள் நீடிக்கும் என்பதால் இரண்டு போக சிறுபோகச் செய்கையை அவர்கள் கைவிட்டுத்தான் இந்தப் புனரமைப்பைச் செய்ய வேண்டியுள்ளது. மட்டுமல்ல, அடிக்கடி குளத்துக்கு நிதி ஒதுக்கப்படும் என்றுமில்லை. அதிலும் புனரமைப்புக்கு என பெருந்தொகை நிதி ஒதுக்கீடு என்பது நீண்ட இடைவெளிகளின் பின்னரே கிடைக்கும், ஆகவே கிடைக்கின்ற நிதியில் குளத்தை முறைப்படி புனரமைப்புச் செய்தாக வேணும். நினைத்த மாத்திரத்தில் எல்லாம் இந்த மாதிரிப் பெரிய குளத்தின் புனரமைப்பை அடிக்கடி செய்ய முடியாது. ஆகவேதான் அவர்களுடைய கவலை நியாயமாக உள்ளது.

ஆனால் விவசாயிகளின் கவலையைப் போக்கக் கூடியமாதிரி நிலைமை இல்லை. இந்தத் திட்டம் இரண்டு வகையானது. ஒன்று குளப்புனரமைப்பு. மற்றது குளத்துக்குக் கீழான வாய்க்கால்கள், விவசாய வீதிகள் மற்றும் பாலங்களின் புனரமைப்பு. இதில் குளங்களின் கீழான புனரமைப்புப் பணிகள் திருப்தியான முறையில் நடக்கவில்லை என்ற மனக்குறை விவசாயிகள் மட்டத்தில் உண்டு. இந்தப் பணிகள் கடந்த நான்கு ஆண்டுகளாக நடந்து வருகின்றன. எல்லாமே துண்டு துண்டாக ஒழுங்கற்ற விதத்திலேயே நடந்திருக்கின்றன. எந்த வீதியும் முறையாகப்போடப்படவும் இல்லை. புனரமைக்கப்படவும் இல்லை. திட்ட வரைவிலேயே பல இடங்களில் குறைபாடுகள் உண்டென்று கூறப்படுகிறது. குறிப்பாக கீழிருந்து மேல் நோக்கி வரையப்பட்டிருக்க வேண்டிய திட்டம், மேலிருந்து கீழாக வரையப்பட்டுள்ளது. இதனால்தான் இந்தத் திட்டம் தோல்வியைத் தழுவும் நிலை உண்டாகியது என்கிறார்கள் துறைசார் நிபுணர்கள். ஏன் இந்தத் தவறு நடந்தது என்றால், நடைமுறை அனுபவத்தையும் திட்ட வரைபில் எடுத்துக் கொள்ளத் தவறியதன் விளைவே என்கிறார்கள் அவர்கள்.

குளத்தின் கீழ் (Down scheme) வேலைகளில்தான் குறைபாடுகள் என்றால் இப்பொழுது குளப்புரமைப்பிலும் (Main scheme) அது மாதிரியான தவறு நடந்துவிடுமோ என்பதே விவசாயிகளின் அச்சம். ஆகவேதான் அவர்கள் குளப்புனரமைப்பை ஒரு திறந்த நிலைக் கண்காணிப்பில் நடப்பது நல்லது, அது ஒரு தவிர்க்க முடியாத அவசியம் என்று எண்ணுகிறார்கள். இந்த நிலையில் குளத்தின் புனரமைப்பைக் கண்காணிக்கக் கூடிய ஒரு திறந்த நிலைக் குழு அவசியம் என்பது விவசாயிகளின் நிலைப்பாடு. கூடவே அவர்களுக்கு இன்னொரு கவலையும் உண்டு.

இந்தக் குளத்தின் புனரமைப்பைக் கண்காணிக்கக் கூடியவகையில் அரசியற்

தொடர்ச்சி 8-ம் பக்கம்

# ‘போதைத்துறைமுகம்’ ஆகிறதா குடாநாடு?



எஸ்.என்.நிக்ஷன், சுட்டு

முழு இலங்கைக்கும் பெரும் அச்சுறுத்தலாக உருவெடுத்துள்ளது போதைவஸ்து. எல்லா மொழி நாளிதழ்களில் இப்பொழுது தவறாமல் இடம்பெறும் செய்தி போதை வஸ்து கடத்தல்காரர்கள் கைது, போதை வஸ்துகைபபற்றல்என்பது.முழுஇலங்கையின் எல்லா பிரதேசங்களிலும் போதைவஸ்து பற்றிய செய்திகள் வெளியானாலும், யாழ்ப் பாணம்தான் போதைவஸ்து கடத்தலின் தலைநகரம் என்பதே இப்போதைய அதிர்ச்சி தகவல்.

ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், இந்தியாவின் வடபகுதிகளிலிருந்து இலங்கைக்குள் கடத்தப்படும் போதைவஸ்து வர்த்தகத்தின் நுழைவாயிலும் யாழ்ப்பாணம்தான். இதனால்த்தான் குடாநாட்டின் தாராள விற்பனை பொருளாக மாறிவிட்டது போதைப்பொருட்கள். மொத்தத்தில் யாழ்ப்பாணம் ‘போதை நகரம்’ ஆகிவிட்டது.

மிகப்பெறுமதியான தூய ஹெரோயின், கேரளா கஞ்சா போன்ற போதைப்பொருட்கள் யாழ்ப்பாணத்திற்குள் கொண்டுவரப்பட்டு மற்ற இடங்களிற்கு நகர்த்தப்படுகிறது. இந்திய மீனவர்கள், வடக்கிலுள்ள சாதாரண தொழிலாளிகள் என்பவர்களை வைத்து உருவாக்கப்பட்டுள்ளது இந்த அபாய போதை வலையமைப்பு. பெரும்பாலும் அவர்கள்தான் போதைப்பொருட்களுடன் சிக்கிக் கொள்பவர்கள். பெரும் முதலைகள் மறைவிலிருந்து இந்த வர்த்தகத்தை இயக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

இலங்கைக்குள் போதைப்பொருளை கொண்டு வருவதற்கு கடத்தல்காரர்கள் உபயோகிக்கும் மார்க்கம் கடல். அது மிக சுலபமானது. அவ்வப்போது கடலில், கரையில் போதைப்பொருட்கள் சிக்கிக் கொண்டாலும், அது கடத்தப்படுவதில் மிகச்சிறிய வீதம் என்கிறது பொலிஸ் தரப்பு.

யுத்தகாலத்தில் கடல்மார்க்க போதைப் பொருள் கடத்தல் மிக ஆபத்தானது. சிரமமானது. அப்பொழுது விமானநிலையத்தினூடாகத்தான் கடத்தப்பட்டது. யுத்தம் முடிந்த பின்னர் விமானநிலையத்தில் போதைப்பொருள் கண்காணிப்பு இறுக்கமாக்கப்பட்டதும், கடலில் ஆபத்துக்கள் குறைந்த சாதகத்தை கடத்தல்காரர்கள் பயன்படுத்த தொடங்கினார்கள். விமானநிலையத்தினூடாக கடத்தல் நடந்த காலத்தில் கொழும்பை கலக்கிய போதை வியாபாரிகள் எல்லோரும் ‘றூம் போட்டு யோசித்து’ புதுபுது வழிகளில் போதைப்பொருள் கடத்தினார்கள். போதை மன்னன் வெலே சுதா கைது செய்யப்பட்டதன் பின்னர்தான் அவனது கடத்தல் உத்தியொன்று வெளியானது. பாகிஸ்தானில் இருந்து டிரக்ரர் இறக்குமதி செய்ததும், அவற்றின் கியர்பெட்டிகளை கழற்றிவிட்டு அதற்குள் போதைப்பொருட்களை நிரப்பி வந்ததும்.

இப்பொழுது இலங்கைக்குள் கடத்தப்படும் போதைப்பொருட்களில் 95 வீதமானவை கடல்மார்க்கமாகத்தான் கொண்டு வரப்படுகின்றன என்கிறார்கள். அவற்றில் 90 வீதமானவை வடக்கு கடற்பரப்புகளினூடாகத்தான் கொண்டு வரப்படுகின்றன என்ற புள்ளி விபரங்கள் அபாயத்தை வெளிச்சமிடுகின்றன. பெரும்பாலும் இலங்கைக்குள் கொண்டு வரப்படுவது கேரள கஞ்சாதான். கேரளாவிலிருந்து கொண்டுவரப்படும் கஞ்சா கன்னியாகுமாரி, இராமேஸ்வர மீன்பிடி படகுகளில் ஏற்றப்பட்டு இலங்கைக்கு கொண்டு வரப்படுகிறது.

ஜீ.பி.எஸ் போன்ற நவீன தொழில்நுட்பங்கள் போதைப்பொருள் கடத்தலிற்கும் நன்றாகவே கைகொடுக்கிறது. போதைப்பொருள் படகுகளும், இலங்கை படகுகளும் ஆழ்கடலிலேயே சந்தித்து ‘சரக்கை’ கைமாற்றுகிறன பொலித்தீன் பைகளால் நன்றாக பொதி செய்யப்பட்ட கஞ்சாப்பெட்டிகள் வலைகளால் சுற்றப்பட்டு, தோற்றம் மறைக்கப்பட்டு இலங்கை கரைகளிற்கு கொண்டு வரப்படுகின்றன. யாழ்ப்பாணத்தை சுற்றியுள்ள கடற்கரை பிரதேசங்கள்தான் கடத்தலின் மையம். அதிலும், மாதகல், வல்வெட்டித்துறை, பருத்தித்துறையை அண்டிய கடற்கரைகள்தான் கடத்தலின் சொர்க்கபுரியாக உள்ளன. அண்மை நாட்களில் மாதகல், பருத்தித்துறை கடற்பரப்பில் மட்டும் கைப்பற்றப்பட்ட ஹெரோயின் போதைப்பொருளின் இலங்கை மதிப்பு 18 கோடி! மாதகல் பகுதியில் கைப்பற்றப்பட்ட கஞ்சாவின் நிறை 400 கிலோகிராம்!!

மீனவர்கள் நேரடியாக சரக்கை கைமாற்றுவதோ, அடையாளமிடப்பட்ட இடத்தில் மறைத்து வைக்க இன்னொரு தரப்பினர் சென்று எடுத்து வருவது எல்லாம் அந்தந்த கடத்தல்குழுவின் திட்டத்தை பொறுத்தது.

கடற்கரைகளிலிருந்து ஊருக்குள் கொண்டு வரப்பட்டு மறைத்து வைக்கப்படும் போதைப்பொருட்கள் நாடு முழுவதும் எடுத்துச் செல்வது அடுத்த வலையமைப்பு. மரக்கறி வியாபாரம், வாழைக்குலை வியாபாரம், சுற்றுலா பயணிகள் போன்ற போர்வையில் செல்பவர்கள் நாடு முழுதும் நீளும் போதை வலையமைப்பின் இரத்தநாளங்கள்.

போதைப்பொருள் கடத்தலிற்கு மரண தண்டனை வரை கடுமையான தண்டனை வழங்கப்படுகிறது. ஆனாலும், இந்த வர்த்தகத்தில் புரளும் அளவுகணக்கில்லாத பணம் உயிரையும் பொருட்படுத்தாமல் ஈடுபட வைக்கிறது. கடற்தொழிலாளர்கள் ஆசைகாட்டப்பட்டு இந்த வர்த்தகத்தில் ஈடுபட வைக்கப்படுகிறார்கள் என்கிறார்கள் விசயமறிந்தவர்கள்.

இதேநிலைமை நீடிக்குமெனில் இன்னும் சிறிதுகாலத்தில் மொத்த இலங்கையையும் போதைப்பொருள் வியாபாரிகள் விலை கொடுத்து வாங்கும் நிலையும் உருவாகலாம். அதனை ஆரம்பத்திலேயே தடுக்கும் கடமை அரசுக்குண்டு. போதைப்பொருள் பாவனையால் நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதிக்கப்படும் குடும்பங்கள் பல்லாயிரம். இந்த பல்லாயிரம் குடும்பங்கள் பெருகி, விரைவில் யாரையுமே மிச்சம் விடாமல் பாதிக்கப்பட வைக்கும் என்பது நிச்சயம்.

நாட்டுக்கும் வீட்டுக்கும் கேடு விளைவிக்கும் போதைப்பொருள் வேண்டாமே!



**சில சோற்று பதங்கள்**

11.01.2016 யாழ்ப்பாணம் பொலிஸ் 300 kg கேரளகஞ்சா
20.01.2016 யாழ்ப்பாணம் பொலிஸ் 2 kg கேரளகஞ்சா
18.02.2016 யாழ்ப்பாணம் பொலிஸ் 26 kg கேரளகஞ்சா
20.02.2016 வல்வெட்டித்துறை பொலிஸ் 60 kg கேரளகஞ்சா
10.03.2016 பருத்தித்துறை பொலிஸ் 19.5 kg கேரள கஞ்சா
11.03.2016 வல்வெட்டித்துறை பொலிஸ் 2.82 kg ஹெரோயின்
16.03.2016 பருத்தித்துறை பொலிஸ் 10 kg கேரள கஞ்சா

இலங்கைக்கு கடத்தப்படும் போதைப்பொருட்கள் கேரளகஞ்சா, ஹெரோயின், அபின், பிறவுன்சுகர் என்பன அனைத்தும் இந்தியாவிலிருந்துதான் கொண்டு வரப்படுகின்றன.

மஞ்சுள டீ சில்வா
இளவாலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி

மாதகல் பகுதியிலேயே அதிகளவான போதைப்பொருள் கடத்தப்படுகிறது. இந்த வருடத்தில் கஞ்சா அகப்படவில்லை. ஹெரோயின் அகப்பட்டுள்ளது. போதைப்பொருள் கடத்தல் குற்றவாளிக்கு நீதிமன்றம் மரணதண்டனை வரை கொடுக்கும். இரண்டு கிராம் ஹெரோயினுடன் அகப்பட்டாலே அது பெரிய குற்றம். போதைப்பொருள் தடுப்பு பிரிவு பொலிசாரிற்கு மக்களின் ஒத்துழைப்பு நன்றாக கிடைக்கிறது. போதைப்பொருள் தொடர்பான விழிப்புணர்வு மக்கள் மத்தியில் அதிகரித்ததையடுத்து கடத்தல் பற்றிய தகவல்களை மக்கள் உடனுக்குடன் அறிவிக்கிறார்கள். அந்த மக்களுக்கு நன்றிகூற கடமைப்பட்டுள்ளோம்.

விழிப்புணர்வு நடவடிக்கைகளை பாடசாலை, பொது இடங்களில் நடத்துகிறோம். கடல்வழி கடத்தலை முறியடிக்க ‘சீ கோப்ஸ்’ என்ற பொலிஸ் கடற்படை பிரிவை அமைப்பதுதான் சிறந்ததென்பது என் கருத்து.

யாழ்குடாவிற்கு கொண்டு வரப்படும் போதைப் பொருளில் ஒரு பகுதி பிற பிரதேசங்களிற்கு கொண்டு செல்லப்பட, கணிசமானது குடாநாட்டிற்குள்ளேயே விற்பனையாகிறது. பெட்டிக்கடைகள், இரவில் பேக்கரி உற்பத்தி பொருட்கள் விற்பனை செய்பவர்களில் இருபகுதியினர் இந்த விற்பனையில் முக்கியமானவர்கள். சில வீடுகளிலும் விற்பனையாகின்றன.

கேரள கஞ்சா மற்றும் ஹெரோயின் என்பனவற்றை குறிக்க பல சங்கேத வார்த்தைகளையும் யாழ்ப்பாணவாசிகள் பயன்படுத்துகிறார்கள். பெட்டி, பொடி, பொட்டலம், ஆத்தல், கூடு, கயிறு, கொன்டி போன்ற சங்கேதவார்த்தைகள் கஞ்சாவை குறிக்க பயன்படுகின்றன. பிரதேசத்துக்கு பிரதேசம் பெயர்கள் மாற்றமடைகின்றன. அதுபோல ஹெரோயினுக்கு முள்ளு, நாகம், பொட்டு போன்ற சங்கேதப்பெயர்கள்.

இந்த போதைப்பொருள் வரத்து உள்ளூர் போதைப்பொருள் உற்பத்தியாளர்களிற்கும் உற்சாக ‘ரொனிக்’ கொடுக்க அவர்களும் கற்றவித்தைகளை எல்லாம் மொத்தமாக காட்டுகிறார்கள். மாவா, சாதா, மதனமோகம், கோடா போன்ற உள்ளூர் போதைப்பொருட்கள் கடைகளிற்கு தாராளமாக வர ஆரம்பித்துள்ளன. பாடசாலை மாணவர்களை குறிவைத்து இறக்கப்பட்டுள்ள கொடிய விசப் பாக்குகள் இவை.

பிரபல்யமான பாடசாலைகளிற்கு அருகில் உள்ள வெற்றிலை கடைகள், பெட்டிகடைகளில் உள்ளன. இவற்றை வாங்க பெரிதாக சிரமப்பட வேண்டியதில்லை. கடைகளிற்கு போய் அவற்றிற்கான சங்கேத வார்த்தைகளை சொன்னால் போதும், கையில காசு. வாயில பாக்கு.

பாடசாலைகளுக்கு அருகில் உள்ள பெட்டிக் கடைகளில் பொலிசாரின் கண்காணிப்பு பார்வை விழுந்த பின்னர் அதில் சற்று மாற்றம் ஏற்பட்டுள்ளது.

எனினும், போதைத்துறைமுகமாகும் குடாநாட்டின் இதே நிலை நீடிக்குமெனில் எதிர்கால இளைஞர்களில் முக்கால்வாசிக்கும் அதிகமானவர்கள் ஒருமுறையாவது போதையை பரீட்சித்து பார்ப்பார்கள் என்றும், அது போதைப்பாவனையாளர்களை அதிகரிக்கும் என்றும் சமூக ஆர்வலர்கள் எச்சரிக்கிறார்கள்.






# ஒரு கூர்வாளின் நிழலில்

## - விவாதம்

சிங்களத்தில் ஒருபழமொழி உண்டு "பதவி இருக்கும் போது மூளை இல்லை, மூளை இருக்கும் போது பதவி இல்லை" முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தொடர்பான கட்டுரை ஒன்றிலேயே இப்பழமொழி சுட்டிக் காட்டப்பட்டது. இன்றோ இது இரு இனத்தவருக்கும் பொருத்தமாகக் காணப் படுகிறது.

பேனா தூக்கியவர்கள் தங்களது மனச் சாட்சியின் குரலைப் பதிவு செய்ய வேண்டும் என்பது நியாயமே. ஆனால் அதற்கு முன்னதாக "இந்தப் பேரழிவுக்கு நான் எந்த வகையில் பங்காளி? நான் வேறுமாதிரி முடிவெடுத்திருந்தால் எத்தனைபேர் காப் பாற்றப்பட்டிருப்பர்" என்பதையும் சிந்தித் திருக்க வேண்டும். ஒருவரின் நடத்தையால் அவரது பதவிக்குப் புகழ் ஏற்படுகிறது. உதாரணம் பரதன். இது ஒருவகை. மற்றது பதவியால் ஒருவருக்கு புகழ் ஏற்படுகிறது. இரண்டாவது வகையினருக்கு பதவியின் பெருமையையோ, புகழையோ தொடர்ந்து காப்பாற்ற முடியாமல் போய்விடுகிறது. வானத்தைப் பார்த்துத் துப்பும்போது தமக்கு அந்த எச்சில் படாமல் போய்விடும் என்பது அவர்கள் கணிப்பு."தலைவர், பொட்டம்மான், தமிழ்ச்செல்வன் போன்றோர்தான் இந்த அவலத்திற்குக் காரணகர்த்தாக்கள். நாங்கள் சுத்தமான சூசைப்பிள்ளைகள்" என்று நிறுவப் படாதபாடு படுகின்றனர்.

உயிரோடு இல்லாதவர்களின் நல்ல பண்பு களை மட்டுமே பேசவேண்டும் என்பது பொதுவான நியதி. ஆனால் அவர்கள் பெயரில் சில கருத்துக்கள் வெளிவரும்போது மனச்சாட்சி உள்ளவர்கள் தமது மௌனத்தைக் கலைக்க வேண்டி ஏற்படுகிறது.

கட்டாய ஆட்சேர்ப்பு என்பது எவருமே விரும்பி மேற்கொண்ட முடிவல்ல. அதில் நிறையத் தவறுகள் நிகழ்ந்தனதான். அந்த நடைமுறைத் தவறுகளை நீக்க பதவியில் இருந்த தான் எடுத்த நடவடிக்கை பற்றியோ, மக்களின் வெளியேற்றம் தொடர்பான விடயத்தில்தான் எப்படி நடந்து கொண்டார் என்பது பற்றியெல்லாம் சிந்தித்திருந்தால் தனது ஒரு கூர்வாள் என்னும் நூலில் மற்றவர்களை நோக்கி விரலை நீட்டியிருக்க .மாட்டார் தமிழினி.

"வெற்றிமனை" இது மனநிலை பிறழ்ந்த பெண்களைப் பராமரிப்பதற்காக ஏற்படுத்தப் பட்ட நிறுவனம். இதன் பயனாளிகள் எந்த வகையிலும் போராட்டத்துக்குப் பங்களிப் புச் செய்ய முடியாதவர்கள். சுதந்திரபுரம் வரை கப்பலில் ஆட்களை ஏற்றக்கூடியதாக இருந்தது. இதற்குப் பின்னர்தான் மேலதிக சிகிச்சைக்கு உட்படுத்த வேண்டியோர் தொகை அதிகரித்தது. கப்பலில்இடமில்லா மல்போனது. வெற்றிமனைப் பயனாளிகளைக் கப்பலில் அனுப்பினால் அவர்களைப் பொறுப்பெடுக்க அருட்சகோதரிகள் தயாராக இருந்தனர். இதற்கான ஏற்பாடுகளை கிளி நொச்சி, மற்றும் முல்லைத்தீவு அரச அதிபர்கள் கட்டாயம் செய்து கொடுத்திருப்பார்கள்.

"நான் உயிரோடு இருக்கும்வரை கடைசி வரை உங்களைக் காப்பாத்துவன் " இதுவே தமிழினியின் சபதம். எறிகணைகள், விமானக் குண்டுவீச்சுக்களை இவர் காலால் உதைத்துத் தள்ளிவிடுவாரா? அவர்கள் இந்த அவலங் களில் சிக்கி உயிரிழந்து, காயமடைந்து போனதற்கும் பொட்டு, தலைவர்தான் காரணமா? சூழ்நிலைக்கு ஏற்றபடி முடி வெடுக்கும் ஆற்றல் இவருக்கு வராமல் போன தற்கு காரணம் என்ன? விடை மிக எளிமையானது.

இயக்கத்தில் படிப்படியான வளர்ச்சி மூலம் இப்பதவியை இவர் அடையவில்லை. நன்றாக பேசத் தெரிந்தவர் என்ற தகுதி ஒன்றே லிப்ட் போல் இவருக்கு உதவி இருக்கிறது. இந்திய ராணுவகாலம் போல் நெருக்கடியான காலகட்டங்களில் தலைமறைவு வாழ்க்கையை இவர் அனுபவித்து அறியாதவர். 1990 இன் பின்னரே சகல வசதிகளையும் இயக்கம் செய்துகொடுக்கும் காலகட்டத்திலேயே இவர் இயக்கத்துக்கு வந்தவர். அதனால்தான் வரலாற்றின் போக்கையும் தான் விரும்பியபடி மாற்ற முனைந்தவர். வரலாறு என்பது நடந்து முடிந்த விடயம். தனியொருவரின் விருப்பப்படி. அதனை மாற்ற முயல்வது மிக மோசமான விடயம்.

1986-ம் ஆண்டில் மன்னார்தீவு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் சிலதினங்கள் இருந்தது. படைமுகாங்கள், பொலிஸ் நிலையம், புலிகளால் முற்றுகை இடப்பட்டிருந்தன. விடுதலைப் புலிகளின் மகளிர் படைப் பிரிவினர் முதன் முதலாக களமிறங்கப்பட்ட சமர் இது. பயிற்சி முடித்து தமிழகத்தி

**விடுதலைப்புலிகளின் அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி எழுதியதாக கூறப்படும் 'ஒரு கூர்வாளின் நிழலில்' நூல் பற்றிய ஒரு குறிப்பு இது. அந்த அமைப்பின் மிகமூத்த செயற்பாட்டளரொருவர் எழுதியது. கூர்வாளின் நிழலின் இன்னொரு பகுதியையும் இது வெளிச்சமிடுகிறது. இது தொடர்பான எதிர்வினைகள் இருப்பின் தாராளமாக அனுப்பி வைக்கலாம். ஆ-ர்**

சோபாசக்தி என்பவரும் புதிய தலைமுறையில் சாத்திரி என்ற பெயரில் எழுதுபவரும் புலிகள் மீது சேறுபூசும் பணியைத் தொடர்ந்து வருகின்றனர். இதில் சோபாசக்தி இறுதி யுத்தத்திற்கு முன்னரே புலிகளுக்கு எதிராக எழுதி வருபவர். சரியோ பிழையோ அவரது விமர்சனத்தை ஏற்கலாம். சாத்திரியோ கற்பனைகளைத் தாராளமாகக் கட்டவிழ்த்துவிடுகிறார். அக்டோபரில் யாழ் பழையபூங்காவில் இந்தியப்படையினருடனான மோதல் தவிர்க்க முடியாதது எனப் போராளிகள் மத்தியில் விளக்கமளித்தார் பிரபாகரன். இந்தச்சந்திப்பில் மட்டக்களப்பைச்சேர்ந்தபிரான்சிஸ், சபேசன்ஆகியோர்மட்டுமேதமதுசந்தேகங்களைக்கேட் டனர். ஆனால் சாத்திரியோதான் மட்டுமே அவரிடம் கேள்வி கேட்டதாக கதையளந்துள்ளார். இயன்றவரை போராட்டத்தைக் கொச்சைப்படுத்தி வருகிறார். சொர்ணம் பற்றிய கருத்துக்கள், புலம்பெயர்நாடுகளில் நடந்த அகிம்சைப் போராட்டங்கள் பற்றி யகுறிப்புக்கள் இதற்குஉதாரணம்.

"இறுதி யுத்தத்துக்காகச் சேகரிக்கப்பட்ட பலமில்லியன் யூரோக்களில் ஒருசதம் கூட வன்னிக்கு அனுப்பப்படவில்லை. அவை அனைத்தும் வெளிநாடுகளில் நிதிசேகரித்தவர்களலேயே அமுக்கப் பட்டது என்பது யுத்தத்திற்குப் பிறகான வேறுகதை" என்றும் அவர் குறிப்பிடுகிறார். மக்களிடம் கடனாகச் சேகரித்து தமக்குப் பொறுப்பானவர்களிடம் பணத்தை ஒப்படைத்த பலர் இன்றும் இரவுபகலாக உழைத்துப் படிப்படியாக இக்கடனை ஒப்படைத்து வருகிறார்கள். யார்யாருக்குஇந்தஅவலம் நேர்ந்தது என்பதெல்லாம் காலையில்யோசித்தால்தான் அவருக்குப்புரியும்.

குறிப்பாகஒருயோகிபோன்றவாழ்வைவாழ்ந்த சுவிஸ்குலம்அண்ணையையும்இந்தப்பட்டியலில் சேர்த்தது அபாண்டம். "அன்னை பூபதி கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர் இதனாலேயோ என்னமோ கொஞ்சம் கொஞ்சமாக பூபதி பெயர்மறக்கடிக்கப்பட்டு திலீபன் மட்டுமே நினைவுகளில் கடத்தப்பட்டுக் கொண்டுயிருக்கிறார்" எனக் குறிப்பிடுவது விசமத்தன மானது. பிரிவினையை ஏற்படுத்த வேண்டுமென்ற உள்நோக்கத்துடன் எழுதப்பட்ட கூற்று வேதனை என்னவென்றால் திலீபன் போன்ற அற்புதமான போராளிகளுடன் பழகிய ஒருவரிடமிருந்து இத்தகைய கூற்றை எதிர்பார்க்கவில்லை. இது புலிகளின் போராட்டம் என்று கொச்சைபடுத்தியவர்களின் கருத்தை மறுதலித்து இது மக்களின் போராட்டம் என்று உலகுக்கு உணரவைத்தவர் அல்லவா அன்னைபூபதி. உணர்வுகளால் ஒன்றுபட்டுள்ள எமது மக்களின் மன நிலையை குழப்பும் நடவடிக்கைகளை கைவிட வேண்டும் என்பது எமது தாழ்மையான கருத்து .

யானை விழுந்தால் எலியும் ஒரு உதை கொடுக்கும் என்பார்கள். இங்கு விழுந்திருப்பதோ புலி.எனவே சருகுபுலிகளும் பூனைகளும்விறாண்டிப்பார்க்கும்தான். போராட்டத்தின் முடிவு வேதனையானது. எனினும் சந்தர்ப்பவாதிகளையும், உண்மையா னவர்களையும் இனம்காட்டியுள்ளது. நாம் உண்மையைத் தேடுவதில் அன்னமாக இருக்க வேண்டும். பாலில் தண்ணீர் கலந்திருந்தால் நீரை விட்டுவிட்டு பாலை மட்டும் பருகுமாம் அன்னம். இங்கே உண்மை என்னும் விளாம்பழத்தை விழுங்கிவிட்டு கோதை லத்தியில் போடும் யானைகளாக சிலர்இருக்கிறார்கள்.

வெறும் கோதை உண்மையென நம்புபவர்கள் நம்பலாம் யானையின் வயிற்றுக்குள் சமிபாடடைந்துவிட்டது. விளாம்பழத்தின் உள்ளுடன் என்று உணந்தவர்கள் அமைதியாக இருக்கலாம்.

லிருந்து மன்னாருக்கு இந்த மகளிர் படைப் பிரிவினர்கள் அனுபவத்தை வழங்கும் முகமாகவே மன்னார் தளபதி விக்டர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டார். அவரது இலக்கு அது மட்டுமே. மன்னார்தீவு முழுவதையும் தமது கட்டுப்பாட்டில் தொடர்ந்து வைத்திருக்க வேண்டுமென்பது அவரது நோக்கமல்ல. ஆனால் படையினர் இந்த நடவடிக்கை குறித்துப் பெரிதாகவே கணக்கிட்டனர். ஏனெனில் அக்கால கட்டத்தில்கிட்டுவைப் போலவே விக்டரும் படையினருக்கு அச்சமூட்டுபவராக இருந்தார். அதனால் பாரிய ஏற்பாடுகளுடன் மன்னாரை நோக்கி விரைந்தனர். உடனே

“எல்லாப் போராளி களுமே மக்கள் மத்தியில் இருந்துதான் தோன்றியவர்கள். யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு வேதனையை மனதில் சுமந்தபடி நடைப்பிணமாக உலவுகின்றனர் மற்றவர்கள். இருக்கும்வரை சகலவற்றிலும் பொறுப்பாக இருந்துவிட்டு இப்போது மனச்சங்கடத்தில் இருந்தேன் என்றால் புரிந்து கொள்வது சிரமம்.”

பெண் போராளிகளை விக்டர் களத்தி லிருந்து அப்புறப்படுத்தினார். அடுத்து ஆண் போராளிகளும் தமது முன்னைய கடமைகளைப் பொறுப்பேற்க அனுப்பி வைக்கபட்டனர்.

"மகளிர் படையினரின் முதல் தாக்குதல் களம் அடம்பன். இதனை முற்றுகையிட வந்த படையினர் விரட்டியடிக்கப்பட்டனர். இருவர் உயிருடன் பிடிபட்டனர். உயிர் இழந்த படையினரின் சடலங்களை யாழ். கோட்டை முகாமுக்கு கொண்டு சென்று கையளித்தனர் புலிகள். இந்த சாதனைச் சமரிலேயே விக்டர், ரோம் ஆகியோர் வீரச்சாவடைந்தனர்." இதுதான் தமிழினி அரசியல் பணியாற்றிய பெண் போராளிகளுக்கு எடுத்த வகுப்பு.

இதற்கமையவே ஒலி, ஒளிக்காட்சிகள் ஒழுங்குபடுத்தப்பட்டன. இச்சமரைக் காட்சிப்படுத்தும் போது "கச்சேரி மன்னார்" எனக் காணப்படும் பெயர்ப்பல கையொன்றின் முன்னால் பெண்போராளி ஒருவர் காணப்படுவார். மன்னார் கச்சேரி யென்பது மன்னார்தீவிலேயே உள்ளது. ஒரு பொய்யைக் கூறும்போது உண்மைக் குச் சாட்சியமாக இருப்பவற்றை வெளிப்படுத் தப்கூடாது. என்பதுகூட தெரியாது? பலரும் வரலாற்றை மாற்ற வேண்டாம் என எழுத்து மூலமும் நேரிலும் இவருக்கு வேண்டுகோள் விடுத்தனர். அந்த நேரத்திலும் தவறுகளை ஒப்புக் கொள்ளத் தயாரில்லை. மகளிர் படையினரின் முதல் தாக்குதலிலேயே இரு படையினரை உயிருடன் பிடித்த தாகக் கூறுவதைதான் பெருமை என அவர் முடிவெடுத்தார். இவ்வாறான மனநிலை யில் பதவிவகித்தவர் எந்த அவலத்துக்குமே தான் பொறுப்பே இல்லை. மனச்சங் கடத்துடன்தான் இருந்தேன் எனக் கூறுவதை எந்தவகையில் ஏற்பது?

கட்டாய ஆட்சேர்ப்பின்போது ஏற்பட்ட மனத்தாங்கல்களையும் குறிப்பிடுகிறார். இளங்குமரன் எல்லோரும் அறிந்த ஒரு போராளி. தமிழகத்தில் தலைவர் கைதான போது அங்கிருந்த அனைத்துப் போராளி களுமே கலங்கினர். தலைவரைப் பொறுப் பேற்க இலங்கையிலிருந்து பொலிஸ் அதிகாரிகள் குழு விரைகிறது என்று செய்தி வெளியானது. ஏற்கெனவே கருணாநிதியின் ஆட்சிக்காலத்தில் தமிழகத்தில் கைதான குட்டிமணி ஸ்ரீலங்கா பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தார். "இந்தநிலையில் தலைவரை ஸ்ரீலங்கா பொலீசாரிடம் ஒப்படைக்ககூடாது என்னும் கோரிக்கையை முன்வைத்து சென்னையில் உள்ளஎ ல் .ஐ .சி கட்டடத்தின் உச்சியில் இருந்து விழுந்து சாகப்போகிறேன்" என்றார் சீலன். "இல்லை அதை நான்தான் செய்ய வேண்டும்" என அடம்பிடித்தார் பொன்னம்மான். இதை அறிந்த இளங்குமரன் "எல்லாரும் பேசாமல் இருங்கோ. தம்பிக்கு ஒண்டும் நடக்க விடமாட்டன். என்னை நம்புங்கோ" என்றார். நெடுமாறன், காளிமுத்து என பல்வேறு தரப்பினர்மூலமும்எம்.ஜி.ஆருடன்தொடர்பு கொண்டு நிலைமையை வெற்றிகரமாகச் சமாளித்தார். ஸ்ரீலங்கா பொலீசார் எட்டிநின்று பார்த்து விட்டுபோகலாமே

தவிர பிரபாகரனை விசாரிக்க முடியாது என்ற நிலைப்பாட்டை எம் .ஜி .ஆர் எடுக்க காரணமானவர் அவர். புலிகளைத் தவிர்த்து ஏனையோருக்கு இந்திய அரசு பயிற்சி கொடுக்க முற்பட்டபோது எந்தவழியில் அணுகவேண்டுமோ அந்தவழியில்அணுகி 200 பேருக்கு இந்தியப்படையினரின்பயிற்சியும், மேலும் சிலருக்கு வெடிகுண்டுப் பயிற்சியும் பெற ஏற்பாடு செய்தவர். இயக்கத்தில் தலைவருக்கு அடுத்த மூத்தபோராளி அவர். அப்படிப்பட்டவரின் மனைவி வெற்றிச்செல்வியை கட்டாய ஆட்சேர்ப்பில் ஈடுபடுத்தியவர்தான் இந்தத்தமிழினி. நல்லவேளை மதிவதனி இயக்க உறுப்பினராக இருக்கவில்லை இருந்திருந்தால் அவரையும்கட்டாய ஆட்சேர்ப்புப் பணியில்ஈடுபடுத்தி இருப்பார் இவர்.

பதவி என்ற கறுப்புக்கண்ணாடி பல விடயங்களை மறைத்தது.முதல் அணியிலேயே பயிற்சி பெற்ற (1985) பெண்போராளிகளில் யாராவது மகளிர் அரசியல்துறைப் பொறுப் பாளராக இருந்திருந்தால் இப்படித் தான் தோன்றித்தனமாக நடந்திருக்கமாட்டார்கள்.

நடந்த விடயங்கள் அனைவருக்குமே வேதனையானவைதான். எல்லாப் போராளி களுமே மக்கள் மத்தியில் இருந்துதான் தோன்றியவர்கள். யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு வேதனையை மனதில் சுமந்தபடி நடைப்பிணமாக உலவுகின்றனர் மற்றவர்கள். இருக்கும்வரை சகலவற்றிலும் பொறுப்பாக இருந்துவிட்டு இப்போது மனச்சங்கடத்தில் இருந்தேன் என்றால் புரிந்து கொள்வது சிரமம். இவர்தனது பதவியை விட்டுவிலகப் போவதாக சொன்னதாக எவரும் அறிய வில்லை .

புலிகள் குறித்த விமர்சனத்தை ஒருபொதுமகன் மகன் வைப்பது ஏற்புடையது ஆனால் இவர் கூறுவதை ஏற்பது சிரமம் " நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத் திறனுமின்றி வஞ்சனை செய்வாரடி கிளியே வாய்ச் சொல்லில் வீரரடி" என்ற பாரதியின் வரிகள்தான் நினைவுக்கு வருகிறது .

மொத்தத்தில்யாருடையதோஎதிர்பாப்புக் களைஇவரதுஎழுத்துவெளிக்கொணர்ந் துள்ளது.என்றேகொள்ளவேண்டியுள்ளது. என்னதான் இருந்தாலும் சதாம் ஹுசையின் போலவோ , கடாபிபோலே வாபிரபாகரன்பொட்டுஆகியோரதுஇழப்பு க்கள் அமையவில்லை.சரிபிழைக்குமேலாக இன்னும் அவர்களை நேசிக்கிறது ஈழத்தமிழினம். ஆட்சேர்ப்பில் இணைக்கப் பட்ட பெண் பிள்ளைகளின் முடிவெடி யதன் சரணடைய முடியாத நிலையை ஏற்படுத்திவிட்டு நீளக்கூந்தலுடன் சரணடைந்தவர் இவர். அதனால்தானோ என்னவோ இறைவன் நோயின் வடிவில் இவரது கூந்தலை எடுத்துவிட்டார் என்று எழுதும் நிலை வந்ததற்காக எம்மைநாமே நொந்துகொள்கிறோம் .

நீண்டகாலம் தவமிருந்து ஒரு குழந்தையைத் பெற்றெடுத்தாள் அன்னை. எனினும் அக்குழந்தை வாய் பேச முடியாதது என்பது



புதிதாக அவளுக்கு ஏற்பட்ட கவலை. கோயி லெல்லாம் நேர்ந்தாள். எப்போது என் குழந்தையின் குரலைக் கேட்போம் எனத்த வித்தாள். அதிசயமாக அந்தக்குழந்தைஒருநாள் பேசியது. மழலையாக, திக்குத்திணறி, தடு மாறிப் பேசத்தொடங்கவில்லை. நேரடியா கவேதனது சந்தேகத்தை, கருத்தை வெளிப்படுத் தியது "அம்மா நீ எப்போ தாலியறுப்பாய்?"

அதிர்ந்துபோன அந்தத்தாய் இந்தப் பிள்ளை ஊமையாகவே இருந்திருக்கலாம். ஏன் நான் மலடியாகவே இருந்திருக்காலம் என்றுசொன்னாளாம். இந்தக் கதைதமிழ்ச் சந்திரிகாவுக்குமிகப்பொருத்தம்.



மக்கள் குரல்



மலையகத்தின் நீர்வளம் இலங்கை முழு வதும் பல்வேறு பகுதிகளில் விற்பனை யாகிக் கொண்டிருக்கிறது. எனினும், மலைய கத்தின் பல்வேறு பகுதிகளிலும் இன்னும் சுத்த மான நீர் கிடைக்காமல் மக்கள் சிரமப் படுகிறார்கள்.

நீரின்றி அல்லாடும் கிராமங்களில் ஒன்றே பூண்டுலோயா மடக்கும்புர கீழ் பிரிவு தோட்டம். அங்கு வாழும் 85ற்கும் மேற்பட்ட குடும்பங்கள் ஒரே குழாயில் வரும் நீருக்காக பாத்திரங்களுடன் காத்திருக்கும் துயரம் இன்றும் தொடர்கிறது.

இதில் வேடிக்கையான முரண் என்ன வெனில், இந்தப் பகுதியில் அதிகமான ஊற்று நீர் காணப்படுகின்றது. சுத்தமான குடிநீரை பெற்றுக்கொள்ள அதிக வாய்ப்புகள் உள்ளன. என்றாலும், மக்களிற்கு அந்த வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கும் எண்ணம் எந்த அதிகாரிக்கும், அரசியல்வாதிக்கும் ஏற்படவில்லையென்பதே பிரச்சனைக்கு காரணம்.

குடியிருப்பிலிருந்து ஒரு கிலோமீற்றருக்கு அப்பாலுள்ளது அந்த நீர்க்குழாய். ஒரேயொரு குழாய் என்பதால் எப்பொழுதும் அதில் கூட்டம் அதிகம். காலை 5 மணிக்கு தொடங் கினால் இரவு 8 மணிக்கும் நீரிற்காக மக்கள் காத்திருக்கும் காட்சிகள் சர்வசாதாரணம்.

பத்து வருடங்களின் முன்னர் இங்கு நீர்த்தாங்கியொன்று அமைக்கப்பட்டது. அது தற்பொழுது உடைந்து, வெடித்த நிலையில் காணப்படுகிறது. இதனால் நீரைச் சேமிக்க முடியாது. குடியிருப்பு பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள நீர்க்குழாய்களின் நிலையும் அதுதான். பயன்படுத்த முடியாதளவிற்கு சேதமாகிவிட்டன.

ஆண்கள் வேலைக்கு செல்ல, பெண்கள் நீர் எடுப்பது கிராம வழக்கமாகிவிட்டது. பிளாஸ்ரிக் குடங்கள், கான்கள், பாத்திரங்கள் என்பவற்றை தலையில் சுமந்தபடி பெண்கள் நீர் எடுத்து வருகிறார்கள். பெண்களிற்கு துணையாக சிறுவர்களும் நீர் எடுத்து வருகிறார்கள். இப்படியான சிரம வாழ்க்கை காரணமாக பல சிறுவர்கள் பாடசாலைக்கு செல்லாமலும் உள்ளனர்.

குடிநீரை பெற்றுக்கொள்வதற்காக மலை யக அரசியல் தலைமைகளிடமும் தோட்ட நிர்வாகத்திடமும் கடிதங்கள் வழங்கிய போதி லும் இதுவரை எவ்வித பதிலும் கிடைக்க வில்லை என இவர்கள் வேதனையடைவதாக தெரிவிக்கின்றனர்.

அத்தோடு இத்தோட்டத்தில் 2013ம் ஆண்டு ஏற்பட்ட தீ விபத்தினால் 20 வீடுகள் முற்றாக எரிந்து சாம்பலாகியது. 3 வருடங்கள் கடந்த போதிலும் இம்மக்களுக்கு அடிப்படை வசதிகள் கூட இல்லாமல் ஒரு சிறிய கூடாரத்தில் ஒன்று முதல் 15 பேர் வரை வாழ்ந்து வருகின்றனர். பல அரசியல்வாதிகள் வாக்குறுதி வழங்கியதையும் இங்குள்ள மக்கள் ஞாபகம்படுத்துகின்றார்கள்.

புதிய வீடுகளிற்காக 2 வருடங்களுக்கு முன்பு அடிக்கல் நாட்டப்பட்ட போதிலும் அடிக்கல் நாட்டிய இடமும் கூட மறைந்து போய் காணப்படுகின்றது.

இப்பகுதியில் 3 அரசியல்வாதிகள் இருக்கின்ற போதிலும் எங்களுடைய தேவை களை செய்து கொடுப்பதில் இழுபறியாக செயல்படுவதாக இவர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே இன்னும் தாமத்திக்காமல் தீயினால் பாதிக்கப்பட்ட வீடுகளையும் குடிநீரையும் பெற்று தருமாறு சம்மந்தப்பட்ட அதிகாரிகளிடம் இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# காட்டேரி அம்மன் திருவிழா



மலையகத்தின் லிந்துலை சென்றெகுலர்ஸ் தோட்டத்தில் மாத்திரம் கொண்டாடப்படும் காட்டேரி அம்மன் திருவிழா கடந்தவாரம் வெகுவிமர்சையாக கொண்டாடப்பட்டது. இந்தியாவின் நாமகல், நல்லிபாளயத்திலும் இலங்கையின் லிந்துலை சென்றெகுலர்ஸ் தோட்டத்தில் மட்டுமே இந்த திருவிழா கொண்டாடப்படுகிறது.

காட்டேரி அம்மன் என்பது அம்மனின் 1008 அவதாரங்களில் ஒன்றாகும். பத்திரகாளியின் ஒரு அவதாரமாகும். அம்மனின் ஆலயத்தை அரக்கர்களும், அசுரர்களும் இடித்து உடைக்க முற்படும் போது அவர்களை அடித்து வெளியே துரத்தும் சம்பவமே இந் நிகழ்வு ஆகும்.

இந்த விழாவை கொண்டாடுவதன் மூலமும் காட்டேரி அம்மனை வணங்குவதன் மூலமும் மக்களின் தீராத நோய் குணமாகுதல், குழந்தைப்பேறு, நினைத்த காரியங்கள் நிறைவு, தோட்டத்திற்கு பாதுகாப்பு, பேய், பிசாசுகளிலிருந்து விடுதலை போன்றன கிடைப்பதாக மக்கள் நம்புகின்றனர்.

இவ் விழாவை பார்க்கவும் நேர்த்திக் கடன்களை தீர்க்கவும் மக்கள் கூட்டம் பெருந்திரளாக கலந்து கொண்டனர். குறிப்பிட்ட பிரதேசத்தில் மட்டுமே கொண்டாடப்படும் இந்த திருவிழா அழிந்து போகும் கலையாக அல்லாமல் பேணப்படும் கலையாக அமைய வேண்டுமென்பதே மக்களின் எதிர்பார்ப்பு.







4-ம் பக்க தொடர்ச்சி

பிரதிநிதிகளின் கவனம் இல்லாதிருப்பது. கிளிநொச்சி மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் கூட இது விசயத்தில் அறிவுநிலைப்பட்டுச் சிந்திப்பதாகவும் சமூக நிலைப்பட்டுச் செயற்படுவதாகவும் இல்லை என்பது விவசாயிகளின் மனக்குறையாக உள்ளது. இதனால்தான் குளத்தின் புனரமைப்புப் பற்றி ஒரு இருண்ட நிலை காணப்படுகிறது. இந்த இருண்ட நிலை நல்லதல்ல.

குளத்தின் புனரமைப்புப் பணிகளில் முக்கியமான ஒரு விசயம், அதனுடைய செலவு மதிப்பீட்டில் (BOQ) கட்டுமாணப் பணிக்கான மண் மற்றும் மணலுக்கான நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால், இந்த மண்ணும் மணலும் குளத்திலிருந்தே எடுக்கப்படுகின்றன. ஆகவே இப்படி எடுக்கப்படும் மண்ணுக்கும் மணலுக்குமான நிதி எங்கே போகிறது? அந்த நிதி உண்மையில் உள்ளூர் அமைப்புகளுக்கு அல்லது பிரதேச சபைக்கு வழங்கப்பட வேண்டும். ஆனால் அப்படி நடக்கவில்லை என்பதாகும்.

இந்த மாதிரி இன்னும் பல விடயங்கள் உள்ளன. இவற்றைக் கண்காணிப்பதற்கும் தவறுகள் நேராமல் தடுப்பதற்கும் ஒரு திறந்த நிலைக் கண்காணிப்பு அவசியம். குறைந்த பட்சம் விவரமறிந்தவர்கள் பணி நடக்கும் இடங்களுக்குச் சென்று வேலைகளை அவதானிக்கக் கூடிய நிலை வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், இதற்கான சூழல் அங்கில்லை. குளப்பகுதிக்கு செல்வதும் விவரங்களை அறிய முடியாதிருப்பதும் கவலைக்குரியதாகவே உள்ளது.

இதற்கு நீர்ப்பாசனப்பகுதி சொல்கிற காரணம், குளத்தின் புனரமைப்புப் பணிகள் நடப்பதால் வேறு ஆட்களை அந்தப் பகுதிக்கு அனுமதிக்க முடியாது என்பதே. ஆனால், கட்டுமாணப்பணிகளுக்கும் அனுமதி மறுப்புக்கும் இடையில் என்னதான் இருக்கிறது?

**அதுதான் விசயமே.**

ஆசிய அபிவிருத்தி வங்கி, பிரான்சிய முகவர் அபிவிருத்திக் கடன், இலங்கை அரசாங்கத்தின் நிதிப்பங்களிப்பு என்பவற்றின் கீழ் இப்பொழுது குளம் புனரமைக்கப்பட்டு வருகிறது. இதற்காக 18.328 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. குளப்புனரமைப்பும் குளத்துக்குக் கீழ்ப்பகுதி வாய்க்கால்கள் மற்றும் விவசாய வீதிகள் புனரைப்பும் இதில் அடங்கும்.



விடுதலைப்புலிகள் காலத்தில் கருக்கொள்ளப்பட்ட இந்தத் திட்டம் யாழ்ப்பாணத்துக்கான குடிநீர் விநியோகத்துடனும் சம்மந்தப்பட்டிருந்தது. புலிகளுக்குப் பின்னரான சூழலில் நீண்ட வாதப்பிரதிவாதங்கள், இழுபறிகளால் இந்தத்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதில் பிரச்சினைகள் உண்டாகின. அதனால்திட்டத்தைநடைமுறைப்படுத்துவது தாமதமாகியது. இதற்குக் காரணம், இரணைமடுக் குளத்திலிருந்து தண்ணீரைக் கொண்டு போவதாக இருந்தால் அதனால் இந்தக் குளத்தின் நீர்ப்பாசனத்தை நம்பி விவசாயம் செய்யும் விவசாயிகள் பாதிக்கப் படுவார்கள். யாழ்ப்பாணத்துக்குத் தண்ணீரைக் கொடுக்கக் கூடிய அளவுக்கு நீரின் அளவு போதாது என்பதே விவசாயிகளின் எதிர்ப்புக்கான அடிப்படை.

ஆனால், இதை மறுத்துரைத்தனர் யாழ்ப்பாணத்துக்கான குடிநீரைப் பெற வேண்டும் என்று வலியுறுத்துவோர். அவர்கள் சொன்ன நியாயம், குளத்தின் நீர்க் கொள்ளளவைக் கூட்டியே குளம் புனரமைக்கப்படும். இதன் மூலமாக ஆண்டுதோறும் கடலுக்கு வெளியேற்றப்படும் நீரைத் தேக்கி, அந்த நீரிலிருந்தே யாழ்ப்பாணத்துக்கான குடிநீர் பெறப்படும் என்பதாகும். ஆனால், இதற்கான உத்தரவாதத்தை யாரும் முறையாக வழங்கவில்லை. அதாவது சட்டபூர்வமான ஆவணத்தை விவசாயிகள் எதிர்பார்த்தனர். இதை முறைப்படி வழங்குவதில் ஏற்பட்ட சிக்கல்களும் தாமதங்களும் திட்டத்தை தாமதமாக்கியது. மட்டுமல்ல, புனரமைப்பு என ஒதுக்கப்பட்ட நிதியே திரும்பிச்செல்லக் கூடிய அபாய நிலையும் ஏற்பட்டது.

இதன் பிறகு ஒரு தற்காலிக ஏற்பாடாக யாழ்ப்பாணத்துக்கான குடிநீர் விநியோகத்துக்கு மாற்று ஏற்பாடுகளைச் செய்வது என்ற அடிப்படையில் முதலில் இரணைமடுக் குளத்தைப் புனரமைக்கலாம் என்று தீர்மானிக்கப்பட்டே இப்பொழுது குளத்தின் வேலைகள் நடக்கின்றன. இந்த வேலைகளை தென்பகுதி ஒப்பந்த நிறுவனங்கள் பொறுப்பெடுத்தபோதும் உள்ளூர் ஒப்பந்தகாரர்களே செய்து வருகிறார்கள். ஒப்பந்தந்தின்படி வேலை சரியாக நடக்கிறதா என்று கண்காணிப்பதற்கும் ஆராய்வதற்கும் உரிய தொழில் நுட்ப உத்தியோகத்தர்களும் பொறியியலாளர்களும் இருக்கிறார்கள். ஆனால், பிரச்சினை வேறு மாதிரி உள்ளதாக விவசாய அமைப்பினரும் அதிகாரிகளில் சிலரும் தெரிவிக்கிறார்கள்.

கள்ளனும் காவல்காரனும் சேர்ந்தால் என்ன நடக்குமோ அதுதான் ஏறக்குறைய நடந்து கொண்டிருக்கிறது. இந்த மாதிரி ஒரு தவறு அக்கராயன் குளத்தின் புனரமைப் பின்போதும் நடந்தது. கரியாலை நாகபடுவான் குளத்தின் புனரமைப்பிலும் ஏறக் குறைய இதைப்போன்ற ஒரு நிலை காணப்பட்டது. அப்பொழுது தென்பகுதி ஒப்பந்தகாரரர்கள் கொழும்பின் ஆசீர் வாதத்துடன் வந்து நின்று ஆட்டம் போட்டார்கள். அதனால் குளவேலைகள் ஆட்டையைப் போட்டன. இப்பொழுது இரணைமடுவில் உள்ளூர்க்காரர்களாலேயே ஆட்டையைப்போடும் காரியங்கள் நடக்கின்றன. மண், மணல் அகழ்விலிருந்து கண்காணிப்பற்ற முறையிலான புனரமைப்பு வரை எல்லாமே தவறாகத்தான் உள்ளன.

எனவே அவசரமாக ஒரு திறந்த நிலைக் கண்காணிப்பும் அரசியல் அதிகார முடையோரின் அவதானிப்பும் பிரசன்னமும் அவசியம். தண்ணீரைத் திறந்து விடுவதற்காக மட்டுமன்றி, தண்ணீரைத் தேக்கும் நடவடிக்கையிலும் சம்மந்தப்பட்டவர்கள் அக்கறை காட்ட வேணும்.

திரைகளைக் கிழித்தெறியும் காலம் எப்போது வரும்?

சுட்டு

மக்கள் பிரதிநிதிகளிற்கும் மக்களிற்குமிடையிலான புதிய சந்திப்பிடம் தீபத்தின் 'கேள்விக்கு என்ன பதில்' பகுதி. மக்கள் பிரதிநிதிகளை மக்கள் மன்றத்திற்கு அழைத்துவரும் இந்த பகுதியில், இந்த வாரம் இடம்பெறும் மக்கள் பிரதிநிதி ஈ.பி.டி.பி கட்சியின் செயலாளர் டக்ளஸ் தேவானந்தா.



நிரோசன்
சாவகச்சேரி

**நீங்கள் கடந்த அரசுடன் இணைந்திருந்த காலத்தில்வலிவடக்குமக்களின் காணிகளை பெரியளவில் விடுவிக்க முடியவில்லை. ஆனால் தற்போது காணிகள் அதிகமாக விடுவிக்கப்பட்டுள்ளது. ஏன் உங்களால் அதை செய்ய முடியவில்லை?**

**டக்ளஸ் தேவானந்தா:** எமது அரசியல்ப் பணிகள் அனைவரையும் சென்றடைய முடியாமல் திட்டமிட்ட இருட்டடிப்புகள் நடந்தன. நான் கடந்த அரசில் அமைச்சராக இருந்த போது வடக்கில் 17522 ஏக்கர் நிலங்களை மீட்டிருக்கின்றேன்.

கிளிநொச்சியில் 541ஏக்கர் நிலத்தை படையினரின் வசமிருந்து நானே மீட்டு அறிவியல் நகரம் அமைக்கப்பட்டது.. இதை விட பலநூறு சோதனை சாவடிகள் அகற்றப் பட்டு இராணுவப்பிரசன்னம் படிப்படியாக குறைக்கப்பட்டது. அன்றைய எனது இந்த பாரிய பணிகளின் போது இதற்காக என்னுடன் இணைந்து உழைத்தவர்களில் முக்கியமானவர் இன்றைய ஜனாதிபதி மைத்திரி பால சிறீசேனா அவர்கள். அன்று அமைச்சராக இருந்த அவரே நில மீட்பு குறித்து நாம் ஆற்றிய பணிகளுக்கு சாட்சி.

நான் நேரடியாகவே மக்களை அழைத்து சென்று மீட்கப்பட்ட நிலங்களில் அவர்களை குடியமர்த்தியிருக்கின்றேன். ஆகவே அந்த மக்களும் சாட்சி. அதன் தொடர்ச்சியாகவே புதிய ஆட்சியிலும் மக்களின் குடியிருப்பு நிலங்கள் சில இடங்களில் விடுவிக்கப்பட்டு வருகின்றன.

எமது மக்களின் அடிப்படை விடயங்களான, அரசியல் தீர்வு, நில மீட்பு, அரசியல் கைதிகள் விடுதலை, காணாமல் போனோர் தொடர்பான விடயம் என்பவற்றை வலிமையாக முன்னெடுத்து தீர்வு காண்பதற்கு, போதுமான அரசியல் அதிகாரங்கள் இருக்கவேண்டியது அவசியமாகும். துரதிஸ்ட்டவசமாக அந்த வாய்ப்பு எங்களுக்கு கிடைக்கவில்லை.

இணக்க அரசியல் வழிமுறையூடாகவே இவ்விடயங்களை கையாள முடியும் என்று நான் நீண்டகாலமாகவே கூறிவருவதோடு, அதையே செயற்படுத்தியும் வந்திருக்கின்றேன். ஆனால் அந்த வாய்ப்பு கிடைத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அதைச் செய்யவில்லை.

இன்று அவர்கள் வைத்திருக்கும் அரசியல் பலம் அன்றே எம்மிடம் கிடைத்திருந்தால் எஞ்சியுள்ள நிலங்களையும் அன்று நாமே மீட்டெடுத்திருப்போம். இந்த கேள்வியை என்னிடம் கேட்ட தம்பி நிரோசன் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, மற்றும் வடக்கின் அபிவிருத்தி என்று இன்னும் பலதை என்னிடம் கேட்டிருக்கலாம்.

2009 மே மாதத்தின் பின்னர் 12500 முன்னாள் புலிகள் இயக்க உறுப்பினர்கள் புனர்வாழ்வளிக்கப்பட்டு பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்படுவதற்கு நான் பிரதான பங்காற்றியிருக்கிறேன். அந்த தமிழ் இளைஞர் யுவதிகள் தொழில் பயிற்சிகளுடன் சகவாழ்விற்கு திரும்பியது என்பது மந்திர மாயா ஜாலங்களால் நிகழ்ந்தவிடவில்லை. அதற்காக ஆரவாரமில்லாமல் நான் அரசியல் தலைமையாகவும், மத்திய அமைச்சராகவும் இருந்து எடுத்துக் கொண்ட முயற்சிகள் மிக அதிகமாகும்.



இ.திலீபன்
நெல்லியடி

**விரைவில் தொகுதிவாரி தேர்தல்முறை வருமென கூறப்படுகிறது. அது உங்கள் கட்சியின் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை பாதிக்காதா?**

**டக்ளஸ் தேவானந்தா:** அது எங்களை பாதிக்காது. எமது மக்களைத்தான் வெகுவாக பாதிக்கும்.

மக்கள் நலனா? கட்சிகளின் நலனா? இதுவே இங்கு பிரதான கேள்வி.

இன்றுள்ள விகிதாசார தேர்தல் முறையிலேயே சகல கட்சிகளும் பிரதிநித்துவங்களை கொண்டிருக்க முடிந்த பன்மைத்துவ ஜனநாயக தன்மைகள் அடங்கியிருக்கின்றன.

இதுவே சகல கட்சிகளுக்கும் வாக்களிக்கும் அனைத்து மக்களுக்கும் விமோசனம் கொடுக்கும். புதிய அரசிய யாப்பு குறித்து நாம் எமது யோசனைகளை தெரிவித்திருக்கிறோம். அதில் கலப்பு தேர்தல் முறை குறித்த யோசனைகளையே நாம் முன்வைத்திருக்கிறோம்.






சண்முகசுந்தரம்
சரசாலை

**தமிழ் கட்சிகள் பல திசைகளிலும் பிரிந்து நிற்கின்றன. எல்லா கட்சிகளும் ஒற்றுமையாக, ஒரே திசையில் பயணித்தால் தமிழர்கள் பலமாக இருக்கலாம். ஒரே கொள்கையின் கீழ் எல்லா கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட ஏன முயற்சிக்க கூடாது?**

**டக்ளஸ் தேவானந்தா:** ஈ.பி.டி.பி எப்போதுமே அரசியல் தீர்வுக்காவும், தமிழ் பேசும் மக்களின் விமோசனத்திற்காகவும் ஒன்றுபட்டு செயலாற்றவும், ஓரணியாக உழைக்கவும் தயாராகவே இருக்கின்றது, இருந்தது. அத்தகைய கூட்டுச்செயற்பாட்டுக்கு சரியான இலக்கையும், அதை அடைந்து கொள்வதற்கான நடைமுறைச்சாத்தியமான வேலைத்திட்டத்தையும் வரைந்து கொள்ள வேண்டும் என்பதையே நீண்டகாலமாக கூறி வருகின்றேன்.

நீங்கள் கேட்டதைப்போல் பரந்து பட்ட ஐக்கிய முன்னணி ஒன்றின் அவசியம் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் தேவை என்பது உண்மை. ஆனாலும் அது வெறும் தேர்தலுக்காக ஐக்கியப்படுவதும், தேர்தல் முடிந்தவுடன் கூட்டுக்குள் குத்து வெட்டு நடத்தி தனித்தனியே பிரிந்து நின்று முரண் படுவதும், அடுத்த தேர்தல் வரும் போது மறுபடியும் தமிழர் ஐக்கியம் என்றும், தமிழர் தேசியம் என்றும் கூறி கூட்டுச்சேர்வதுமே இங்கு நடந்து வருகிறது.

ஆகவே தேர்தலுக்காக மட்டுமன்றி தமிழ் பேசும் மக்களின் அரசியலுரிமை பிரச்சினை முதல் நில மீட்பு, மீள் குடியேற்றம், வாழ்வாதாரம், மற்றும் அபிவிருத்தி வரை தமிழர் தரப்பில் இருந்து பொது நோக்கில் ஐக்கியப்பட்டு செயலாற்ற பரந்து பட்ட கூட்டு ஒன்றே தேவைப்படுவது உண்மை.

விரிக்கும் சிறகுகள் இரு வேறாக இருப்பினும் பறக்கும் திசை ஒன்றே. ஆகவே ஐக்கியத்திற்கான கதவுகளை நாம் என்றும் திறந்தே வைத்திருக்கின்றோம். அப்படி ஒற்றுமையை ஏற்படுத்தும் முயற்சியை முன்னெடுப்பதில் ஊடகங்கள் முக்கியபங்காற்ற வேண்டுமென பல தடவைகள் கூறியிருக்கின்றேன். ஊடகங்கள் ஒத்துழைக்காவிட்டால் இவர்களுக்கு அரசியலேஇருக்க முடியாதல்லவா?



சிவராசா
மட்டுவில்

**விடுதலைப்புலிகள் அமைப்பு தோற்கடிக்கப்பட்ட பின் தமிழர்களிற்கான தீர்வு வாய்ப்புக்கள் பெருமளவு இல்லாமல் போய் விட்டது. தீர்வு விடயத்தில் இப்போதைய தமிழ்கட்சிகளின் செயற்பாடு அதிருப்திதான் அளிக்கிறது. தீர்வு விடயத்தில் இதுவரை இருந்த அணுகுமுறைதான் உங்கள் கட்சியிடம் இப்பொழுதுமுள்ளதா? மாற்றங்களுள்ளதா?**

**டக்ளஸ் தேவானந்தா:** புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர் தீர்வுக்கான வாய்ப்புக்கள் இல்லாமல்போய்விட்டதாக நீங்கள் கூறுவதை நான் ஏற்றுக் கொள்ளவில்லை. நீங்கள் வரலாற்றை சிறிது பார்க்க வேண்டும். புலிகள் இருந்தபோதே இலங்கை இந்திய ஒப்பந்தம், புலிகள் பிறேமதாசா பேச்சவார்த்தை, புலிகள் சந்திரிக்கா பேச்சுவார்த்தை, புலிகள் ரணில் ஒப்பந்தம், புலிகள் மகிந்த ராஜபக்ச புரிந்துணர்வு என்று பல வாய்ப்புக்கள் கிடைத்தும் அதை அவர்கள் சரியாக பயன்படுத்திக் கொள்ளவில்லை. அப்போதிருந்த தமிழ்த் தலைமைகளும் அதற்கான முயற்சியை செய்யவில்லை. புலிகளின் தலைமை பேச்சு வார்த்தையின் மூலம் அரசியல் தீர்வை அடையலாம் என்று எண்ணியிருந்தவர்கள் அல்ல. ஜனாநாயக வழிமுறைக்கு வந்திருந்த நாம் அரசியல் ஜனநாயக வழிமுறைகளுக்கு ஊடாகவே எமது இலக்கை அடையலாம் என நம்பிக்கை கொண்டவர்களாக இருக்கின்றோம்.

சரியோ தவறோ புலிகளின் தலைமை தமது இலக்கை அடையும் வழிமுறையில் உறுதியாகவே இருந்திருக்கிறார்கள். நாமும் எமது இலக்கை அடைவதில் எமது வழிமுறையில் உறுதியாகவே இருந்து வருகின்றோம். வழிமுறைதான் வேறுவேறானது.

ஆனால் தமிழ் தேசிய கூட்டமைப்பில் உள்ளவர்களிடம் அரசியல் இலக்கை அடைய வேண்டும் என்ற உறுதி இல்லை. 1994 ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா ஆட்சிக்காலத்தில் சிறந்ததொரு அரசியல் தீர்வு கொண்டு வரப்பட்டது. ஆனாலும் அந்த தீர்வு யோசனைகள் அன்றைய ஆளுங்கட்சி எதிர்க்கட்சி போட்டிகளால் நாடாளுமன்றத்திலேயே வைத்து கொழுத்தி எரிக்கப்பட்டது. அப்போது தமிழ் தேசிய கூட்டமைப்பும் சேர்ந்தே அந்த தீர்வை எதிர்த்திருந்தமை ஒரு மாபெரும் வரலாற்று தவறு.

வட மாகாண சபையை பைப்பற்றியவர்கள் என்ன செய்தார்கள்...? காணி பொலிஸ் அதிகாரங்களை தவிர்த்து பார்த்தால் 37 அதிகாரங்கள் அதில் உள்ளன. அவற்றில் ஒரு அதிகாரத்தையேனும் எமது மக்களுக்காக நடைமுறைப்படுத்தும் உறுதிப்பாடு அவர்களிடம் இல்லை. ஆளுனர் தடை என்றார்கள், பிரதம செயலாளர் தடை என்றார்கள். புதிய ஆட்சி மாறி வந்து ஆளுனரையும் பிரதம செயலாளரையும் மாற்றினார்கள்.

அதற்கும் பின்னரும் எந்த முன்னேற்றங்களும் வடமாகாணசபையில் ஏற்படவில்லை. வந்த நிதியில் ஒரு பகுதி செலவழிக்காமலேயே திரும்பி போகிறது. ஆகவே அரசியல் இலக்கை அடைய வேண்டும் என்ற உறுதி அல்லது அதற்கான செயற்திறன் அவர்களிடம் இல்லை.

ஆகவே அரசியல் தீர்வு விடயத்தில் அணுகுமுறைகளை மாற்றிக்கொள்ள வேண்டியவர்கள் நாமல்ல. இதுவரை காலமும் வாய்ப்புகளை பயன்படுத்த மறுத்து வருபவர்களே தமது அணுகு முறைகளை மாற்றியமைக்க வேண்டியவர்கள்.

இ. உமாரதன்
தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை
யாழ்ப்பாணம்.

# பிரபஞ்சம் தேடும் தண்ணீர் ஏன் வீண் நீராக




“சிறப்பான குடி நீர் மூலம் நோயற்ற தேசத்தையும், நீர் வளம் மூலம் விவசாயத் திட்டத்தையும், அமுல்படுத்தப்படுவதால் செழிப்புமிகு தேசத்தை கட்டியெழுப்ப முடியும்.”

“தாயைப் பழித்தாலும் தண்ணீரைப் பழிக்காதே” என்பது நமது நாட்டின் சொல் வழக்கு. பெற்ற தாய்க்கு கொடுக்கின்ற மரியாதையை விட, தண்ணீருக்குக் கொடுத்த மதிப்பினை நமது பழமொழிகளில் கண்டு கொள்ளலாம்.

“காசைத் தண்ணியாக செலவழிக்கின்றான்” என்ற சொல் இனி இல்லாமல் போகும் காலம் வந்துவிட்டது. தண்ணீரைச் சிக்கனமாகப் பாவிக்கும் காலமும் தேவையும் வந்துவிட்டது. மூன்றாம் உலகமகா யுத்தம் எதற்காக? என்றால் “நீருக்காக” என்று கூறும் காலம் வந்துவிட்டது. தண்ணீரைத் தேடி அலைவதே மூன்றாம் உலக நாடுகளின் அவலமாய் மாறிக் கொண்டிருக்கின்றது.

ஐக்கிய நாடுகள் சபையும் நீர் தொடர்பான விழிப்புணர்வின் பொருட்டு, 1992 ஆம் ஆண்டின் மார்ச் 22ஆம் திகதி உலக நீர்த்தினமாகக் கொண்டாடத் தீர்மானித்தது. நீரின் அவசியமும், தேவையும் கருதி விழிப்புணர்வை உருவாக்கும் வண்ணம் இந் நாள் 20 ஆண்டுகளாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

நீர் சிக்கனம், நீர்த் தூய்மை, நீர் சேமிப்பு என்பன குறித்த விழிப்புணர்வு இன்னும் நம்மிடையே உருவாகவில்லை. என்பதை நாம் ஒப்புக் கொண்டே ஆக வேண்டும். நீர் தொடர்பான நோய்களின் எண்ணிக்கையும் அதிகமாகவே காணப்படுகின்றது.

**நீருடன் தொடர்புள்ள நோய்கள்.**

நீருடன் தொடர்புள்ள நோய்களை கீழ்க்கண்டவாறு பட்டியற்படுத்த முடியும்.

**01. நீரினால் பிறப்பிக்கப்படும் நோய்கள்.**

இதன் தோற்றுவாய் என்னவெனில் நோய்க் கிருமிகள் உள்ள நீரை அருந்துவதன் மூலம் ஒருவர் தொற்றுக்குள்ளாகலாம். உதாரணமாக: வாந்திபேதி, நெருப்புக் காய்ச்சல் என்பன மட்டுமன்றி கல்லீரல்பேதி, சீதபேதி என்பனவுமாகும்.

**02. கழுவும் நீரினால் ஏற்படும் நோய்கள்.**

இது நேரடியாக வீட்டுச்சுகாதாரம் மற்றும் தனியாள் சுகாதாரத்துடன் தொடர்புபட்டுள்ளது. அத்துடன் கழுவுவதற்கும் சுகாதாரத்திற்கும் போதுமான அளவு நீர் கிடைக்கும் பட்சத்தில் இந் நோய் தொற்றுகையை நன்கு குறைக்க முடியும். சிரங்கு, சொறி, அயன மண்டலங்களில் ஏற்படும் புண் மற்றும் குழந்தைகளுக்கு ஏற்படும் வயிற்றோட்டம் என்பன இதற்கு உதாரணங்களாகும்.

**03. நீர் அடிப்படையிலான நோய்கள்.**

இவை ஒட்டுண்ணியால் ஏற்படும் நோய்களாகும். இங்கு நோயை உருவாக்கும் அங்கியிலேயே கழிக்கின்றது. உதாரணமாக கினியா புழு (குடற்பழு) பூச்சிக் காவி நோய்கள். இவை நீரினால் இனப் பெருக்கமடையும் பூச்சிகளால் பரப்பப் படும் நோய்களாகும். உ தா ர ண ம் : யானைக்கால், மலேரியா, டெங்கு.

நீரினால் பிறப்பிக்கப்படும் மற்றும் நீர் அடிப்படையிலான நோய்களினை சுத்தமானதும், பாதுகாப்பானதுமான குடி நீரை வழங்குவதன் மூலம் நன்கு குறைக்கப்பட முடியும்.

- கழுவும் நீரினால் ஏற்படும் நோய்களை வீட்டுச் சுகாதாரத்திற்கும், தனியாள் சுகாதாரத்திற்கும் போதியளவு நீரை வழங்குவதன் மூலம் நன்கு குறைக்கப்பட முடியும்.
- பூச்சிக்காவி நோய்களை கிணறுகள் இமைப்பது நேரடியாகப் பாதிப்பதில்லை. ஆனால் பாரம்பரிய நீர் பெறும் இடங்களைச்சுற்றி தொற்றுகைக்குள்ளான பகுதியைச் சுத்தப்படுத்துதல், மறைமுகமான வழியில் பாதிப்பினை ஏற்படுத்தும். மற்றும் சரியான வடிகாலமைப்பு வழங்குதல் மூலம் நீரை கிணற்றுக்கு அருகில் தேங்க விடாது குறைப்பதும் இதற்கு உதவியாக இருக்கும்.
- நீர்த் தொற்றுகையானது கையாளும் போதும், சேமித்து வைக்கும் போதும், பயன்படுத்தலின் போதும் ஏற்படக் கூடியது என்பதை கட்டாயம் மனதில் கொள்ள வேண்டும்.
- ஒரு சமூகத்தில் கையால் அகழும் கிணறு அமைத்தலைத் திட்டமிடும் போது சுகாதாரம் மற்றும் ஆரோக்கியம் சம்பந்தமான கல்வி மூலம் அவர்களது பழக்கவழக்கங்களை மாற்றும் நடத்தையை அழுத்திச் சொல்லுதல். மிக முக்கியமானது ஆகும்.
- கிணறுகளைப் பாவிப்போர் தொற்றுக் குள்ளான நீரினால் ஏற்படும் ஆபத்து, மலசல கழிவுகளை, பாதுகாப்பாகக் கழித்தலின் முக்கியத்துவம் மற்றும் கழிவுகளை அகற்றுதல், அத்துடன் இவற்றுக் கிடையிலான தொடர்புகள் பற்றிய விழிப்புணர்வை கட்டாயம் கொண்டிருக்க வேண்டும்.
- கிணறு ஒன்றைத் திட்டமிடுதல், கட்டுதலின் போது அதனைத் தொற்றுகைக்கு உள்ளான நீரிலிருந்து பாதுகாப்பாகவும், இலகுவான பரிபாலனத்திற்கும் அனுமதிக்குமாறு அமைக்கும் போது மட்டுமே பாவனையாளருக்கு இது நன்மையளிக்கும்.

நீரினாலும் மலத்தினாலும் பரவும் நோய்களின் தாக்கத்தைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள்.

- பாதுகாப்பான நீர் நிலைகளிலிருந்து சுத்தமான கைகளினாலும் பாத்திரங்களினாலும் குடி நீர் எடுக்கப்படல்.
- குடி நீரை பாதுகாப்பான முறையில் சேமித்தல் அல்லது சேகரித்தல் வீடுகளில் மழைநீர்த் தொட்டிகள் அமைத்து அதனுள் மழை நீரைச் சேகரித்து, சுத்திகரித்து குடி நீரைப் பெறுதல்.
- கழிவகற்றலுக்குப் சிறந்த முறையில் பேணப்பட்ட சுகாதாரமான மலசலகூடங்களை உபயோகித்தல். நில நீர் மட்டம் உயர்ந்த பகுதிகளில் septic tank, anaerobic fiber முறையினையும், நீர் மட்டம் குறைந்த பகுதிகளில் septic tank soakage pit மலசலகூடங்களையும் பாவித்தல்.
- சிறுவர்களின் கழிவினைப் பாதுகாப்பான முறையில் மலசலகூடத்தில் அகற்றல்.
- உணவு உண்ண முன்னரும், ஒவ்வொரு முறை உணவு தயாரிக்க முன்னரும் கைகளினைச் சவர்க்காரத்தினால் கழுவுதல். மலம் கழித்த பின் கைகளினை சவர்க்காரத்தினால் கழுவுதல்.
- சுத்திகரித்த, கொதித்த அல்லது புறஊதாக்கதிர்களின் தாக்கத்திற்கு உள்ளான நீரைப் பருகுதல்.
- கழுவப்பட்ட நீரினதும், சமையலறைக் கழிவு நீரினதும் ஒழுங்கான வடிகாலமைப்பு இங்கு வடிகாலில் கழிவு சீர் தேங்கி நிற்பதால் தொற்று நோய்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகமாகக் காணப்படும்.

யாழ்குடா நாட்டில் மக்கள் தங்களது முழுத் தேவைக்கும் நிலத்தடி நீரிலேயே தங்கியிருக்கின்றனர். எதிர்காலத்தில் குடா நாடு பெரும் குடிநீர்ப்பற்றாக்குறையை சந்திக்க நேரிடும். இதன் காரணமாக நாம் பணத்தை சேமிப்பிலிட்டு வட்டி மூலம் நாம் பணத்தைப் பெருக்குவது போன்று நீரையும் நாம் சேமித்து நல்ல நீரை நாம் நிலத்தில் சேமிக்க வேண்டும்.

பின்வரும் காரணிகளால் குடிநீர் வளம் பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி இருக்கின்றது.

- நிலத்தடி நீரைப் பாவிப்பதில் கட்டுப்பாடின்றி தன்னிச்சையான முறையில் விவசாயத் தேவைக்கும், கவனமற்ற வீட்டுப் பாவனைக்கும் உபயோகித்தல்.
- மழை நீரை நிலத்தடி நீராகவோ, மழைநீர்த் தொட்டிகளின் ஊடாகவோ சேமிக்காமல் கான்கள் வெட்டக் கடலுக்கு அனுப்புதல்.
- அணைகள் இல்லாமல் கடல் நீர் உட்புகுவதால் கரையோரப் பகுதிகளிலும், தீவகப் பகுதியிலும், கிணறுகள் உவர் நீராக மாறுதல்.
- சுகாதார முறைகளுக்கு அமைவாக மலசலகழிவுகள் சுத்திகரிக்கப்படாமை. மலக்குழிகளிலிருந்து நிலத்தின் கீழ் காணப்படும் பிளவுகள் ஊடாக நிலத்தடி நீர் மாசடைதல்.
- சிறு குளங்கள், கேணிகள் என்பன குப்பை கூலங்கள் போட்டு மூடுதல்.
- மணல் மேடுகள் அகற்றப்பட்டால் நிலத்தடி நீர் சேமிக்கும் அளவு குறைவடைவதுடன் வடிகட்டும் திறனும் குறைவடைதல்.
- திட்டமிடாது குடிநீர் விநியோகத் திட்டங்களை அமைத்தல்.
- வீட்டுப் பாவனைக்கும், விறகிற்கும் அதிகளவு மரங்கள் அழித்தல்.
- வாகன புகை, பிளாஸ்ரிக், பொலித்தீன் பொருட்கள் எரித்தலால் ஓசோன் படலம் பாதிப்படைதல்.

**நீர்வளம் பாதுகாக்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்.**

யாழ் குடா நாட்டில் கிடைக்கப்பெறும் நிலத்தடி நீரைப் பாதுகாக்க யாழ் அரச அதிபரின் கீழ் இயங்கும் நீர் சுகாதாரத்தைப் பேண அமைக்கப்பட்ட குழுவும், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையும் நடவடிக்கைகள் மேற்கொள்ளுகின்றன.

- சாத்தியமான வகையில் நிலத்தடி நீரைப் பாவித்து நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை மூலமாகவோ, மாநகரசபை மூலமாகவோ, உள்ளூராட்சி சபை மூலமாகவோ குடிநீர் வழங்கல்.
- விவசாயிகள் மழைநீரை கடலுக்கு அனுப்பாமல் வரம்புகள் அமைத்து கான்கள், குளத்தில், கேணிகளில் சேகரித்தல்.
- கூரைகளிலிருந்து வெளியேறும் மழை நீரைத் தொட்டிகளில் சேமித்து குடிநீராகப் பாவித்தல்.
- மலசல கழிவுகள் சுத்திகரிப்பு முறையை விதிகளுக்கு அமைய சுகாதாரத் திணைக் களத்தின் அனுமதியுடன் அமைதல்.
- திண்மக்கழிவுகளை கண்ட இடங்களுக்குப் போடாமல் கழிவுப் பொருட்களை சேகரிக்கும் இடங்களுக்கு அனுப்பி இயற்கை உரமாக்கல், மாநகரசபை மூலமாகவோ, உள்ளூராட்சி சபை மூலமாகவோ மக்களுக்கு விழிப்புணர்வு



ஏற்படுத்தல்.

- மணல் அகழ்வை பிரதேச செயலகம், பிரதேசசபை மூலமாக விழிப்புக்குழு அமைத்துத் தடுக்கலாம்.
- வாகன சுத்திகரிப்பு நிலையங்களில் அகற்றப்படும் கழிவுகள் வடிகட்டப்பட்டு வெளியேற்றப்படல், மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அறிவுறுத்தலுக்கு அமைய வாகன சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல்.
- யாழ் குடாநாட்டின் குடிநீர்ப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டுஉலகவங்கியின் நிதியுதவியுடன் அரசாங்கமும் உலக வங்கியின் நிதியுதவியுடன் அரசாங்கமும், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையும் இணைந்து இரணைமடுவில் இருந்து குழாய்கள் மூலம் நீர் கொண்டுவரப்படல்.
- விவசாயிகள் அதிகளவு இரசாயன உரங்களை பாவிப்பதை நிறுத்தி இயற்கைப் பசளை இடலாம். அத்துடன் விவசாயத் திணைக்களத்தினால் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.
- பிளாஸ்ரிக் பொருட்கள், பொலித்தீன் முதலியவற்றை நிலத்தின் கீழ்ப் புதைப்பதால் மழை நீரானது உட்புகாது தடைப்படுகின்றது. இப் பொருட்களை எரிப்பதனால் ஓசோன் படலம் பாதிப்படைகின்றது. எனவே மத்திய சுற்றாடல் அதிகாரசபை மூலமாக விழிப்புணர்வு ஏற்படுத்தி தகுந்த கழிவகற்றல் முறையினை மக்களுக்கு அறிமுகப்படுத்தல்.

எனவே நிலத்தடி நீரின் முக்கியத்துவத்தையும் நீரைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தையும் உணர்ந்துநாம்செயற்படவேண்டும்.

இதற்கான முயற்சிகளை தனியாகவும், சமூகமாகவும் இணைந்து நெறிப்படுத்த முனைய வேண்டும். மனிதனின் உடலில் கூட நீரின் அளவு பெரும் பங்கு என்பதுடன் ஒரு தேசத்தின் வளர்ச்சியிலும், அபிவிருத்தியிலும் நீரின் காத்திரமான பங்கையும், அபிவிருத்தித் திட்டங்கள் மூலம் நாம் இனம்காணலாம். நிலத்தடி நீர் வளத்தையே பெருமளவு நம்பியிருக்கும் யாழ் குடா நாட்டு மக்கள் இது பற்றிய முயற்சிகளில் அதிக சிரத்தை எடுக்க வேண்டும்.

எனவே குடி நீரைப் பாதுகாத்து இயற்கை வளத்தை மேம்படுத்தி தேசத்தின் வளர்ச்சியில் பங்கெடுப்பதன் மூலம் செழிப்பான வாழ்க்கையையும், சுபீட்சமான எதிர்காலத்தையும் கனிய வைக்க முடியும். சிறப்பான குடி நீர் மூலம் நோயற்ற தேசத்தையும், நீர் வளம் மூலம் விவசாயத் திட்டத்தையும், அமுல்படுத்தப்படுவதால் செழிப்புமிகு தேசத்தை கட்டியெழுப்ப முடியும். எனவே நீர் வளத்தை பாதுகாக்க முயற்சி எடுக்க வேண்டியதும், அமுல்படுத்த வேண்டியதும், மானிட சமுதாயத்தின் தலையாய கடனாகும். குடி நீர் உயிர்ச் சக்தி என்பதால் குடிநீரைப் பேணிப் பாதுகாப்போம்.

நீங்கள் எழுதியவை...



# பெண்கள் மீதான வன்முறைக்கு இந்தியா முகம் கொடுப்பதற்கான காரணம்



ய.மீரா

இந்தியாவின் தேசபிதா என பிரித்தானிய அரசாலும், இந்திய அரசாலும், இந்திய காங்கிரஸினாலும் உருவாக்கம் செய்யப்பட்ட மகாத்மாகாந்தியின் வரலாறு மிகவும் கொடிய பாலியல் வக்கிரத்தைச் சான்று பகர்வதாகவே உள்ளது. இவரின் வரலாற்றில் பல முறையற்ற பாலியல் செயற்பாடுகள் காணப்பட்டதாக இவரது ஆச்சிரமத்தில் வாழ்ந்த ஆண் பக்தர்களால் முறையிடப்பட்டுள்ளது. அவர்களின் கூற்றின் பிரகாரம் மகாத்மா ஓர் பெண் பித்தர். எந்தப் பெண் தன்னிடம் வந்தாலும் தனது அந்தரங்கத்தினை வெளிக்காட்டுவார். இதற்கு வசதியாக இடுப்பில் ஓர் கதர் துணி கட்டி அகிம்சைக் கோலத்தைக் காட்டினார். இவர் இரவில் தூங்கும் போது தன்னுடன் இளம் பெண்களை உடுப்பில்லாமல் நிர்வாணமாக ஒரே போர்வைக்குள் உறங்கச் செய்யும் பழக்கத்தை கொண்டு இருந்தார். இவ்வாறு உறங்கும் பெண்களுடன் தனது இம்சைகளை தீர்த்து உள்ளார். முதிய வயதில் கூட சிறு பிள்ளைகளை விட்டு வைக்காது பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தி இருந்தார்.

இவர் தனக்கு கிடைத்த அதிகாரத்தையும், மக்களிடம் இருந்த கிடைத்த அதியுயர் மதிப்பையும் ஒரு ஆயுதமாகவே கருதி பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்த பயன்படுத்தினார். என்பதற்கு மேலாக மகாத்மா காந்தியை பகலில் அகிம்சா மூர்த்தியாக அரசியல் நடத்த காங்கிரஸ் முனைந்தமை மக்கள் மத்தியிலான இவர் செல்வாக்கு வேரூன்றச் செய்தது. மகாத்மா தனது மனைவியையும் துன்புறுத்தி உள்ளார். ஈற்றில் மனைவி சுகவீனமுற்ற போது மருத்துவ சிகிச்சை அளிக்க மறுத்து உள்ளார். மனைவி இறந்த பின் மகாத்மாவின் இளம் பெண் போதை மிகவும் சுலபமாக நடைபெற்றது. தனது பேரப்பிள்ளைகளின் மனைவியுடனும், இரவில் வக்கிரத்தைத் தீர்த்து உள்ளார். இவரது ஆச்சிரமத்தில் வாழ்ந்த 24 வயது மருத்துவப் பெண்ணுடனும் தனது ஆண்மையை சோதித்து உள்ளார். இவற்றை சத்தியசோதனை, அகிம்சை என்ற பெயரில் ஒரு கறை படிந்த நிகழ்வை நிகழ்த்தி உள்ளார். அடுத்து திருமணமான பெண் பிள்ளைகளையும் தனது வைப்பாட்டிகளாக வைத்து உள்ளார். அடுத்து ஒரு பாலுறவு, மிருகங்களுடனான உறவு என இவரிடம் தகாத பாலியல் உறவுகள் இருந்துள்ளன.

இந்த வாய்ப்பானது இரவில் துன்புறுத்தப்படும் பெண்களையும், பகலில் அகிம்சை முகத்தைக் காட்டி அரவணைக்கச் செய்தது. பாலியல் தேவையை நிறைவேற்றும் விதமாக தனக்கென தொகுத்துக் கொண்ட அகிம்சைக் கொள்கைகள் ஒருபுறமிருக்க எவரிடமும் சென்று நீதி கேட்க முடியாத அளவிற்கு இவரது மதிப்பு மரியாதை மற்றும் காங்கிரஸ் எனும் அரண் ஒருபுறமும், காங்கிரஸிற்குத் தேவையான பிரச்சார பீரங்கி காந்தி என்ற நிலையும், வறுமையில் சிக்கித் தவித்த நூற்றுக்கணக்கான பெண்களை காந்தியின் காமப்பசி தின்று தீர்த்தது.

இந்த உண்மையை வெளியிடும் போது இந்தியாவின் தேசியம் என்ற கட்டுமானம் அழிவுநிலையை அடையலாம் என்ற அச்சமும், இந்திய இறையாண்மை என்னும் ஒரு விடயத்தால் நீதி தவறிய, நீதி பெற முடியாத பாரத மாதாவிடம் முறையிட முடியாது பாதிக்கப்பட்ட பெண்கள் தவித்தனர். தம்மைத் தாமே காந்தியின் பாலியல் வக்கிரமத்திற்கு ஆகுதி ஆக்கினர். ஆனால் இன்றைய சூழலில் பாரதத்தில் காந்தி தொடர்பான முக மறைப்புக்களை வெளிக் கொணர வேண்டிய தேவை உள்ளது. ஏனெனில் பாரதத்தில் பெண்கள் மீதான வன்கொடுமைகளுக்கு துணைபோகும் தன்மை அதிகரித்து வருகின்றது. எனவே பெண் உரிமை பற்றிய அடிப்படைத் தத்துவங்களை வெளிக்கொணர மகாத்மாவின் வாழ்வின் தவறான முன்னுதாரங்களை எடுத்துக் காட்டுவது அவசியமாகும்.

மகாத்மா காந்தியினை இன்றைய பெண்ணியலாளர்கள் பின்வரும் பதினாறு காரணங்களில் குற்றம் காணலாம்.

01. Adulatory : முறையற்ற திருமணம்.
02. Wife bettering : மனைவியைத் துன்புறுத்தல்
03. Sexual pervert : பாலியல் விலகல் நடத்தை
04. Incest : உறவு முறையானவர்களுடன் தகாத பாலுறவு
05. Child abuse : சிறுபிள்ளை துஷ்பிரயோகம் செய்தல்
06. Nymph mania : பெண்வித்து
07. Sadism : பாலியல் துன்புறுத்தல் வக்கிரம்
08. Group sex : கூட்டான பாலியல் நடவடிக்கை
09. Bisexual : இருபாலருடனும் பாலியல் உறவு
10. Sexual abuse : பாலியல் துஷ்பிரயோகம்
11. Obsessional sex : பாலியல் வேட்கையுணர்வு
12. Exhibitionism : பாலியல் வேட்கைக்கான பிறப்புறுப்பு
13. Heterosexuality : பல பெண்களுடன் பாலியல்
14. Bestiality : மிருகங்களுடன் பாலியல் உறவு
15. Fetishism : பாலியல் நாட்டம் உள்ள பொருட்கள்
16. Paedophillia : குழந்தை மீது பாலியல் உறவு.

இத்தகைய குற்றங்களைப் புரிந்த நபரைத் தேசபிதா எனப் போற்றுவது, பெண்கள் மீதான வன்முறைகள் குறையாது இருப்பதற்குக் காரணமாகும்.

இந்திய தேசபிதா மகாத்மா காந்தி தொடர்பான மாற்று பார்வையை முன்வைக்கும் கட்டுரையிது. இதற்கு எதிர்வினைகள் இருப்பின் தாராளமாக அனுப்பி வைக்கலாம்.



## மல்லுக்கட்டும் நடிகைகள்

செல்வராகவனின் படம் 'நெஞ்சம் மறப்பதில்லை'. பெரும்பாலும் படப்பிடிப்பு முடிந்து விட்டது. படத்தில் ரெஜினா, நந்திதா என இரண்டு நாயகிகள். திடீரென அக்சன் படத்தைபோல இருவருக்குமிடையில் சண்டைக்காட்சியொன்றை செல்வராகவன் வைத்துள்ளார். முதலில் இருவரும் தயங்கியுள்ளனர். பின்னர் சண்டைப்பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதாம். விரைவில் இருவரும் தூள் பறக்க சண்டையிட, படமாக்கப்படவுள்ளது.

## கைகொடுத்த அதா சர்மா

கதைக்கு தேவையில்லாத ஒரு குத்துப்பாடலை சேர்க்க வேண்டுமென சிம்பு அடம்பிடித்ததே 'இது நம்ம அளு' படம் தள்ளிச் சென்றதற்கு காரணமாம். பேசியதை விட அதிக நாள் கால்சீட் தந்துவிட்டேன், இனியும் தர முடியாதென நயன்தாரா மறுக்க, பிறகு ஹன்சிகா, அன்ரியா என பலரை பிடித்து ஆட வைக்க முயன்றார் சிம்பு. இறுதியில் சிம்புவுக்கு செட்டானவர் அதா சர்மா. குத்துப்பாடல் நான்கு நாட்கள் சென்னையில் படம்பிடிக்கப்பட்டதாம். இனி விரைவில் திரைக்கு வருமாம் 'இது நம்ம ஆளு'.

## வெயிலில் கறுத்த நடிகை

'அகடம்', 'கங்காரு', 'கோடைமழை' உள்ளிட்ட சில படங்களில் நடித்தவர் பிரியங்கா. வேடம் பிடித்திருந்தால் மட்டுமே படத்தை ஒப்புக் கொள்கிறேன் என்கிறார் இவர். 'கோடைமழை' படத்தில் நடித்ததை பார்த்து பலரும் பாராட்டினார்கள் என்கிறார். அந்தப்படத்தில் சற்று கறுப்பானவராக தோன்ற வேண்டுமென இயக்குனர் சொன்னதும், தினமும் வெய்யிலில் நின்று கறுப்பாக மாறியதாக கூறினார். கிராமத்து பெண் வேடம் மட்டுமல்ல, மொடர்ன் பெண்ணாகவும் நடிப்பேன் என்றுள்ளார்.





## ராணாவிற்கு கம்பனி கொடுத்த டாப்ஸி

த்ரிஷாவுடனான காதல் முறிவின் பின்னர் ராணா பலருடன் இணைத்து கிசுகிசுக்கப்படுகிறார். இந்தப்பட்டியலில் இறுதியாக இணைந்துள்ளவர் டாப்ஸி. இந்தியில் இருவரும் இணைந்து நடிக்கும் படம் 'காஸி'. இருவருககுமிடையிலான நெருக்கம் படப்பிடிப்பு குழுவையே நெளிய வைக்கிறதாம். இது பற்றி கேட்டபோது டாப்ஸி சொன்னது 'எங்கள் நட்பை இருவருமே விரும்புகிறோம். உணவு விசயத்திலும் இருவருக்கும் பொதுவான ஒற்றுமை உள்ளது. விருப்பமான உணவை உண்ண கம்பனி தருவதற்கு ஒருவர் இருப்பது சந்தோசமல்லவா'.



# டூரிங் டாக்கீஸ்



## பஞ்ச் பேசும் மீனா மகள்

விஜயின் 'தெறி' படத்தில் தந்தை மகள் சென்ரிமென்ற் உள்ளதாம். மீனாவின் மகள் நைனிகாதான் விஜயின் மகளாக நடித்திருக்கிறார். இருவருக்குமான சென்ரிமென்ற் பாடலொன்றும் உள்ளதாம். படத்தில் நைனிகா பஞ்ச் வசனம் வேறு பேசி கலக்கியிருக்கிறாராம். அவர் பேசும் பஞ் ச் எல்லாம் விஜய் பேசுவதைப் போலவே உள்ளதாம். அதனால் 'தெறி' தியேட்டர்களிற்கு வரும்போது, விஜய்க்கு ஈடான பஞ்ச்களால் தெறிக்கும் என படக்குழு எதிர்பார்க்கிறது.



## காத்திருக்கும் அரவிந்த்

மதுரை டூ தேனி படத்தில் அறிமுகமானவர் அரவிந்த். சினிமாவில் மட்டுமல்ல, சின்னத்திரையிலும் நடித்துக் கொண்'டிருக்கிறார். நெகடிவ்வான வேடங்கள் என்றாலும் நடிக்க தயாராக இருப்பதாக அறிவித்துள்ளார். இவரது நடிப்பில் விரைவில் வெளிவரவுள்ள 'சூரத்தேங்காய்' நல்ல வரவேற்பை பெறுமென நம்புகிறார். அதில் கதையின் நாயகன் அவர்தான். அந்த படம் வெளியானால் தான் பேசப்படும் நாயகனாகிவிடுவேன் என கூறினார்.

## கழற்றிவிடப்பட்ட யுவன்

லிங்குசாமியின் படங்களிற்கு வரிசையாக இசையமைத்தவர் யுவன் சங்கர்ராஜா. இவற்றில் பல சூப்பர ஹிட் பாடல்கள். விசாலை வைத்து சண்டைக்கோழி 2 படத்தை எடுக்க முயற்சித்தார். இதற்கும் யுவன்தான் இசையமைக்கவிருந்தார். ஆனால் படம் கைவிடப்பட்டு விட்டது. இப்பொழுது அல்லு அர்ஜூனாவை வைத்து வேறொரு படம் எடுக்கவுள்ளார். இதில் ஆஸ்தான் இசையமைப்பாளர் யுவனை கழற்றிவிட்டு, அனிருத்தை ஒப்பந்தம் செய்துள்ளார் லிங்குசாமி.



## புதிய பொலிஸ்

பொலிஸ் வேடம் என்றாலே சொல்லி வைத்ததை போல சில நடிகைகளைத்தான் பிடிப்பார்கள். ஜெயம் ரவி நடிக்கும் புதியபடம் 'போகன்' இன்னொரு பெண் பொலிஸ் அதிகாரியை அறிமுகம் செய்து வைக்கவுள்ளது. விஜயின் துப்பாக்கி, அஜித்தின் ஆரம்பம் உள்ளிட்ட படங்களில் நடித்த அக்ஷரா கவுடாதான் அதில் பொலிஸ் வேடம் போடுபவர். அவருக்கு அடிதடி காட்சிகள் மட்டுமல்ல ஹீரோவுடன் டூயட்டும் உள்ளதாம். கதாநாயகி ஹன்சிகா.

# எக்ஸாம் என்ரரெயின்ற்மென்ற்


மதுஷா


நிரோஜா


டனூயா


சுபகீதன்

இந்தவாரம் எக்ஸாம் என்ரரெயின்ற்மென்ற்காக புறப்பட்ட நம்மிடம் சிக்கியவர்கள் மதுஷா, நிரோஜா, டனூயா, சுபகீதன். சும்மா கேள்விகள்தானே... கேளுங்கப்பா. சொல்லிற்று போய்க்கொண்டேயிருப்பம் என நால்வரும் ரெடியாகினார்கள்.

**கேள்வி: இலங்கை 20 அணியின் கப்டன் யார்?**
**விடை: அஞ்சலோ மத்யூஸ்**

***மதுஷா:*** *திரிமன்னதானே கப்டன்... ம்... பிழையாயிருக்குமோ... தெரியாதென்றே போட்டுவிடுங்கோ.. பரவாயில்லை.*

***நிரோஜா:*** *கடவுளே நான் அந்த விளையாட்டு பார்க்கிறதேயில்லை.. வேறயேதாவது கேளுங்க...*

***டனூயா:*** *அப்பிடியென்றால்... அப்பிடியும் ஒரு குறூப் புறப்பட்டிருக்கா... நல்லாயிருக்கே. (இதெல்லாம் ஓவராக இல்லையாம்மா?)*

***சுபகீதன்:*** *யாராயிருக்கும்... ம்... சந்திமால் தானே..*

**கேள்வி: எட்டுக்கால் பூச்சிக்கு எத்தனை கால்?**
**விடை: எட்டு**

***மதுஷா:*** *எட்டுக்கால் பூச்சிக்கு கால் எட்டுத்தானே இருக்கும்... இதையேன் சீரியசாக கேக்கிறியள்.. ஒருவேளை கூடக்கால் இருக்குமோ?*

***நிரோஜா:*** *நாங்களெல்லாம் ஸ்கொலர்சிப் சோதினையிலேயே இதுக்கு விடை சொன்ன ஆக்கள். எட்டுக்கால்தான். தெரியாட்டில் வடிவேலுவிட்ட கேட்டுப்பாருங்கோ.*

***டனூயா:*** *கேள்வியிலேயே விடையை வைச்சுக் கொண்டு வாறியள்... எட்டுக்கால் தான்.*

***சுபகீதன்:*** *ஓ கலாய்ப்பு கேள்வியெல்லாம் கேப்பியளோ... முதல் கேள்விக்கு விடை பிழையா சொன்னாலும் இதுக்கு சொல்லுவமில்ல... எட்டுத்தான்.*

**கேள்வி: தமிழரசுக்கட்சிக்கும் விக்னேஸ்வரனுக்கும் என்ன பிரச்சனை?**
**பதில்: சத்தியமாக தெரியாது.**

***மதுஷா:*** *அவரும் அந்த கட்சிதானே... இல்லையா?... பிறகேன் சண்டை பிடிக்கிறார். (இரகசியமாக கேட்கிறார் அவைக்குள்ள சண்டையா நடக்குது)*

***நிரோஜா:*** *அவையெல்லாம் கூட்டமைப்பு காரர்தானே. பிறகேன் சண்டை பிடிக்கினமென்றது தெரியலில்லை.*

***டனூயா:*** *யாருக்கண்ணா தெரியும்... ஏதோ சண்டைபோலத்தான் நியூசுகளில பார்க்கிறன். என்ன பிரச்சனையென்பது சத்தியமாக எனக்கு தெரியாது.*

***சுபகீதன்:*** *அரசியலா... நாங்களெல்லாம் அதுக்க வாறதேயில்லை... பிளீஸ் அடுத்த கேள்வி.*

**கேள்வி: மன்னாரிலுள்ள பெரிய குளம் எது?**
**விடை: கட்டுக்கரை குளம்**

***மதுஷா:*** *மன்னாரில குளமே இல்லை. தெரியாதா இது? (ம்... விளங்கும்)*

***நிரோஜா:*** *மன்னார்ர்ர் (இழுக்கிறார்). ஓ தெரியும். முத்தையன்கட்டுகுளம். (சுத்தம்)*

***டனூயா:*** *ஆரம்பம் தொடக்கம் பார்க்கிறன்... சும்மா தெரியாத கேள்வியளா கேட்டுக் கொண்டிருக்கிறியள்...*

***சுபகீதன்:*** *கட்டுக்கரைகுளம்தானே... ஆத்தா நான் பாசாயிட்டன்... பாசாயிட்டன்...*



சம்மாந்துறை கல்விவலயத்திற்குட்பட்ட நாவிதன்வெளி கோட்டத்தில் திருவானூர் விவேகானந்தா மகாவித்தியாலய மாணவி பரமானந்தம் சசிரேகா க.பொ.த சாதாரணதர பரீட்சையில் 9 ஏ சித்திபெற்றுள்ளார். மிகவும் பின்தங்கிய இந்த கோட்டத்தில் 9 ஏ சித்திபெற்ற ஒரே மாணவி இவராவார்.




ஆலங்குளம் சமூக குடிநீர் வழங்கல் திட்டம் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையால் நடத்தப்பட்ட கிராமிய குடிநீர் வழங்கல் செயற்றிட்டங்களிடையேயான போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளது.





# குழந்தைப் போராளி

குழந்தைப் போராளி 5

சைனா கெய்ரெற்சி
தமிழில்: தேவா

சில மாதங்கள் கழித்துப் புளோரிடா மாமி சுகவீனமுற்றுக் கட்டிலிலே காலத்தைக் கழிக்க நேர்ந்தது. அவர் உண்பதற்கோ, படிப்பதற்கோ ஏதாவது கேட்கும் ஒவ்வொரு முறையும் பாட்டி பெரிதாக சத்தம் போடுவார். நான் என் மாமிக்காக மிகவும் வருந்தினேன்.

ஒரு மாலைப்பொழுதில் கட்டிலில் துவண்டு கிடந்த புளோரிடா மாமியின் கையை எடுத்து என் மார்பில் வைத்துக் கொண்டேன். அவரிடம் எந்தச் சலனமும் தெரியவில்லை. நான் ஓடிச்சென்று பாத்திரங்கள் கழுவிக் கொண்டிருந்த மாமியிட் இது பற்றிச் சொன்ன போது பாட்டி அலட்டிக் கொள்ளவே இல்லை. தொடர்ந்து பாத்திரங்கள் கழுவுவதிலேயே பாட்டி கவனமாயிருந்தார். கடைசியில் நான் அழத் தொடங்கினேன். அப்போதாவது பாட்டி ஏதாவது செய்வார் என்பது என் எண்ணம். ஆனால் பாட்டியிடம் இருந்து கிடைத்த பதில் 'வாயை மூடு' என்பது தான். பாத்திரம் கழுவும் வேலையை முடித்துக் கொண்டுதான் பாட்டி வீட்டிற்குள் போனார். நானும் அவருக்குப் பின்னாலேயே சென்றேன்.

அடுத்ததாக என் நினைவில் வருவது வாகனங்கள் புடைசூழ எனது அப்பா ஒரு வெள்ளைக் காரில் பாட்டியின் பண்ணைக்கு வந்து சேர்ந்தது தான். வீட்டினுள் அப்பா அழுது கொண்டிருப்பதனைப் பார்த்தேன். அவருடன் வந்திருந்த அவரது சகாக்கள் செய்வதறியாது நின்றிருந்தனர். பின்பு ஒருவர் பின் ஒருவராக புளோரிடாவின் அறைக்குச் சென்று திரும்பினார்கள். அப்பா திரும்பி வரும் போது தலை தாழ்ந்து, உடல் சோர்ந்து சத்தமின்றி அழுதபடி வந்ததால் அப்பாவை நெருங்க முடியாத ஒரு சங்கடமான நிலை. யாருமே என்னைக் கவனிக்கவில்லை. என்ன நடக்கிறது என்பதை விளக்கவும் இல்லை. நானும் கழக்கம் போல ஆத்திரமும் கையாலாகாத்தனமும் கலந்த மனநிலையில் நின்று கொண்டிருந்தேன். இப்போது பாட்டியும் அழத்தொடங்கினார். பாட்டியின் அழுகை என்னை ஒரு தரம் உலுக்கியெடுத்தது. ஒரு வேளை இதுவொரு அருமையான காட்சிப் பிழையோ? அவரின் நோயில் விழுந்த கண்ணைப் பார்த்துப் பாட்டி அழுவதாக கற்பனை செய்கிறேனோ? பாட்டியா இன்னொருவருக்காக அழுவது?




எல்லோரது கண்ணீரும் புளோரிடாவைத் திரும்பச் சுய நினைவிற்குக் கொண்டு வந்தது. உடனே வீட்டன் தொனி மாறி ஒலிக்கத் தொடங்கியது. அழுது கொண்டிருந்தவர்கள் கூத்தடிக்கத் தொடங்கினார்கள். எல்லோரும் குடித்துக் கொண்டும், சிரித்துக் கொண்டும் பாடிக் கொண்டும் இருந்தனர். எனக்கோ ஒன்றும் புரியாத நிலையாயினும், அந்த ஆட்டமும், பாட்டமும் எனக்குப் பிடித்துத் தான் இருந்தது. எனது தந்தைக்கும், அவரது நண்பர்களுக்கும் ஒரு வேளை பைத்தியம் பிடித்திருக்குமோ? வேலைக்காரனுக்கு இரண்டு ஆடுகளை வெட்டு எனக் கட்டளை பிறப்பிக்கப்பட்டது. ஓ! எனது ஆடுகள்ஞ் அவற்றின் பக்கத்தில் நான் நின்றேன். நான் நேசித்த ஆடுகள் கழுத்துகள் அறுபட்டு இரத்தம் ஓடி செத்துக் கிடந்தன. அவைகளுக்கு நான் பெயர்களைக் கூட வைத்திருந்தேனே. இப்போது அழுவது என்னுடைய முறை. நான் வீட்டினுள் ஓடிச்சென்று போர்வைக்குள் என்னைப் புதைத்துக் கொண்டேன். இந்தப் பைத்தியக்கார கும்பலில் இருந்து தப்பிக்க அது தான் எனக்கு ஒரே வழி.

அடுத்த நாள் காலையில் புளோரிடா மாமி முன்னறையில் இருந்தார். இன்னும் அவர் சோர்வாகவே காணப்பட்டார். அவரைச் சிறிது உற்சாகப்படுத்த எண்ணி நானும் அவர் பக்கத்தில் போயிருந்து 'நேற்று எல்லோரும் அழுதது உங்களுக்குக் கேட்டதா?' எனக் கேட்டேன். 'நான் நன்றாகத் தூங்கியிருக்க வேண்டும், அதனால் எனக்குக் கேட்கவில்லை.' என மாமி சொன்னார். நான் அவரை நிமிர்ந்து பார்த்த போது அவரின் கண்களில் கண்ணீர் வந்தது. எனது தந்தை அவரை நகரத்திற்கு அழைத்துச் செல்ல விரும்புவதாகவும், என்னை விட்டுப் பிரிய வேண்டியிருப்பது தனக்கு வருத்தமாயிருப்பதாகவும் மாமி சொன்னார். இந்தச் செய்தி என்னை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. நான் என்னை விட்டுப் போக வேண்டாம் என மாமியிடம் கெஞ்சிக் கேட்டேன். "கொஞ்ச நாட்களுக்குத் தானே" என மாமி என்னை சமாதானப்படுத்தினார். கொஞ்ச நாட்கள் என்பதன் அர்த்தம் என்ன? சில நாட்கள்? ஒரு மாதம்? ஒரு வருடம்? இது சிறுமியான என்னால் விளங்க முடியாத ஒரு கணக்கு வழக்கம் போலவே அச்சம் என்னை உலுக்கியெடுக்க நான் ஆடுகளையும், மாடுகளையும் தேடி ஓடினேன். எனது அச்சத்தை வெல்ல ஆடு, மாடுகளுக்காக நானே இட்டுக்கட்டிய ஒரு பாட்டை நான் வாய்விட்டுப் பாட மேய்ச்சல் நிலத்தில் என் கண்ணீர் துளிகள் ஒன்றன் பின் ஒன்றாகத் தெறித்தன. நான் வீடு திரும்பிய போது புளோரிடா மாமி அவர்களுடன் போய்விட்டார். அதன் பின்பு நான் அவரைக் காணவேயில்லை.

FREE Classified Ads
சிறு விளம்பரங்களுக்குக் கட்டணமில்லை
HURRY
Limited time only
விரையுங்கள்
குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும்
தலைப்பு மற்றும் 4 வரிகள் முற்றிலும் இலவசம்




*Subject to approval.

தீபம் வார இதழில் தங்கள் சிறு விளம்பரங்கள் மற்றும் பொது நிகழ்வுகள் பற்றிய அறிவித்தல்களை இலவசமாக வெளியிட அழையுங்கள்.
076 825 5567
sales@deepam.lk

# கோபத்தை குறைத்திடுவோம்



> “ஒரு மனிதனின் வெற்றிக்கு தடையாக இருப்பதில் மிக முக்கியமானது கோபமாகும். கோபம் கொள்வதால் நமது சிந்தனை, கவனம் போன்றன சிதறடிக்கப்படுகின்றன. சரியான சமயத்தில் செய்ய வேண்டிய செயல்கள் இதனால் பாதிக்கப்படுகின்றன.”

எல்லா மனிதர்களுக்கும் உள்ள பிரதான பிரச்சனை கோபம். கோபத்தால் உறவுளிற்குள் விரிசல் வருகிறது. கோபப்படுபவரின் ஆரோக்கியம் கெடுகிறது. இப்படி எல்லா விதத்திலும் கோபம் கேடானது.

கோபம் வெளிப்படும் முறையும் வித்தியாசம். சிலபேர் அழுவார்கள், சிலபேர் கையை பிசைவார்கள், பல்லைகடிப்பார்கள், கையை ஓங்கி குத்துவார்கள் (சுவற்றிலோ அல்லது அடுத்தவர் மூக்கிலோ), மூச்சென கத்துவார்கள், கையில் கிடைத்ததை போட்டு உடைப்பார்கள். ‘உர்’ என முகத்தை நீட்டிவைத்தபடி இருப்பார்கள். இன்னும், சிலர் கையில் கிடைப்பதையெல்லாம் கிழித்தெறிவர். சரியோ தவறோ கோபப்படுவது அவ்வளவு நல்ல குணம் அல்ல. ஆனால் கோபத்தை எப்படி கட்டுப்படுத்துவது?

1. கோபத்தின் முக்கிய காரணியான வெறுப்பை கைவிடுங்கள். மற்றவர்களையும் அன்போடு பாருங்கள். நிதானமாக கோபமூட்டிய நபரின் சூழ்நிலையை சிந்தியுங்கள்.
2. கோபத்தை ஏற்படுத்தும் நிகழ்ச்சிகளை தவிர்த்திடுங்கள். உடனே உங்கள் மனதை வேறு விசயத்தில் திருப்புங்கள்.
3. அவசரம் ஒருபோதும் வேண்டாம். பொறுமையாக இருங்கள்
4. நேரம் மேம்பாடு மற்றும் சுய கட்டுப்பாட்டை கடைப்பிடியுங்கள்.
5. செய்யும் வேலையை நேசத்துடனும், நேர்மையுடனும், குழப்பம் இல்லாமலும் செய்யுங்கள்.
6. அந்த இடத்தை விட்டு நல்ல காற்றோட்டமான இடத்துக்கு சென்று விடுங்கள். அந்த நிகழ்வை பற்றி நினைக்காமல் நன்றாக மூச்சை இழுத்து விடுங்கள். இது உங்களை சாந்தப்படுத்தும்.
7. ஒரு மனிதனின் முகம் மிக அசிங்கமாக இருப்பது அவன் கோபப்படும்போதுதான். ஆகவே கோபம் வந்தால் உடனே கண்ணாடியில் முகத்தை பாருங்கள் (கண்ணாடி கைக்கெட்டும் தூரத்தில் இல்லாமல் இருப்பது நலம்). அசிங்கமான நம் முகத்தை பார்க்கும்போது நமக்கு சிரிப்பு வரும். அதன்பின் எப்போது கோபம் வந்தாலும் நம் முகம்தான் ஞாபகத்துக்கு வரும்.
8. கோபத்தில் தொலைவில் இருக்கும் யாரை யாவது தாக்கவேண்டும், அல்லது திட்ட வேண்டும் என்றால், அதை கொஞ்சம் தள்ளிப்போடுங்கள். சாயங்காலம் திட்டலாம், நாளைக்கு கச்சேரியை வைத்துக் கொள்ளலாம் என்று தள்ளிப்போடுங்கள். தள்ளிப்போட்ட எந்த காரியமும் உருப்பட்டதில்லை.
9. உங்கள் மனதுக்கு பிடித்த இசையை கேளுங்கள். வலுக்கட்டாயமாக இல்லாமல், இயல்பாக கேட்க ஆரம்பியுங்கள். இசை கேட்க விருப்பம் இல்லை என்றால் கார்டூன் சேனல் பாருங்கள்.
10. குழந்தைகளோடு உரையாடுங்கள். கோபம் பறந்துவிடும். இல்லை இரண்டு குழந்தைகளுக்கு இடையே நடக்கும் நிகழ்வுகளை கவனியுங்கள். பிறகு உங்களுக்கு அதே போலத்தானே நாமும் செய்கிறோம் என்று வெட்கபடுவீர்கள்.
11. ஜப்பானியர்கள் பொதுவாக கோபத்தை குறைக்க தலையணையை அடித்து துவைப்பார்களாம். ஆகவே தனக்கு காயம் ஏற்படுத்தாத இந்த முறையை பின்பற்றலாம்.

கோபம் உன்னையே அழித்து விடும்: உண்மையான பலசாலி யாரெனில் தன் வலிமையால் மக்களை அடக்குபவன் அல்ல. மாறாக கோபம் வரும்போது தன்னை அடக்கிக் கொள்பவனே

“ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு, ஆத்திரம் அழிவைத் தரும்” என்பதெல்லாம் கோபத்தினால் ஏற்படும் விளைவுகள் குறித்து சொல்லப்படும் வழக்குகள்...

### கோபம் ஏன் ஏற்படுகின்றது?

கோபம் என்பது உடல் ரீதியாக, மன ரீதியாக, சமூக ரீதியாக, உளவியல்ரீதியாக, உணர்ச்சிப் பூர்வமான, சுற்றுச்சூழல் சார்ந்த பல விஷயங்களுடன் நமக்கு உண்டாகும் எதிர்மறையான சூழ்நிலை காரணமாக உண்டாகிறது.

- நாம் சொல்வதை (நம்மைவிட எளியவர்கள் என்று நாம் நினைக்கும்) மற்றவர்கள் மதிக்காத போது...
- நம்முடைய பிரச்சனைகளை உரியவர்கள் உடனே நிவர்த்தி செய்யாத போது...
- நாம் சொல்வது (தவறாகவே இருந்தாலும்) தவறு என்று பலர் முன்னிலையில் விமர்சிக்கப்படும் போது...
- எதிர்பார்த்த மரியாதை கிடைக்காத போது இப்படியே பல காரணங்கள் உள்ளன.

ஒருவன் நம்மைப் பார்த்து “கழுதை” என்று திட்டும்போது நாம் “குரங்கு” என்று பதிலுக்குத் திட்டினால் அந்தச் செயல்தான் reaction ஆகும்.

ஆக உடனே சிந்திக்காமல் ஏற்படும் ஒரு வித அதிருப்தியான வெளிப்பாடு தான் கோபம். அல்லது நம்மை நாமே தாழ்த்திக் கொண்டு சிந்திக்கும் போது ஏற்படும் எதிர் விளைவு கோபமாகும்.

### கோபம் தன்னையே அழித்து விடும்

ஒரு மனிதனின் வெற்றிக்கு தடையாக இருப்பதில் மிக முக்கியமானது கோபமாகும். கோபம் கொள்வதால் நமது சிந்தனை, கவனம் போன்றன சிதறடிக்கப்படுகின்றன. சரியான சமயத்தில் செய்ய வேண்டிய செயல்கள் இதனால் பாதிக்படுகின்றன. நம்மை சுற்றி இருப்பவர்களைப் பற்றியும் சூழ்நிலையையும் உணராது நமது செயல்கள் பெரிய பின் விளைவுகளை ஏற்படுத்தி விடுகின்றன. அவற்றுள்...

- வாழ்வின் சந்தோசத்தை பறித்து விடும். (கோபமும் சந்தோசமும் ஒன்றுக்கொன்று எதிரானவைகள்)
- தொழிலை முடக்கி விடும். காரணம் தொழில் என்பது தொடர்புகளுடன் சம்பந்தப்பட்டது.
- மன இருக்கத்தை ஏற்படுத்தி இருதய வியாதிக்கு வழிவகுக்கும்.
- முறையாக சிந்தித்து செயல்படுவதை தடுத்து நமது செயல்களை தவறானதாக்கி விடுகின்றது... கோபம், மாரடைப்பு முதலான இருதய நோய்களை உண்டாக்கி உயிரைப் பறித்து விடும் என்று வல்லுநர்கள் கூறுகின்றார்கள். 55 வயதுக்கு கீழே உள்ளவர்கள் கோபப்பட்டால் அவர்கள் மாரடைப்பு உள்ளிட்ட இருதய வியாதிகளால் உயிரிழப்பதற்கான வாய்ப்பு 3 மடங்கு ஆகும். ஆனால் 55 வயதுக்கு கூடுதலாக இருந்தால் உயிரிழப்பு ஆபத்து 6 மடங்காக உயர்கிறது.
- கோபமானது இதய ரத்த நாளங்களை கடினமாக்கும் அடைப்புகளை திடீரென சிதைப்பதால், அங்கே அடைப்பு வேகமாக உண்டாக வாய்ப்பு ஏற்படும். இது மாரடைப்பில் விட்டு விடும்.
- இதயத் தசைகளில் வலிப்பு, இதயத் துடிப்பில் பாதிப்பு, உயர் ரத்த அழுத்தம், ஆஞ்சைனா எனப்படும் நிலையற்ற நெஞ்சு வலி போன்ற சிக்கல்களும் கோபத்தினால் ஏற்படும் விளைவுகள் தான்.
- மூளையை தாக்கும் பக்கவாதத்துக்கு கூட கோபம் காரணமாக அமைவதுண்டு. ஆக, கோபம் உங்களை அழிப்பதற்கு முன் நீங்கள் அதை அழித்து விட வேண்டியது முக்கியம்.

### கோபத்தைக் கட்டுப்படுத்துதல்:

கோபம் வரும்போது குறிப்பிட்ட மனிதன் தன்னிலை இழக்கிறான். இதனால் தான், கோபத்தில் கொந்தளிப்பவர்களுக்கு வியர்வை, நடுக்கம், மூக்கு விடைத்துக் கொள்தல், தூக்கமின்மை, ஓய்வின்மை, நெஞ்சுவலி, மாரடைப்பு, ரத்த அழுத்தம் திடீரென அதிகரித்தல், எரிச்சல், தசைகள் கெட்டித்தன்மை ஆவது, தலைவலி போன்ற பல பிரச்சினைகள் தோன்றுகின்றன அதனால் கோபத்தை அளவோடு வைத்து கொள்ளுங்கள்.





மட்டக்களப்பு துறைநீலாவணை உச்சிமா காளிம்மன் ஆலயத்தின் வருடாந்த தீமிதிப்பு அண்மையில் நடந்தது.




# முயற்சி... முயற்சி... முயற்சி
# அதுவே வெற்றியின் தாரக மந்திரம்

## கிறீன்கிறாஸ் உரிமையாளரின் வெற்றிக்கதை

கையில்வெறும் ஆறுலீற்றர் மண்ணெண்ணெய் கான். காலை தொடக்கம் மாலை வரை ஓயாத மண்ணெண்ணெய் வியாபாரம். இன்று யாழ்ப்பாணத்தின் பெயர் சொல்லும் நட்சத்திர ஹோட்டல்களின் உரிமையாளர். ஓய்வில்லாத முயற்சிதான் தன்னை இன்று வெற்றிப்படிக்கட்டில் ஏற வைத்துள்ளதாக அமைதியாக புன்னகைக்கிறார் ஜெகசீலன். யாழ்ப்பாணத்தில் உள்ள கிறீன்கிறாஸ்,வலம்புரி ஹோட்டல்கள், ஜெகன் பார்மசி என்பவற்றின் உரிமையாளர்.

'சிறுவயதிலேயே தந்தையை இந்து விட்டேன். ஐந்து சகோதரர்களுடன் கூடப்பிறந்தேன். குடும்பம் மிக வறுமையான நிலையில் இருந்தது. எனக்கப்போது பதின்னான்கு வயது. குடும்ப வறுமையை போக்க தொழிலில் இறங்கினேன். அந்தச் சமயத்தில் மாலை ஆறுமணிக்கெல்லாம் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூடப்பட்டுவிடும். நான் ஆறுலீற்றர் கானுடன் வீதிக்கு வந்தேன். அதில் மண்ணெண்ணெய் கொண்டு திரிந்து தேவையானவர்களிற்கு கொடுத்தேன். அதில்தான் எனது குடும்பசீவியம் நடந்தது. காலப்போக்கில் கடவுளின் கிருபையும் எனது முயற்சியும் சேர்ந்து படிப்படியாக முன்னேறினேன். ஆறுலீற்றர் அறுபது லீற்றரானது. பின்னர் யாழ்ப்பாணத்திற்கான மண்ணெண்ணெயை மொத்தமாக கொள்வனவு செய்தேன்' என வெற்றிக்கதையை தொடர்ந்தார் ஜேகசீலன்.

'அடுத்ததாக வாகன உதிரிப்பாக கடையொன்றை ஆரம்பித்தேன். யாழ்ப்பாணத்திற்கு வாகனங்கள் அதிகமாக வரத் தொடங்கியது. மண்ணெண்ணெய் வியாபாரம் முன்னேற்றமடைந்து யாழ்ப்பாணத்தின் மண்ணெண்ணெய் விலையை கூட தீர்மானிப்பவனாக மாறினேன். பின்னர் யாழ் போதனா வைத்தியசாலையின் முன்பாக கடைத்தொகுதியொன்றை வாங்கினேன். 'ஜெகன் பார்மசி' என்ற மருந்தகத்தை ஆரம்பித்தேன்.

2009 இன் பின்னர் யாழ்ப்பாணத்திற்கு மக்கள் அதிகம் வரத் தொடங்கினார்கள். வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளும் அதிகமாக வந்தனர். நான்கு அறைகள் கொண்ட வீட்டை விடுதியாக்கினேன். பின்னர் அது பிரபலமாக படிப்படியாக விஸ்தரிக்கப்பட்டு இன்று பெரிய ஹோட்டலாகிவிட்டது' என்றார். அனுபவம்தான் சிறந்த ஆசான் என்கிறார் அவர். 'கல்வி முன்னேற்றத்திற்கான ஒரு வழிதானே தவிர, கல்விதான் வழியென்பதல்ல. அனுபவத்தை போன்ற ஆசான் வேறெங்குமில்லை. ஒரு விடயத்தில் தோல்வியடைந்தால் துவண்டு போய்விடக் கூடாது. தன்னம்பிக்கையுடன் போராடினால் வெற்றியடையலாம். உயர்கல்வியறிவு, ஆங்கில அறிவெல்லாம் ஆரம்பத்தில் எனக்கிருக்கவில்லை. 14 வயதில் தொழில் தொடங்கிய நான்தான் இன்று உலகெங்குமிருந்து வரும் சுற்றுலா பயணிகளை உபசரிப்பதுடன், இவ்வளவு பெரிய நிறுவனங்களை நடத்துகிறேன். முயற்சிதான் காரணம்.

இங்கிருந்தால் உழைக்க முடியாது. வெளிநாடுதான் போக வேண்டுமென பலர் நினைக்கிறார்கள். ஆனால் உண்மை அதுவல்ல. தாய்மண் நம்மை கைவிடாது. முயற்சி செய்யுங்கள். இளையவர்களிற்கு நான் கூறுவது அதைத்தான். நேர்மையாக முன்னேறுங்கள். நாகரிக மாற்றங்கள் வந்தாலும் நமது கலாசாரம், பாரம்பரியங்களை பேணுங்கள். நாம் வாழ்ந்தோம் என்பதை விட அடுத்த தலைமுறைக்கு எதை விட்டுச் சென்றோம் என்பதே முக்கியம்' என அர்த்தம் தொனிக்க பேசினார் ஜெகசீலன்.








அம்பாறை மாவட்டம் காரைதீவு சண்முகா மகா வித்தியாயலத்தின் 63வருடகால வரலாற்றில் முதல்தடவையாக க.பொ.த. சா.த பரீட்சையில் 9ஏ சித்திகளைப்பெற்று சித்தியெய்தியுள்ளார் மகேந்திரன் சோவனா.

திருமதி
ச.கார்த்திஹாயினி
வின்னீஸ் லக்கி
இந்தியன் பியூட்டி பார்லர்
திருநெல்வேலி
Joykarthiha 3014@gmail.com





# அழகின் இரகசியம் 11

**கொழுப்பை குறைக்க**

லவண்டெர் எண்ணெய் 3 துளிகள்
ஜீனிபர் எண்ணெய் 1துளி
இவற்றுடன் 20 மில்லி லீற்றர் பாதாம் எண்ணெயை கலக்கவும். இடுப்பு தொடை வயிறு போன்ற சதை அதிகமாகவுள்ள இடங்களில் மசாஜ் செய்யலாம்.

**றோஸ் றொனிக்**

றோஜா எண்ணெய் 25 துளிகள்
மினரல் வோட்டர் 100 மில்லி லீற்றர்
கலந்து தேய்த்து லேசாக தட்டினால் போதும் மசாஜ் கொடுக்க வேண்டாம்.

**கரும்புள்ளிகள் போக**

அரோமா ஸ்கின் எண்ணெயை ஒரு வெள்ளைத் துணியில் நனைத்து முகத்தில் போடவும். 15 நிமிடங்களுக்கு பிறகு எடுத்தால் சருமத்தில் உள்ள கரும் புள்ளிகள் போய் சருமம் மென்மையாகும்.

**பருக்கள் மறைய**

அரோம விளக்கில்(எல்லா மண்பாண்ட கடைகளிலும் கிடைக்கும்) மேல் பாகத்தில் டீ ப்ரீ எண்ணெயில் நீர் கலந்து வைக்கவும். அடியில் உள்ள அகல் விளக்கில் ஏதாவது ஒரு எண்ணெய் பயன்படுத்தி திரியேற்றி எண்ணெய் சூடானதும் முகத்தை அருகில் கொண்டு சென்று ஆவி படும் படி வைக்கவும். இதனால் பரு மற்றும் தழும்பு வராது.

தினம் ஒரு முறையாவது பூக்களை உபயோகப்படுத்தி அந்த நீரில் முகம் கழுவுவது நல்லது. ஒரு கப் நீருக்கு இரண்டு அல்லது மூன்று ரோஜாப் பூக்களின் இதழ்களை போட்டு கொதிக்க வைக்கவம். அந்த நீர் ஆறிய பிறகு முகத்தில் பூசினால் தோல் இறுக்கமாகும். நிறத்திற்கு மெருகூட்டும்.

வெய்யிலினால் ஏற்படும் கண் எரிச்சலுக்கு தாழம்பூவை வேகவைத்து ஆறிய பிறகு அந்த நீரை பூசவும். இந்த நீர் மிகவும் வாசனையாகவும் குளிர்ச்சியாகவும் இருக்கும். தாழம்பூ கிடைக்கவில்லை எனில் 1 லீற்றர் சுடு தண்ணீரில் மல்லிகை பூக்களை போட்டு ஊற வைத்து அது ஆறியதும் வடி கட்டி ஃப்ரிட்ஜில் வைத்து கொள்ளவும். தேவைப்படும் பொழுது கண் முகம் கழுவ இந்த நீரை உபயோகப்படுத்தலாம்.

ஒருலீற்றர் தண்ணீரை கொதிக்க வைக்கவும். 25 ரோஜா பூக்களை அதில் போட்டு மூடி வைக்கவும். றோஜா இதழ்களின் சாறு நீரில் இறங்கும். இந்த நீர் ஆறியதும் வடி கட்டி எடுத்து வைக்கவும். தேவைப்படும் பொழது முகம் கழுவ இதை உபயோகப்படுத்தலாம்.

மஞ்சள் ஒரு சிறந்த கிருமி நாசினி. அதனாலேயே எந்த ஒரு நிகழ்வை தொடங்குவதற்கு முன்னும் மஞ்சள் பொடியில் பிள்ளையார் பிடித்து வைக்கின்றார்கள். வேரில் இருந்து விளைய கூடியது மஞ்சள். உடலில் உள்ள பல நோய்களை குணமாக்கும் சக்தி மஞ்சளுக்கு உண்டு. குறிப்பாக சளி இருமல் தொல்லை இருந்தால் பாலில் மஞ் சள் பொடி கலந்து சாப்பிடலாம். மூக்கில் அதிகமாக நீர் வடிந்தால் மஞ்சளை தீயில் வாட்டி அதன் புகையை நுகர்ந்தால் உடனடியாக பலன் கிடைக்கும்.

எந்தவொரு பிரச்சினை உடலில் ஏற்பட்டாலும் அது முகத்தில் தெரியும். கல்லீரலில் ஏதாவது பிரச்சினை இருந்தால் முகத்தில் கரும்புள்ளி தோன்றும்.

அந்தக் காலத்தில் உடலின் மேற்புறத்தில் ஏற்படும் பாதிப்புக்களுக்கும் வீக்கத்திற்கும் மஞ்சள் பத்து போடுவார்கள்.

கால் பாதங்களில் ஏற்படும் பித்த வெடிப்பிற்கு விளக்கெண்ணையுடன் மஞ்சள் கலந்து பூசலாம். அந்தக் காலத்தில் எல்லாம் பெண்கள் மஞ்சள் தேய்த்து குளிப்பது அழகுக்காக மட்டுமல்ல. முகத்தில் கை கால்களில் வளரும் வேண்டாத ரோமங்களை அகற்றவும் தான்.

மஞ்சளில் இரு வகைகள் உண்டு.

விரலி மஞ்சளை பொதுவாக சமையலுக்கு அதிகமாக உபயோகப்படுத்துகின்றோம். நல்ல நிறத்தையும் கொடுக்க கூடியது. கஸ்தூரி மஞ்சள் என்பது கலர் இல்லாதது. குளியல் பொடியுடன் கஸ்தூரி மஞ்சளை சேர்த்தால் வாசமாகவிருக்கும். அழகு நிலையங்களில் கஸ்தூரி மஞ்சளை பொதுவாக முகத்திற்கு போடும் பக்கிற்கு உபயோகப்படுத்துவோம்.

முன்பு இயற்கை உரங்கள் போட்டு எல் லாமே விளைந்தன. தற்பொழுது இராசாயன கலப்புமிகுந்தபூச்சிகொல்லிமருந்துஉபயோகப் புடுத்துகின்றார்கள். இதனால் சருமப் பாதிப்பு மற்றும் உடல் ஆரோக்கியம் கெடுகிறது.



# புதிதாக சாறி வாங்க போறீங்களா?

இன்றய பெண்கள் சாறி கட்டுவதே அரிது. கட்ட சொல்லி யாரும் கேட்டாலே 'பெண்களை கட்டிப் போடாதீர்கள்' என்று கொந்தளிக்க தொடங்கிடுவர். ஆனாலும் தமக்கு விருப்பமான அல்லது சம்பிரதாய விழாக்களில் அழகாக சாறி கட்ட வேண்டும் என்பது பெண்களின் அலாதிப் பிரியம். அதனால் சாறியை பிடித்தால் சரி என்று பணத்தை கண் மண் தெரியாமல் அழித்து விடுபவர்களும் உண்டு. எனவே நீங்களும் சாறி தெரிவின் பொழுது கவனிக்க வேண்டிய விடயங்கள் உள்ளன.

நல்லதாக நான்கு கடைகளில் விசாரித்து வாங்க வேண்டும் . நான்கு கடைகளில் விசாரிக்கும் போது நீங்கள் தேடும் சாறியின் விலை எவ்வளவு என்று விளங்கும் . எந்த கடையில் விலை குறைவாக சொல்லுகிறார்களோ அங்கு வாங்குங்கள் .

துணியின் வித்தியாசம், பளபளப்பு எல்லாவற் றையும் கவனிக்கவும். நீங்கள் வாங்கும் சாறி தோய்த்து தோய்த்து பாவிக்கலாமா என்பதையும் கவனிக்கவும் .

விசேட தினங்களுக்கு கட்டும் சாறியை மரண சடங்குக்கு கட்ட கூடாது . அவற்றை விசேட தினத்திற்கு மட்டும் உடுத்துங்கள் .

சடங்கு வீடுகளுக்கு கட்டுபவை சாதாரணமாக இருந்தால் சரி. அவை தோய்த்து தோய்த்து மீண்டும் பாவிக்க கூடியதாக இருந்தால் நன்று.

பெரும் பணச்செலவில் வாங்கும் சாறிகளை அதிகமாக வாங்கிப் பயனில்லை. அதிக செலவில் பாவனை குறைந்த சாறிகளை வாங்குவதும் பொருத்த மில்லை. சாறிகளை கடையில் வாங்கி பெட்டிக்குள் அடுக்கி வைப்பது பலன் இல்லை. அப்பிடி சேர்த்து வைக்கும் பேர்வழிகள் இன்னும் இருக்கத்தான் செய்கிறார்கள் .

அந்தந்த காலத்துக்கு ஏற்றபடி என்னென்ன டிசைன் வருகிறதோ அதை வாங்கி கட்டலாம். வாங்கி அடி பெட்டிக்குள் சேர்த்து வைப்பதெல்லாம் இந்த காலத்துக்கு ஒத்து வராது . இதை சில பெண்மணிகள் உணர்வதில்லை .

வைத்தியகலாநிதி
ம.தக்ஷாயினி
உதவி சுகாதார வைத்திய அதிகாரி
சுகாதார வைத்திய அதிகாரி
பணிமனை - நல்லூர்

சரியான முறையில் தாய்ப்பாலூட்டுதல் எவ்வாறு என கடந்த வாரங்களில் பார்த்திருந்தோம். இம் முறை தாய்ப்பாலூட்டுதலில் தாய்மார் எதிர்நோக்கும் பொதுவான பிரச்சினைகளை பார்ப்போம்.

முதலாவதாக தாய்ப்பால் சுரக்கும் முறையை விளங்கி கொள்ளுதல் வேண்டும்.

**தாய்ப்பால் சுரக்கும் விதம்.**

குழந்தை ஒன்று மார்பகத்தில் பாலை குடிக்கும் போது ஏற்படும் தூண்டலினால் புரோலக்ரின் என்கின்ற ஓமோன் அடுத்த தடைவ தாயினுடைய இரத்ததில் அதிகரிக்கும். இவ் ஓமோன் அதிகரிக்கும் பொழுது பால் சுரக்கின்றது. குழந்தை சரியாக பாலை குடிக்குமானால் சுரந்த பால் மார்பகத்தில் இருந்து வெளியேற்றப்படுமானால் மீண்டும் இதே சுழற்சி பொறிமுறை மூலம் பால் சுரக்கும்.

அதே வேளை தாய்ப்பாலூட்டலின் போது குழந்தையை சரியான முறையில் நிலைப் படுத்தி பாலூட்டாவிடில் குழந்தையால் சுரந்த பாலினை முழுமையாக குடிக்க முடிவதில்லை. எனவே எஞ்சிய பால் மார்பகத்தில் பால் சுரப்புக்களில் சேமிக்கப்படுகின்றதனால் ஏற்படும் தூண்டல் காரணமாக தாய்ப்பால் உற்பத்தி குறைவடைகின்றது.

எனவே ஒவ்வொரு தடைவ தாய்ப்பால் கொடுக்கும் பொழுதும் குழந்தையை சரியாக நிலைப்படுத்தி முழுமையாக பாலை கொடுக்க வேண்டும். இவ்வாறு கொடுக்கும் பொழுது மார்பகத்தில் சுரந்த பால் முழுமையாக வெளியேற்றப்பட அடுத்த தடைவ பாலூட்டுவதற்கான பால் முழுமையாக சுரக்கின்றது.




**மார்பகத்தில் சுரக்கும் பால் போதாதுவென்று நினைத்தல்**

பொதுவாக இலங்கையில் பெரும்பாலான தாய்மார் மட்டும் ஊட்ட வேண்டிய காலத்தில் குழந்தைக்கு பால்மா ஊட்ட தொடங்குவதன் காரணம் குழந்தைக்கு பால் போதாது என்று நினைப்பதே. ஒரு பன்னீற்று சிசுவினது இரப்பை கொள்ளளவு 20மில்லி லீற்றர் ஆகும். அதாவது நான்கு தேக்கரண்டியாகும். முதல் ஓரிரு தினங்களில் மார்பகத்தில் கரும்பு பால் மட்டுமே உற்பத்தி செய்யப்படுகின்றது. குழந்தை தொடர்ந்து உறிஞ்சும் போது ஏறத்தாழ மூன்றாம் நாளிலிருந்த பால் உற்பத்தி பெருக தொடங்கும்.

குழந்தையின் இரப்பை நான்கு தேக்கரண்டி கொள்வனவே என்பதனால் முதல் ஓரிரு நாட்களுக்கும் சிறிய அளவில் சுரக்கும் கடும் பால்போதுமானதாக இருக்கும்.

**குழந்தை பால் குடித்தவுடன் அழுதல்**

எனினும் குழந்தை பால் குடித்தவுடன் அழுகின்றதே எனக் கேட்க கூடும். பால் போதாமையினால் தானோ என்ற சந்தேகம் எழக் கூடும். நீங்கள் சரியான முறையில் (கடந்த வாரங்களில் தாய் பால் ஊட்டல் கட்டுரையில் குறிப்பிட்டது போல்) பாலூட்டியபின்பும் குழந்தை அழுகின்றது என்றால் அதற்கு காரணம் குழந்தை பால் குடிக்கும் பொழுது தாயின் உடலுடன் அனைத்தவாறு இருக்கும் பொழுது பெற்ற வெதுவெதுப்பை நீங்கள் பால் கொடுத்த பின்னர் படுக்கையில் படுக்க வைக்கும் பொழுது பெறுவதில்லை. அந்த வெதுவெதுப்பை பெறுவதற்காகவே அழுகின்றனர்.

**குழந்தை பால் குடிக்க மறுத்தல்**

சில குழந்தைகள் பாலைக்குடிக்க மறுப்பதனாலும் தாய்மார்கள் பால் போதாது என நினைக்கின்றனர். அதற்கும் உண்மையிலேயே பால் போதாமை காரணமில்லை. அதற்குரிய காரணங்கள்.

1 குழந்தையின் உடல் குழந்தைக்கு சௌகரியமாக மார்பகத்துடன் நிலைப்படுத்தப்பட்டிருத்தல்.
2 மார்பகத்தில் சில வேளைகளில் பால் வடிந்து காணப்படும். அதனுடன் அசௌகரியமாக தாயினுடைய வியர்வையும் சேர்வதனால் அசௌகரியமாக குழந்தை உணர்தல்.
3 நீங்கள் குழந்தைக்கு கட்டி பாலை சூப்பியில் கொடுக்கப் பழக்கியிருந்தால். அதன் பின் குழந்தையால் தாய்ப் பால் மறுக்கப்படுகின்றது
4 குழந்தை சிறு நீர் கழித்து உடை ஈரலிப்பாக காணப்படுதல்.
5 தாய்ப் பாலை உறுஞ்சுவதில் ஏற்படும் பிரச்சினைகள். உள்ளே அமிழ்ந்த முளைக்காம்பு முழுமையாக முதிர்ச்சி அடைய முன் பிறந்த குழந்தைகள் போன்றவையாம். எனவே இவ்வாறான பிரச்சினைகளை இனம் கண்டு இவை நிவர்த்தி செய்யப்படும். குழந்தை பாலை குடிக்க தொடங்கும்.

குழந்தைக்கு பொதுவாக தாய் பால் கிடைக்கின்றதா என்பதை அறிந்து கொள்வது எப்படி?

குழந்தைக்கு போதுமான தாய் பால் கிடைக்கின்றதா என்பதை அறிந்து கொள்ளகுழந்தைத் நாளொன்றிற்கு கழிக்கும் சிறுநீர் தொடர்பாக கவனம் செலுத்துதல் முக்கியமானது. முதல் 46மாதம் வரை தாய்ப் பால் மட்டும் பெறும் குழந்தை நாளொன்றிற்கு ஆறு தடைவ சிறு நீர் கழிக்கின்றதாயின் அக் குழந்தைக்கு கிடைக்கின்ற தாய்ப் பால் போதுமானதென விஞ்ஞான ரீதியாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தாய்ப் பால் மட்டுமே பகலிலும் இரவிலும் குடிக்கும் குழுந்தை ஒன்று ஒரு மாதத்தில் 300500 கிராம் வரை நிறை அதிகரிப்பை காட்டுகின்றது.



# திருமணங்களில் அம்மி மிதித்து அருந்ததி பார்ப்பது ஏன்?

ஒரு காலத்தில் பூமியில் வாழ்ந்ததாக கூறப்படும் மிகச்சிறந்த 'பிரம்மரிசிகள் ஏழு பேரும் வானில் நட்சத்திரங்களாக ஒளி வீசுகிறார்கள். ஏழு நட்சத்திரங்களில் ஆறாவதாக இருப்பவர் (நட்சத்திரம்) வசிஷ்டர். இவரின் மனைவிதான் அருந்ததி. வசிஷ்டர் அருந்ததிக்குமான தனிச்சிறப்பு உண்டு. என்னவென்றால் மற்ற ரிஷிகள் சபலத்தால் ரம்பா, மேனகா, ஊர்வசி போன்ற வானதேவதைகளிடம் நிலை தடுமாறியவர்கள். இவர்களின் மனைவிமார்களும் தேவேந்திரனைப் பார்த்து தன்னிலை மறந்தவர்கள். இதில் வசிஷ்டரும், அருந்ததியும் விதிவிலக்கானவர்கள். எனவே அவர்கள் இணைந்தே இருக்கிறார்கள். அவர்களைப் பார்த்து வாழ்க்கையில் இணைபிரியாது வாழவேண்டும் என்பது ஒரு புராணக்கதை, இனி விஞ்ஞானப்படி......

இரவு நேரத்தில் வடக்கு வானில் மிக எளிதாக அடையாளம் காணக்கூடிய நட்சத்திரக் கூட்டங்களில்ஒன்று சப்தரிசி மண்டலம்'.இந்த நட்சத்திரத் தொகுதிக்கு (தொகுதி என்பது நம் கண்களுக்கு தொகுப்பாக தெரிகிறது என்பதால் மட்டுமே. உண்மையில் இவை ஒவ்வொன்றும் வெவ்வேறு தொலைவுகளில் உள்ளவை) ஒவ்வொரு நாட்டிலும் வேறுவேறு பெயர்கள் உண்டு. உலகத்தின் ஒவ்வொரு பகுதியிலும் வெவ்வேறான வடிவங்களில் தெரிவதால் பெரும்கரண்டி, கலப்பை என மேலைநாடுகளில் அழைப்பர். இந்தியாவில் பொதுவாக இதனை சப்தரிசி (ஏழு முனிவர்கள்)என அழைக்கின்றனர். இதில் உள்ள ஏழு நட்சத்திரங்களுக்கும் இந்தியாவில் ஏழு முனிவர்களின் பெயர்கள் உண்டு. அவை கிரது, புலஹ, புலஸ்த்ய, அத்ரி, அங்கிரஸ், வசிஷ்ட, மரீசி என்பனவாகும்.

இந்த ஏழு நட்சத்திரங்களில் ஆறாவதாக உள்ள வசிஷ்ட நட்சத்திரத்தின் அருகில் சற்று கூர்ந்து கவனித்தால் மங்கலான வெளிச்சத்தில் தெரிவதுதான் அருந்ததி நட்சத்திரம். இவை இரண்டுக்குமான விஞ்ஞானப் பெயரும் உண்டு. வசிஷ்ட நட்சத்திரம் மிஸார் எனவும், அருந்ததி அல்கோர் எனவும் அழைக்கப்படுகிறது. வசிஷ்டரும், அருந்ததியும் இரட்டை நட்சத்திரங்கள் அல்ல. ஆனால் ஒவ்வொன்றும் தனித்தனியே இரட்டை நட்சத்திரங்கள். அதிலும் மிஸார் என அழைக்கப்படும் வசிஷ்ட நட்சத்திரம் தான் வானவியல் வரலாற்றில் முதலில் கண்டுபிடிக்கப்பட்ட இரட்டை நட்சத்திரம். 35,000 மில்லியன் மைல்கள் இடைவெளியில் மிஸார்_எ, மிஸார்_பி என்ற இருநட்சத்திரங்களும் ஒற்றை ஒன்று சுற்றிக் கொள்கின்றன.

சப்தரிசி மண்டலத்தில் உள்ள ஏழு நட்சத்திரங்களும் ஒரே தன்மை உள்ளவை அல்ல. துபே, அல்கெய்ட், மிஸார் மேராக், ஃபெக்டா, மெக்ரஸ்,வரிசையில் ஒன்றைவிட ஒன்று மங்கலானது. துபே சற்று ஆரஞ்சு நிறம் கொண்ட 5000 டிகிரி செல்சியஸ் வெப்பம் கொண்டதாகும். மற்றவை வெண்மை நிறமுடைய 18,000 டிகிரிக்கும் மேலான வெப்பம் உள்ளவை. சப்தரிசி மண்டலத்தில் உள்ள ஒவ்வொருநட்சத்திரமும் வெவ்வேறான திசைகளில் அதிவேகமாக பயணம் செய்கின்றன. அதனால் சப்தரிசி மண்டலம் தற்போதுள்ள தோற்றத்தில் ஒருலட்சம் ஆண்டுகளுக்கு முன்னிருந்ததில்லை. ஒரு லட்சம் ஆண்டுகளுக்கு பின் தற்போதைய தோற்றத்தில் இருக்கபோவதில்லை.(படம் 1ல் சப்தரிசிமண்டலத்தின் மூன்று நிலைகளும் காட்டப்பட்டுள்ளது. முதல் நிலை 1லட்சம் ஆண்களுக்கு முந்தையது, நடுவில் இருப்பது தற்போதைய நிலை, அடுத்ததாக இருப்பது 1லட்சம் ஆண்டுகளுக்கு பின் ஏற்படப் போகும் நிலை)

சப்தரிசி மண்டலத்தின் முதல் இரண்டாவது நட்சத்திரமான துபே, மெராக்கும் காட்டிகள்' என அழைக்கப்படுகின்றன. ஏன் என்றால் இந்த இரு நட்சத்திரங்களிலிருந்து அமையும் கற்பனைக்கோடு தற்போதுள்ள துருவ நட்சத்திரமான போலாரிஸ்க்கை காட்டும். (இதற்கான விளக்கப் படம் 2) பூமியின் தற்சுழற்சி அச்சு தற்போது இதனை நோக்கித் தான் அமைந்துள்ளது. இதனால் மற்ற நட்சத்திரங்கள் பூமியின் நகர்வுக்கு ஏற்ப இடம்மாறினாலும் துருவநட்சத்திரம் ஒரே இடத்தில் தான் இருக்கும்.

அருந்ததி ஒரு குறியீடு. முற்காலங்களில் அரசர்களுக்கு ஆயிரக்கணக்கான மனைவிகள் (தசரதனுக்கு 60 ஆயிரம் மனைவிகள்) இருந்தாக புராணங்கள் கதை கூறுகின்றன. இது தவிர போரின் வெற்றியாக பிறன்மனைவி கவர்தல் (எதிரியின் மனைவியை கவர்ந்து வருதல்) என்பதை சங்ககாலப் பாடல்களில் கூறப்படும் செய்தி. அருந்ததியைப் பார்க்கும் பழக்கம் எப்பொழுது ஏற்பட்டது என்பது தனியான ஆய்வுக்குரியது. ராமாயணத்தில் ராமனும், சீதையும் லட்சிய தம்பதிகளாக சொல்லப்படும் கதையும், சிலப்பதிகாரத்தில் முறைதவறிய கணவனை திருத்தி கணவனுக்காக மதுரையை எரித்த கண்ணகி, கோவலன் கதைகளும் ஒருவனுக்கு ஒருத்தி என்ற நியதியை நிலைநாட்டுவதற்காக வரலாறு நெடுக தனிச்சொத்துடமை கருத்தாக்கத்தை உருவாக்க சொல்லப்பட்டு வரும் கதைகளாகும்.

திருமணத்தின் போது நல்லநாள், நட்சத்திரங்களின் பொருத்தம், ஜாதகப்பெருத்தம் பார்பதைவிட தம்பதிகளின் மனப்பொருத்தம், மருத்துவ ரீதியான சோதனைகள் பார்ப்பது தம்பதிகளின் எதிர்கால வாழ்க்கைக்கு நல்லது.

### வான் வாடகைக்கு
அகில இலங்கை சுற்றுலா, போக்குவரத்து வான் வாடகைக்கு உண்டு. **L.K. Net Work**
**Tel : 077 022 2232 | 077 0222260**

### கணினி திருத்தும்
உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகிறோம். **Guna Best Pc**
**Tel : 077 908 6737**

### பணிப்பெண் தேவை
வீட்டில் தங்கியிருந்து வேலை செய்யக் கூடிய வீட்டுப்பணிப் பெண் தேவை.
**Tel : 077 509 5492**

### காணி விற்பனைக்கு
மானிப்பாய் கனகசபை வீதியில் செல்லமுத்து விளையாட்டு மைதானத்திற்கு அருகில் அமைந்துள்ள 10 பரப்புக் காணி உடன் விற்பனைக்கு.
**Tel : 076 638 5626**

### காணி விற்பனைக்கு
முத்திரைச்சந்தி, கல்விக்கந்தோர் அருகில் செல்வர் வீதியில் 7 பரப்பு காணி முழுவதும், பிரித்தும் 2½, 2½, 2 பரப்புகளாக பிரித்தும் கொடுக்கப்படும். விலை பரப்பு 15 லட்சம்.
**Tel : 077 650 8376**

### இணைய விளம்பரத்திற்கு
இணைய விளம்பரத்திற்கு,
**Tel : 077 077 0106**
**E-mail : sales@lankaadz.com**

### திருமண சேவை
வரன் தேடுகிறீர்களா? இலவசமாக பதிவு செய்து கொள்ளுங்கள்,

ராஜீ திருமண சேவை
சிவன் வீதி, ஆவரங்கால் மேற்கு, புத்தூர்.

இணையத்தில் பதிவு செய்திட:
**Tel : 021 222 4662**

தமிழர்களின் நம்பிக்கை பெற்ற வெற்றிகரமான திருமண இணையத்தளம்
**www.jaffnamatrimony.com**

### நீங்களும் எழுதலாம்
வரலாற்றில் முதன் முறையாக 'திராவிடம்' என்னும் சிற்றிதழ் வருகைதர இருக்கிறது. அதற்கு உங்களிடம் இருந்து ஆக்கபூர்வமான எழுத்துக்கள் வரவேற்கப்படுகின்றன.

பாடசாலை, பல்கலைக்கழக இளையோரிற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

ஆசிரியர் ச. திருச்செந்தூரன்
**Tel : 077 050 7391**

### கார் வாடகைக்கு
திருமண கார் வாடகைக்கு உண்டு.
**Tel : 077 248 7234**


# ஊருக்கு ஒரு நாயகி



சுட்டு
chuddu.deepam@gmail.com



வவுனியாவில் பெற்றோரை இழந்த மாணவி க.பொ.த சாதாரணதரத்தில் ஒன்பது பாடங்களிலும் அதிவிசேட சித்தியெய்தினார் என அண்மையில் ஊடகங்களில் ஒரு செய்தி வெளியானது. வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் ஒன்பது பாடங்களிலும் அதிவிசேட சித்தியெய்திய ஒரே மாணவியும் இவர்தான் என்றன. ஆனால் இந்த செய்தியில் உண்மையில்லை என்கிறார் அந்த மாணவி. ஊடகங்கள் கற்பனையில் செய்தி வெளியிடுவதாக கொதித்த மாணவி சுலக்சனாவுடனான ஒரு நேர்காணல் இது.

வவுனியா புதுக்குளம் மகாவித்தியாலயத்திலிருந்து சிறந்த பெறுபேற்றை பெற்றவர் ம.சுலக்சனா. வவுனியா வடக்கு கல்வி வலயத்திலேயே இவர் ஒருவர்தான் அதிவிசேட பெறுபேற்றை பெற்றவர் என்றால் சாதாரண விடயமா?... அவரது வீட்டுக்கே சென்றோம்.

உற்சாகமாக வரவேற்ற சுலக்சனா, சரளமாக பேச ஆரம்பித்தார். 'நான் திட்டமிட்டு படிக்கவில்லை. சாதாரணமாகத்தான் படித்தேன். ரிசல்ட் பற்றிய எதிர்பார்ப்பு, பரபரப்பு ஒன்றுமிருக்கவில்லை. பாடசாலை. அதை விட்டால் இரண்டு பாடங்களிற்கு மட்டும் பிரத்தியேக வகுப்பு செல்வேன்' என்றார் சுலக்சனா.

'காலையில் ஐந்து மணிக்கு எழுந்து படிப்பேன். இரவில் அதிகம் விழித்திருக்க மாட்டன். 9.30 ஆனாலே தூக்கிவிழத் தொடங்கிவிடுவேன். படிக்கும்போது எனது அண்ணாக்களுடன் இருந்து படிப்பேன். பகிடியாகவும், தெரியாத விசயங்களை ஒருவருக்கொருவர் விளங்கப்படுத்தியும் கற்றுக் கொள்வோம். பாடசாலை ஆசிரியர்கள்தான் நிறைய ஊக்கம் தந்தனர். பெறுபேறு வெளியான போது என்னால் நம்ப முடியாமல் இருந்தது. எனது நண்பிகளும் முதலில் நம்பவில்லை. அவநம்பிக்கையாகத்தான் கேட்டார்கள். ஆனால், நான் பாஸாயிட்டன்' என சிரித்தார்.



இதற்குள் ஊடகங்களில் வெளியான செய்தியை பற்றியும் கொதித்தார். 'நான் பெற்றோர் இல்லாத பிள்ளையென ஊடகங்களில் செய்தி வந்தது. அது பொய். என் அம்மா அவுஸ்திரேலியாவில் தொழில்புரிகிறார். செய்திகளில் வந்ததை போல வறுமைக்கோட்டிற்குட்பட்ட குடும்பமுமல்ல. இந்த செய்திகளால் எங்கள் குடும்பத்தில் எல்லோருக்கும் பெரிய அதிர்ச்சி' என்றார்.

உயர்தரத்திலும் சிறப்பாக தேறி எதிர்காலத்தில் வைத்தியர் ஆவதுதான் தனது இலட்சியம் என நம்பிக்கையுடன் பேசிய சுலக்சனாவிற்கு தீபத்தின் வாழ்த்துக்களை கூறி விடை பெற்றோம்.




மன்னார் திருக்கேதீச்சரம் ஆலயத்தில் இந்திய அரசின் நிதி உதவியுடன் இடம் பெற்று வரும் ஆலயத்தின் உட்பிரகாரத்தில் கருங்கல் பொருத்தும் வேலைகள் கடந்த வாரம் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்,யாழ் இந்திய துணைத்தூதுவராலயத்தின் துணை உயர்ஸ்தானிகர் ஏ.நடராஜன் ஆகியோர் இணைந்து அடிக்கல்லினை நாட்டி ஆலயத்தின் உட்பிரகார மண்டபத்திருத்தப்பணியின் கருங்கல் பொருத்தும் வேலைகளினை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தனர்.



# தேங்காய் ரெசிபி

ஜே.சத்தியேந்திரன்
தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர், கிளிநொச்சி
0775056263







### தேங்காய் தொதல் தயாரித்தல்

40 துண்டுகள் (2X2)

**தேவையான பொருட்கள்**

- அரிசி மா 2 சுண்டு(அரிசியில் இடித்தமா)
- சீனி 1/2 லீரீ
- சர்க்கரை 1/2 லீரீ
- தேங்காய் 4
- சவ்வரிசி 50ரீ(2மே.கரண்டி( நிரப்பி)
- ஏலப்பொடி 1 தே.கரண்டி
- தண்ணீர் 9 தம்ளர்
- உப்புத்தூள் 2 சிட்டிகை
- வறுத்த பயறு 50ரீ
- வறுத்த கச்சான் முத்து 100ரீ

1 ஒரு சுண்டு அரிசியை மூன்று மணி நேரம் ஊறவத்து இடித்து அரிந்து இரண்டு சுண்டுமாவை எடுத்துக்கொள்க.

2 தேங்காயைத்துருவி பெரியபாத்திரத்திலிட்டு 9 தம்ளர் தண்ணீரில் அளவாகத் தண்ணீர் விட்டுப் பிழிந்து 4 த்ம்ளர் முதல் பாலும், 6 தம்ளர் இரண்டாம், மூன்றாம் பாலும் எடுத்து வைத்துக் கொள்க.

3 பின்பு 6 தம்ளர் 2ம், 3ம் பாலில் சர்க்கரை, சீனி, அரிசி மா, உப்புத்தூள் என்பவற்றைப் போட்டு சர்க்கரை நன்கு கரையும் வரை கரைத்துக் கொள்க. (சர்க்கரையைச் சீவிப் பாலில் கரைத்து வடிகட்டியபின் மாவையும் சீனியையும் போட்டுக்கரைத்தல் சிறந்த்தாகும்.)

4 பின்பு இக்கலவையை அடுப்பில் வைத்து இடைவிடாது காய்சிக் கொண்டிருக்கவும்.

5 கய்ச்சும் போது கலவை ஓரளவு தடித்து சட்டியில் ஒட்டும் பதத்தை அடையத்தொடங்கியதும் முதற்பாலை விட்டுக் கரண்டியால் அடிப்பிடிக்கா வண்ணம் இடைவிடாது கிளறிக் கலவை முளுவதுமாகக் கிளறத்தொடங்கும் போது ஏலப்பொடி,பயறு கச்சான் என்பவற்றைப் போட்டுச் சேர்த்து எண்ணெய்ய மிகுத யாகப் பெருகுமாயின் கரண்டியால் இயலுமானவரை அள்ளியெடுத்த பின் சட்டியை அடுப்பிலிருந்து இற்க்கிக் கொள்க.

6 பின்பு சதுர வடிவான தட்டிநில் இக்கலவையைக் கொட்டி தட்டையான் அடிப்பாகமுள்ள பாத்திரத்தால் 2" தடிப்பாக இருக்கும் வண்ணம் அழுத்திப்பரவி 3cm சதுர அளவான துண்டுகளாக வெட்டிப்பரிமாறவும்.

### தேங்காய்ப்பூ கேக் தயாரியத்தல்

50_50 துண்டுகள்

**தேவையான பொருட்கள்**

கோதுமை மா 1/2கி.கிராம்
மாஜரின் 1/2கி.கிராம்
சீனி 1/2கி.கிராம்
முட்டை 10
தேங்காய் பாதி
வனிலா 2 மேசை கரண்டி
பிளம்ஸ் 100கிராம்
வெட்டிய கஜூ 50கிராம்

**செய்முறை**

தேங்காயை துருவி வெயிலில் நன்றாகக் காயவைத்து எடுத்துக் கொள்க.

மாவுடன் பேக்கிங்பவுடர் 5 முறை அரித்து வைத்துக்கொள்க.

பாத்திரத்தில் மாஜரினைப் போட்டுச் சீனியும் சேர்த்து சீனி கரையும் வரை நன்றாக அடித்துகொள்க.

முட்டையை தனியாக பாத்திரத்தில் உடைத்து விட்டு வனிலாவும் சேர்த்து நுரை பொங்கும் வண்ணம் அடித்து இந்நுரையை மட்டும் அடித்து வைத்துள்ள மாஜரீன் கலவையில் சிறிது சிறிதாக விட்டுமுழுவதுமாக சேர்த்துக்கொண்ட பின்பு மாவைச் சிறிது சிறிதாக தூவி முழுவதுமாகச் சேர்த்து கலந்து பிளம்ஸ் கஜீ என்பவற்றையும் கலந்து கொண்ட பின்பு மாஜரின் பூசிய தட்டிலூற்றி பரவி பேக் செய்து ஆறிய பின்பு துண்டுகளாக வெட்டி எடுத்து பரிமாறலாம்.

### தேங்காய் பால் ரொபி தயாரித்தல்

**தேவையான பொருட்கள்**

தடித்த தேங்காய்ப்பால் 500 மி.லீ
கச்சான் முத்து 100கிராம்
சீனி 400கிராம்

**செய்முறை**

ஒரு பாத்திரத்தில் மேற்குறிப்பிட்டளவு பால், கச்சான் துகள்கள், சீனி, ஜகரி, ஜஸ்சிங் ஆகியவற்றை இட்டு அடுப்பில் வைத்து சூடாக்கவும் சூடேறியவரை கிளரிக்கொண்டிருக்கவும் குறித்த பதத்தில் தடிப்படைந்து வந்ததும் ஏலக்காய் பவுடரை சேர்த்து கிளறவும்

பின்பு அப்பாத்த்ரத்தினை குளிர்ந்த தண்ணீர் உள்ள இன்னோர் பாத்திரத்துனுள் வைக்கவும் பதமானதும் உடனே சிறு சிறு சதுர துண்டுகளாக வெட்டி பரிமாறலாம்.





க.பொ.த சாதாரணதர முடிவுகளில் மட்டக்களப்பு கல்வி வலயத்தின் வின்சன்ட் மகளிர் கல்லூரியின் 26 மாணவிகள் 9 ஏ சித்தி பெற்றுள்ளனர்.





மண்முனை தென்மேற்கு பிரதேசத்தில் தையல் தொழிலை மேற்கொள்ளும் பெண்களில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான ஐந்து நாள் பயிற்சி வகுப்புக்கள் முனைக்காடு உக்டா சமூகவளநிலையத்தில் அண்மையில் இடம்பெற்றது. இதில் 26பெண்கள் கலந்து கொண்டு பயிற்சியை பெற்றனர்.

# தோமஸ் அல்வா எடிசன்



காது கேட்காதவன், மனநலம் பாதிக்கப்பட்டவன் என்று பள்ளியில் இருந்தே துரத்தப்பட்டவர் இன்று ஓர் விஞ்ஞானியாக. ஆம் மக்களே ஒலிபெருக்கி, தந்திக்கருவி, மின்சார விளக்கு, மின்சார இயந்திரம், மின்சார இருப்புப் பாதை, தொலைபேசி, கிராமபோன், திரைப்பட ஒளிப்பதிவுக் கருவி(காமிரா) என மலைக்க வைக்கும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட அறிவியல் படைப்புகளை படைத்தவர் . கடவுளல்ல சிறுவயதில் 'மக்கு' என்று பள்ளியிலிருந்து வெளியேற்றப்பட்ட படைப்பாளி.

ஒரு சாதாரண தச்சுத் தொழிலாளிக்கும், ஓர் ஆசிரியைக்கும் பிறந்த ஏழு குழந்தைகளில் கடைக்குட்டியாக பிப்ரவரி மாதம் 11 ம் தேதி 1847ல் அமெரிக்காவிலுள்ள 'மிலன்' எனும் ஊரில் பிறந்தவர். 'எதற்கும் உதவாதவன்' என்று பள்ளியிலிருந்து துரத்தப்பட்டு தன் தாயாரிடமே அடிப்படைக் கல்வியை கற்றார். தன பதிமூன்றாவது அகவையில் கிராண்ட் டிரங்க்தொடர்வண்டி சாலையில்செய்தித்தாள் போடும் பையனாக சேர்ந்தவர், அங்குள்ள சரக்கு ஏற்றும் பெட்டியை வேதியியல் சோதனைச்சாலையாக மாற்றியும், அங்கேயே ஒரு அச்சகத்தை தன தந்தையின் உதவியால் நிறுவி 'கிரான்ட் டிரங்க் ஹெரல்ட்' என்ற பத்திரிகையையும் வெளியிட்டு வந்தார். சோதனைச் சாலையில் பற்றிய 'தீ' அவர் செயற்கூடத்தை நாசமாக்கவே அமெரிக்காவில் எங்கெல்லாம் 'தந்தி செயலி' வேலை கிடைக்கிறதோ அங்கெல்லாம் ஓடோடி வேலை செய்தும் தன் சோதனை முயற்சிகளையும் விடாமல் தொடர்ந்து கொண்டிருந்தார். பின்னர் போஸ்டனிலுள்ள 'வெஸ்டர்ன் பண மாற்று' அலுவலக பணியையும் மறுத்து விட்டு முழு நேர ஆராய்ச்சியில் ஈடுபட்டார் .

இன்னும் கொஞ்சம் சொன்னால் அட இவரா என்று கேட்பீர்கள். தன் முதல் கண்டுப்பிடிப்பான 'மின்சார வாக்குப்பதிவு' இயந்திரத்திக்கு 1869ம் ஆண்டு காப்புரிமை கிடைத்தும் அரசியல் வாதிகள் அதை செயற்படுத்த விருப வில்லை. இதை எண்ணிப் பார்த்த எடிசன் 'மக்களுக்கு வேண்டாத பொருட்களை கண்டுப்பிடிப்பதில் நேரத்தை வீணாக்கக் கூடாது' என மக்கள் எதிர்காலத்தில் பயன் படுத்தக்கூடிய சாதனங்களைக் கண்டறிந்தார். தன் கண்டுப்பிடிப்புகளுக்கு காப்புரிமை, வழக்குகள் என அனைத்தையும் எதிர்நின்று சாதித்தார் . அவர் வேறு யாரும் இல்லை தோமஸ் அல்வா எடிசன்.;

இதன் இடைவெளிகளில் அவர் மணமுடிக்கவே அவருக்குப் பிறந்த இரு குழந்தைகளுக்கும் 'டாட்,டாஷ்' என தந்தி சங்கேத மொழியிலேயே செல்லப் பெயரிட்டார்.

சினிமா, புகைப்படக் கலை வளர்ச்சிக்கு எடிசன் தான் முழுமுதற் உழைப்பாளி என்றால் அது மிகையாகாது. ஆம் ஒளிப்பதிவுக் கருவியையும், பேச்சு வரும் கைநெட்டோபோன் கருவியையும் எடிசனே கண்டறிந்தார்.

எடிசன் கண்டுப்பிடிப்புகளின் நினைவாக அவரது நெருங்கிய நண்பர் 'ஹென்றி போர்ட்' அவரது 'சோதனைச்சாலையை' அருங்கட்சியகமாகவே மாற்றி அமைத்தார்.வாழ்வின் இறுதி நாட்களில் சுயநினைவற்ற கோமா நிலையில் இருக்கும்போதே எடிசனின் உயிர் 1931ம் ஆண்டு அக்டோபர் 18ம் தேதி நியூ ஜெர்சியிலுள்ள 'க்லேன்மொன்ட்' எனப்படும் அவர் இல்லத்தில் பிரிந்தது.

அண்டம் கடவுளால் தான் உருவாகிறது என்பதை பொய்ப்பித்துக்காட்டி விஞ்ஞானத்திலே இவ்வுலகம் சுழல்கிறது என்று நிரூபித்தவர் தாமஸ் ஆல்வா எடிசன். 'முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்' என்ற தன்னம்பிக்கை வரிகளுக்கு சான்றாக வெற்றிக்கான ஆன்ம பலத்தோடு வாழ்ந்து சாதித்தவர் எடிசன்!



## Hard ware

Hard ware are the parts of a computer system that can be touched and seen. Some hardware components of a computer system keyboard, cpu(central processing unit),monitor, printer, speaker, mouse, etc.

**Key board**

The keyboard is like a typewriter but it has some extra keys. These keys make the computer perform some special tasks.

**Mouse**

mouse enables us to move the cursor and take it to a place anywhere on the screen .it also helps us to click on instruction working with a mouse is faster than using a keyboard.

**Monitor**

Monitor is the face of computer. Computer monitors are designed to give a high quality pictures so that words can be read from the screen without causing eye –strain.

## காட் வெயார்

**(கணணியின் தொட்டுனரும் பகுதிகள்)**

காட்வெயார் எனப்படுவது தொட முடிந்ததும் பார்க்க கூடியதுமான கணணியின் ஒழுங்கு படுத்தபட்ட பகுதிகளாகும்.கணணியின் ஒழுங்கு படுத்தப்பட்ட காட்வெயாரின் கூறுகள் வருமாறு. விசைப்பலகை திரை மத்திய செயற்பாட்டுப் பகுதி ஒலிபெருக்கி சுட்டும் கருவி.

**விசைப்பலகை**

இந்த விசைப்பலகை தட்டச்சு போன்று காணப்படும். அது சில மேலதிக சாவிகளை கொண்டு காணப்படும். இந்த சாவிகள் கணணியின் சில விசேடமான செயற்பாடுகளை மேற்கொள்கின்றன.

**சுட்டும் கருவி**

இச் சுட்டும் கருவி திரையில் எங்கும் அசையக் கூடிய தன்மை கொண்டது. இதனால் கிளிக் செய்வதன் மூலம் தகவல்களைப் பெற்று எமது வேலைகளை செய்ய முடியும். விசைப்பலகையை விட இது வேகமானது.

**திரை**

இது கணணியின் முகம் எனப்படும் இத்திரையானது பல வடிவங்களையுடைய உயர்ந்த தொழில் நுட்ப தன்மையுடைய படங்களை தரக்கூடியது. ஆகவே இத்திரையில்லாமல் நாம் எதையும் பார்க்க முடியாது.




## அறிவுக்கு சில...



உலகில் உள்ள ஆயிரத்து இருநூற்றுக்கு மேற்பட்ட தால இன மரங்களில் இந்தியாவிலும் இலங்கையிலும் வளரும் நான்கு வகையான பனைசார்ந்த குடும்ப இனத்தை பாம்மரங்கள் எனக் குறிப்பிடுவர். அவையாவன.

**தாலக் குடும்பம்**

பனை - palmyrah
தென்னை - coconut
ஈந்து - date phoenix silvestris
கூந்தல் பனை - sago

ஆகிய மரங்களாகும். இவை ஒரு வித்திலைத் தாவர வகையாகும். 1913ம் ஆண்டு பனையினங்கள் 7வகையாக ஆய்வாளர் திரு.பெக்கறி என்பவரால் வகுக்கப்பட்டன.

Borassus flabellifer - இந்தியா, இலங்கை, மலாயன்
Borassus Thiopicum - ஆபிரிக்கா
Borassus Deleg - சூடான்
Borassus Heiniana - நியூகினியா
Borassus Madagascariensis - மடகஸ்கார்
Borassus Sambiranensis - மடகஸ்கார்
Borassus Machadonis - மலேசியா இந்தோனேசியா.



## கொடுத்துப் பெறுதல்

ஒரு புத்த மடாலயத் தலைவர் மிகவும் கவலையில் இருந்தார். ஒரு காலத்தில் அவரது மடாலயம் அந்தப் பகுதியிலேயே சிறப்பும் மதிப்பும் பெற்று விளங்கிய ஆலயம். தற்போது மதிப்புக் குறைந்து பாதாளத்திற்குப் போய்க் கொண்டிருந்தது அவருக்குத் தெளிவாக விளங்கியது. மடத்தின் உள்ளேயே பிக்ஷுக்கள் யாரும் ஒருவரை ஒருவர் மதிக்காமல் தன்னிச்சையாகச் செயல் பட்டுக் கொண்டிருந்தார்கள்.

பொறுக்க இயலாமல் ஒரு நாள் நம் தலைவர் தன்னை விட அனுபவத்தில் சிறந்த ஒரு குருவைத் தேடிப் போனார். தன் பிரச்சினையை எடுத்துச் சொன்னார்.

அந்தக் குருவும் சற்று நேரம் ஆழ்ந்து யோசித்து விட்டு பிறகு 'உங்கள் மடத்தில் புத்தரே வந்து தங்கியிருக்கிறார். நீங்கள் எவரும் அவரைக் கண்டு கொள்ளவும் இல்லை. மதிக்கவும் இல்லை. பின் எப்படி சிறப்பு செழிக்கும்?' என்று கேட்டார்.

இதைக் கேட்ட நம் தலைவர் வியப்பு மாறாமலே மடத்திற்குத் திரும்ப வந்து அங்கே இருந்த புத்த பிக்ஷுக்களுக்கு விபரம் சொன்னார். அவர்களுக்கும் ஆச்சரியம். அந்தக் கணத்தில் இருந்து சுற்றியிருப்பவர்களில் ஒருவர் கடவுளாக இருக்கக் கூடும் என்ற அனுமானத்தில் எல்லோரையும் பணிவாகவும்இ அன்பாகவும், மிகுந்த மரியாதையுடனும் ஒவ்வொருவரும் அணுகினார்கள். நாளடைவில் மடத்தின் சிறப்பு பல மடங்கு உயர்ந்து போனது என்பதைச் சொல்லத் தேவையே இல்லை! கூடிச் செயல் படும் போது கொடுத்துப் பெறுதல் அவசியமான ஒரு சூட்சுமம் ஆகும்.



**அன்பான மாணவ, மாணவியரே...உங்கள் ஆக்கங்கள் எதுவானாலும் தீபத்தின் மாணவர் பூங்காவிற்கு அனுப்பி வையுங்கள். உங்கள் முகவரி, பாடசாலை, உங்கள் புகைப்படங்களுடன் அனுப்பி வையுங்கள்.**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 1 | 5 | 4 | 2 | 3 | 6 | 9 | 7 |
| 9 | 4 | 7 | 8 | 6 | 1 | 3 | 2 | 5 |
| 3 | 2 | 6 | 9 | 7 | 5 | 8 | 1 | 4 |
| 1 | 9 | 4 | 5 | 3 | 6 | 7 | 8 | 2 |
| 5 | 6 | 2 | 7 | 1 | 8 | 9 | 4 | 3 |
| 7 | 3 | 8 | 2 | 4 | 9 | 1 | 5 | 6 |
| 2 | 7 | 1 | 6 | 9 | 4 | 5 | 3 | 8 |
| 6 | 5 | 9 | 3 | 8 | 2 | 4 | 7 | 1 |
| 4 | 8 | 3 | 1 | 5 | 7 | 2 | 6 | 9 |

கடந்தவார சுடோக் விடைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 3 | | | | |
| | 4 | | | | | 8 | | |
| | | | | | | | | |
| | | | | | 6 | | | |
| | | 3 | | | | | | |
| | | | | | | | 1 | |
| | | | | | | | | |
| 6 | | | | | | | | |
| | | | 5 | | | | | 9 |

இவ்வாரத்திற்கு இவ்வார சுடோக்

சுட்டு
chuddu.deepam@gmail.com

# வீடென்பது பிரியங்கள் சமைக்கின்ற கூடு



வீடென்பது வெறும் வீடல்ல. 'வீடென்பது பிரியங்கள் சமைக்கின்ற கூடு' என த.அகிலன் எழுதிய கவிதை வெகு பிரபல்யம். இரு இனத்தின் கலாசாரம், பண்பாடு, கலை என்பவற்றுடன் வீடும் தொடர்புபட்டது. வீட்டுடன், வீட்டு அமைப்புடன் வாழ்க்கை முறை ஏதோ ஒருவிதத்தில் தொடர்புபட்டதாக இருக்கும்.

பாதுகாப்பு, சீதோஷ்ணநிலை உள்ளிட்ட பல்வேறு விடயங்களிற்கும் ஏற்றவிதத்தில் வீடுகள் வடிவம் கொண்டன. நமது வீட்டு வாழ்க்கைமுறையை அவ்வளவு சுலபமாக யாராலும் கடந்து செல்ல முடியாது.

வீட்டின் வடிவம் மாறுவதென்பது வாழ்க்கையின் வடிவம் மாறுவதைப் போன்றது. அதுதான் இப்பொழுது சர்ச்சை. மீள்குடியேற்ற அமைச்சு வடக்கு, கிழக்கு பகுதிகளில் அமைக்க திட்டமிட்டுள்ள அறுபத்தைந்தாயிரம் வீடுகள் பெரும் சர்ச்சையில் சிக்கியுள்ளன. வீட்டுத்திட்டத்திற்கு ஆதரவாக அரசதரப்பிலிருந்து குரல்கள் வந்தாலும், பல்வேறு தரப்பிலிருந்து எதிர்க்குரல்கள்தான் எழுகிறது.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்ட பொருத்து வீடு ஒன்று பெரும் பிரசாரத்தின் மத்தியில் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டது. ஜனாதிபதி, மீள்குடியேற்ற அமைச்சர் என்பவர்களால் கையளிக்கப்பட்ட வீடு ஊடகங்களின் கவனத்தை பெற்றது. குறிப்பாக சமூக வலைத்தளங்கள், இணையத்தளங்களில் அதிக விவாதப் பொருளாகின. அங்கிருந்துதான் இந்த சர்ச்சை அச்சு ஊடகங்கள் மற்றும் அரசியல்வாதிகளிடம் சென்றது. அதன் பின்னர் பெரும்பாலான கட்சிகள், அரசியல்வாதிகள் இது பற்றி பேசிவிட்டனர்.



'புளக் ஹவுஸ்' என இந்த வகையான வீடுகள் அழைக்கப்படுகின்றன. 250 சதுரஅடியில் கொங்கிறீட்தளமமைக்கப்பட்டு, இரண்டு பக்கமும் தகரமும், நடுவில் வன்மையான றெஜிபோமும் கொண்டு உருவாக்கப்பட்ட செவ்வக அட்டைகளை கொண்டு வீடு உருவாக்கப்படுகிறது. இது தீயில் உருகுமே தவிர, பற்றியெறியாது. யாழ் திட்டமொன்றின் பொறுப்பான பொறியியளாலர் சேங் வோங் (சீனா) எமது செய்தியாளர்களிற்கு லைற்றரினால் தீமூட்டி அதை உறுதி செய்து காட்டினார்.

சீன நிறுவனங்களின் அதிகவரவின் பின்னர் இலங்கையின் சில இடங்களில் முளைத்துள்ள பொருத்து வீடுகளே இவை. இலங்கையில் இதுவரை முன்னெடுக்கப்பட்ட வீட்டுத்திட்டங்கள் அனைத்தும், பாரம்பரிய வீட்டு அமைப்புமுறையை பின்பற்றியவைதான். பெரிய மாறுதல்களை செய்ததில்லை. இப்பொழுதுதான் அதிரடியான மாற்றம் நிகழ்ந்துள்ளது.

2013 – 2015 வரையான வீட்டுத்திட்ட பயனாளிகள் மத்தியில் நடந்த ஆய்வில் சில முக்கிய தகவல்கள் வெளியாகின.

550,000 ரூபா பெறுமதியான வீட்டுத்திட்ட பயனாளிகளில் நடத்தப்பட்ட ஆய்வில், முதற்கட்டத்தில் 2 பயனாளிகள் மட்டுமே ஒரு மில்லியனிற்கும் அதிகமாக பயம் செலவிட்டு வீடுகளை புனரமைத்துள்ளனர். இரண்டாம் கட்டத்தில் 3 பயனாளிகள் மட்டுமே ஒரு மில்லியனிற்கும் அதிக பணம் செலவிட்டு வீட்டை புனரமைத்துள்ளனர்.

தற்போதைய வீட்டுதிட்டத்திற்கு மாறாக, சாதாரண வீட்டுத்திட்டங்களின் பெறுமதியில் வீடுகளை அமைத்து, எஞ்சிய பணத்தில் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் முயற்சிகள் செய்யலாமென்ற கருத்தும் எழுந்துள்ளது.

பொருத்துவீடுகள் நமது சூழலுக்கு பொருத்தமற்றவை என்பது பரவலான வாதமாக முன்வைக்கப்படுகிறது. இந்த வீடுகள் இலங்கை போன்ற வெப்ப சீதோஷ்ண நாடுகளிற்கு உகந்ததல்ல என்கிறார்கள். அது தவிர, இந்த வீடுகளில் சமையல்வாயு மட்டும்தான் பயன்படுத்தலாம். தமிழர்களில் பெரும்பாலானவர்கள் பயன்படுத்தும் விறகடுப்பு வீட்டுக்குள் பயன்படுத்த முடியாது.

21 இலட்சம் ரூபா என்ற அதிக பெறுமதி இந்த வீட்டிற்கு எதிரான மக்கள் குரல்களை சற்று தணிய வைத்துள்ளதைப் போல்த்தான் தெரிகிறது. இந்திய வீடமைப்பு திட்டத்தில் வீடொன்றின் பெறுமதி எட்டரை இலட்சம். சமகாலத்தில் நடக்கும் இரண்டு திட்டங்களில் இப்படியான மலை மடு வித்தியாசமிருப்பது பொதுமக்களிடையே சச்சரவுகளை ஏற்படுத்தலாம்.

மீள்குடியேற்ற அமைச்சு முன்னெடுக்கும் இந்த வீடமைப்பு திட்டம் பற்றிய தகவல்கள் எதையும் மாவட்ட செயலகத்தின் அதிகாரிகள் கூட அறிய முடியாமலிருப்பதுதான் அதிர்ச்சியிலும் அதிர்ச்சி. வீட்டுதிட்டம் பற்றிய தகவல்களை அறிவதற்காக மாவட்ட செயலக அதிகாரிகளை தொடர்பு கொண்டால் எல்லோரும் கையை விரித்தார்கள்.

முன்னைய வீடமைப்பு திட்டங்கள் அனைத்தும் பயனாளிகளையும் பங்காளிகளாக கொண்டது. இந்திய, சுவிஸ் வீட்டுத்திட்டங்களில் ஒதுக்கப்பட்ட நிதியை கொண்டு வீட்டை பூரணப்படுத்த முடியாத திண்டாட்டக்கதை எண்ணற்றவர்களிடம் உள்ளது. இந்த திட்டங்களில் ஒதுக்கப்பட்ட நிதியை கொண்டு வீட்டுத்திட்டத்தை பூர்த்தி செய்ய முடியாமல் கடன்வாங்கி வீட்டை பெரிதாக்க முயன்று, கடனாளிகளானவர்கள் அனேகர். வீட்டுத்திட்டங்களால் நடுத்தெருவுக்கு வந்தவர்கள் கதை ஏராளமுள்ளது.

இதனைத்தான் மீள்குடியேற்ற அமைச்சு முக்கிய வாதமாக வைத்திருக்கிறது. சனங்களை கடனாளிகளாக்கும் திட்டங்களை கைவிட்டு, ஒப்பந்தக்காரர்கள் மூலம் வீட்டை பூரணப்படுத்தி சனங்களிடம் கையளிப்பதே தமது திட்டமென்கிறது.

இந்த திட்டத்தில் உள்ள மிகப்பெரிய குறைபாடுகளில் இன்னொன்று, இது உள்ளூர் தொழிலாளர்களை, தொழில்வளங்களை பயன்படுத்தவில்லையென்பது. யுத்தத்தின் பின்னராக மீள்கட்டுமான பணிகள் முதலாளிகளுடனான 'டீல்'களாக இல்லாமல், உள்ளூர் மக்களுடனான பங்களிப்புடன் அமைய வேண்டியது அவசியம். அப்பொழுதுதான் அந்த மக்களின் பொருளாதாரம் மேம்படும். ஆனால் மீள்குடியேற்ற அமைச்சின் இந்த வீட்டுத்திட்டத்தில் உள்ளூர் பணியாளர்கள், உள்ளூர் உற்பத்திகள் பயன்படுத்தப்படுவது அறவே கிடையாது. யாழில் நடக்கும் வீடமைப்பு பணிகளில் வெளிநாட்டு பணியாளர்கள்தான் ஈடுபடுத்தப்படுகிறார்கள். சீனா, போர்த்துக்கல், பிரான்ஸ் நாட்டுக்காரர்கள்தான் பெருமளவில் ஈடுபடுத்தப்படுகிறார்கள்.

இந்த வீடுகளிற்கு தேவையான எந்த உற்பத்தி பொருட்களும் உள்ளூரில் உற்பத்தியாவதில்லை. இதுவும் தொழிற்துறை வளர்ச்சிக்கு ஆபத்தானதுதான். மணல் அள்ளி இயற்கையை சீரழித்து வீடமைப்பு திட்டம் நடக்கவில்லையென்ற சிறிய ஆறுதலை தவிர்த்தால், இந்த திட்டத்தில் பெருமளவில் குறைபாடுகளே உள்ளன.

சாதாரண வீடுகளை விட இவற்றில் வெப்பம் அதிகமாக உள்ளதாக வடக்கு முதல்வர் குற்றம் சுமத்த, மீள்குடியேற்ற அமைச்சர் அதை நிராகரித்துள்ளார். இதை அரசியல்வாதிகளின் மோதலாக மட்டும் பார்க்காமல், இதிலுள்ள உண்மைத்தன்மை கண்டறியப்பட வேண்டும். முறையான ஆய்வு நடத்தி வெப்ப வேறுபாடு உறுதிசெய்யப்பட வேண்டும்.

பிரான்சை மையமாக கொண்ட ஆர்செலோர்மிற்றல் (Arceolar Mittal) என்ற பிரபல்யமான உருக்கு நிறுவனத்திடம் வீடுகளை உருவாக்கும் பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. உருக்கிலான கட்டமைப்புக்கள் மற்றும் ஏற்கனவே தொகுதியாக்கப்பட்ட அமைப்புக்களையும் கொண்டு வீடுகள் அமைக்கப்படுகின்றன. தொலைக்காட்சி, சோலார் உள்ளிட்ட வசதிகளுடன் அமையும் இந்த வீட்டின் பெறுமதி 21 இலட்சம் ரூபா.

வடக்கு, கிழக்கில் 137,000 வீடுகள் அவசரமாக தேவையென புள்ளி விபரங்கள் கூறுகின்றன. இதில் 65,000 வீடுகளை மீள்குடியேற்ற அமைச்சின் இந்த திட்டம் நிறைவு செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது.

மக்கள் நலதிட்டமொன்றை, சர்ச்சைகளின்றி முடிக்கலாமே!







தீபத்தின் இந்த மாபெரும்
பரிசுத்திட்டத்தில் சரியான விடையெழுதி
வெற்றியாளர் ஆகும் வாய்ப்பை இன்றே
உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்...



# தீபத்தின் பரிசு மழை

கேள்வி

**யாழ். நூலகம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது?**

இந்த கூப்பனை வெட்டி நிரப்பி எமது அலுவலக முகவரிக்கு தபாலிலோ அல்லது நிரப்பப்பட்ட கூப்பனை புகைப்படம் எடுத்து facebook/DeepamNews என்ற முகபுத்தகத்தினூடாக எமக்கு அனுப்பவும்.

வெற்றியாளர்கள் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படும்.

பதில் : ..............................

பெயர் : ..............................

முகவரி : ..............................

தொ.பே : ..............................

இல. 21, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 021 221 6633

# தீபத்தின் தமிழ் சிங்கள புதுவருட சிறப்பிதழ்

இன்னும் பல சிறப்பு அம்சங்களுடன்....
10.04.2016 அன்று வெளிவருகின்றது....




## உங்கள் பிரதிக்கு முந்துங்கள்...

உங்கள் விளம்பரங்களை கவர்ச்சிகரமாகவும், சிறந்த வடிவமைப்புடனும்,
பிரசுரித்திட இன்றே தீபம் வார இதழை அணுகுங்கள்...
உங்கள் பணத்திற்கு கைமேல் பயன்தருவது என்றால் அது தீபம் ஊடகம் மட்டுமே...

இன்றே தொடர்பு கொள்ளுங்கள் 021 221 6633
நோர்ச்சி மீடியா (பிறைவேட்) லிமிடெட் 21, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
www.deepam.lk
Hotline : 076 825 5567

இப்பத்திரிகை நோர்சீ மீடியா (பிறைவேற்) லிமிற்ரட் நிறுவனத்தால்
172, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள ஈஸ்வா டிஜிற்றல் பிரஸில் அச்சிட்டு 27.03.2016 அன்று வெளியிடப்பட்டது